உ
துர்க்காதேவி சரணம்

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
(சைவ ஆன்மிக மகளிர் விடுதிச்சாலை)
தெல்லிப்பழை.

# DURGAPURAM MAHALIR ILLAM

## Tellippalai

## 2022

40வது
ஆண்டு நிறைவு
மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

(சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை)

## தெல்லிப்பழை.

# DURGAPURAM MAHALIR ILLAM

(Saiva Aanmeeha Mahalir Hostel)

## Tellippalai

## 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40ஆவது ஆண்டுவிழா சிறப்பு மலர்

## மலர்க்குழு

போஷகர்: **செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்**
தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

கௌரவ ஆலோசகர்: **திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள்**
அதிபர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

### மலர்க்குழு

**செல்வி. சுபாசினி துரைசிங்கம்**
Sabragamuwa University of Sri Lanka.

**செல்வி. றஜிதா செல்வநாதன்**
National Institute of Social Development, Seeduwa.

**செல்வி. ஹரிசாளினி கருணாகரன்**
College of Education, Jaffna.

**செல்வி. ஐஸ்வர்யா இராஜஇராஜேஸ்வரன்**
Sabragamuwa University of Sri Lanka.

**செல்வி. நிருத்திகா ஜீவராசா**
Eastern University of Sri Lanka.


சஞ்சிகை: **துர்க்காபுரம் மகளிர் இல்லம்**
40வது ஆண்டு விழா சிறப்பு மலர் - 2022

பிரதிகளின் எண்ணிக்கை: **300**

அச்சுப்பதிப்பு: **திருமகள் அழுத்தகம், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.**
**தொ.இல. : 021 224 4510**

வெளியீடு: **நிர்வாகசபை,**
**துர்க்காபுரம் மகளிர் இல்லம்,**
(சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை)
**தெல்லிப்பழை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள்



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இல்ல ஸ்தாபகர்



தெய்வத்திருமகள்

சிவத்தமிழ்ச்செல்வி

## கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி

(07.01.1925 - 15.06.2008)

ஸ்தாபகர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதுவாக்கு

**ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.**

## Our Motto

See God in the Smile of Poor.

## பயணத்தின் எல்லை

**சுயதிறன் நிறைவுடன் உயர்மனித விழுமியங்களைக் கொண்ட தாய்த் தலைமைத்துவப் பண்புநிலை விருத்திசார் மகளிர் உருவாக்கம்.**

## Our Vision

Creation of Woman of Human Values with Matriarchal Leadership and Self Accomplishment

## பயணத்தின் பாதை

**தாங்குதிறன், அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி வழங்கப்படுவதன் மூலம் வாழ்வாதார வளம் குறைந்த பெண்பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத் தேவையை பெற்று எதிர்காலச் சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் ஆறுதல் மையமாக உணர்ந்து பயணிப்போம்.**

## Our Mission

We will journey on as a fostering center for achieving the Social Recognition to the female children lacking livelihood resources by providing base for Sustainability, Protection, Care, Respect and Education for Self Accomplishment to face the Social Challenges.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக் கீதம்

பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று- வாழிய

அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணி தெல்லியூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும்- வாழிய

சரணம்

ஒழுக்கம் உயர் பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்ற மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற- வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக்கூடக் கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டு மிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும்- வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவார்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க - வாழிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இல்லத் தலைவர்



செஞ்சொற்செல்வர்

## கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
# தெல்லிப்பழை

## நிர்வாகசபை - 2022

01. செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் - தலைவர்
02. நரம்பியல் நிபுணர் தி. திவாகரன் - பொதுச்செயலாளர்
03. திரு. சி. அருளானந்தசிவம் - உபதலைவர்
04. லயன் ச. ஆறுமுகநாதன் - உபதலைவர்
05. திரு. நா. தவநாதன் - நிர்வாகச் செயலாளர்
06. திரு. இ. இராதாகிருஷ்ணா - உப செயலாளர்
07. திரு. அ. சண்முகநாதன் - பொருளாளர்
08. திரு. ப. சேயோன் - உபபொருளாளர்
09. திரு. நா. திருநாவுக்கரசு
10. திரு. சு. முருகையா
11. திருமதி. கலாதேவி பொன்னம்பலம்
12. திரு. ச. உமாசுதன்
13. திரு. வீ. பாக்கியநாதன்
14. திரு. சி. சண்முகானந்தன்
15. திரு.செ. பரந்தாமன்
16. பேராசிரியர், வைத்திய கலாநிதி. சு.ரவிராஜ்
17. திரு. செ. தில்லைநடேசன்
18. திருமதி. சிவமலர் அனந்தசயனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியர்

துர்க்கா தேவஸ்தானம் துர்க்காபுரம், தெல்லிப்பளை.

*Piramasri Sunthara Senthilraja sivachchariyar,*
*Arch priest.*

077-8911898
021-2059821
071-8678856
Senthilr755@gmail.com

Thurkka devi thevasthanam
Thurkkapuram, Tellippalai.




# தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசிச் செய்தி

ஆலயங்கள் வெறும் வழிபாட்டு நிலையங்களாக அல்லாமல் அறச்சாலைகளாகவும் அமைய வேண்டும் என்ற பெருநோக்கிற்கமைய எமது ஆலய தலைமைத்துவம் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைத்தது. அதில் 06 வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு அறிவையும் ஆற்றலையும் சிறந்த ஆளுமையையும் புகட்டி மிகப்பெரும் பணியை ஆற்றத் தொடங்கி 40ஆவது வருட நிறைவை பெரும் விழாவாகக் கொண்டாடுகின்றது. இவ் வேளையில் இல்லத்தை சிறப்புற நடாத்துவதற்கு பெரும் பணியாற்றும் தலைவர் அவர்கட்கும் நிர்வாக சபையினருக்கும் நெறிப்படுத்துவருக்கும் பொறுப்பாளர்களுக்கும் மேற்பார்வை செய்பவர்களுக்கும் மாணவிகளுக்கும் எனது உளம் நிறைந்த ஆசிகளும் துர்க்காதேவியின் திருவருளும் என்றென்றும் கிட்டட்டும்.

இவ்வண்ணம்,

**சிவஸ்ரீ. சுந்தரா. செந்தில்ராஜக் குருக்கள்,**

பிரதம குரு,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்



021 222 2870

ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.



## வாழ்த்துச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று தனது 40வது வயதை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். துன்பத்தில் துவண்டு கொண்டிருந்த நம் சிறுவர்களை வாழ்விற்கு வழிகாட்டும் முகமாக எழுந்ததே மகளிர் இல்லம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பதற்கமைய இவர்களுக்கு உடை, உணவு, கல்வி, ஒழுக்க பண்புகள் என்பவற்றைக் கற்றுக்கொடுக்கும் இல்லமாக 40 ஆண்டுகள் பணியாற்றி தலைநிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அறப்பணியினூடாக ஆலயங்கள் செய்யவேண்டிய பணிகளில் ஓர் அங்கமாக எழுந்தவையே மகளிர் இல்லம். தொடர்ந்து செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகனின் வழிகாட்டலிலும் நிர்வாக செயற்றிறனாலும் இல்லப் பிள்ளைகள் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து கல்வி, சமூக, சமயப் பணிகளில் சிறந்து விளங்குவது பாராட்டுக்குரியது. இல்லத்தை நல்ல முறையில் நிர்வகிக்கும் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
ஆதீன குரு முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sri Subramuniya Kottam**

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்

*God Siva is Immanent Love and Transcendent Reality*

அன்பே சிவமாம் சத்தியமே பரசிவம்

Phone : 022 223 0233
thondunathan@hotmail.com

Old Road,
Kopay, SriLanka.



# ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் எனும் மகுடவாசகத்தைக் கொண்ட சிறப்பை யான் உணர்கிறேன். கடந்த நாற்பது ஆண்டுகாலமாக துர்க்காபுரம் மகளிர் இல்லம் எத்தனை பெண் குழந்தைகளின் வாழ்வை உயர்த்தி வைத்தது என்பதை உலகம் அறியும், துர்க்கை அம்பாளின் அருளும் ஆன்மிக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் அர்ப்பணிப்புமிக்க சேவையும் இவ்வில்லம் உருவாகுவதற்கு வித்திட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக எம்மண்ணில் போர் கருக்கொண்டது. பின் படிப்படியாக போர் உச்சநிலையை அடைந்தது. அவ்வேளையில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இப்பாரிய பணியை தொடங்கியதனால் சைவப் பெண்கள் காப்பாற்றப்பட்டார்கள். மாற்று மதத்தவர்கள் இத்தகைய பணிகள் ஊடாக ஏழைகளை மதம் மாற்றிய காலத்தில் புரட்சிகரமாக சிந்தித்து உகுவாக்கப்பட்டதே மகளிர் இல்லம், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், அன்றைய நிர்வாக சபையினருக்கும் சைவ மக்கள் நன்றிக் கடன்பட்டவர்கள். இப்பாரிய பணி இன்று வெற்றிகரமாக உயர்நிலை அடைந்துள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் இன்றைய தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் நிர்வாக சபையினரும் மகளிர் இல்லத்தை பெருவிருட்சமாக வளர்த்தெடுத்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு போரின் உச்ச தாண்டவத்திற்குப் பின் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுமிகள் இவ் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். மகளிர் இல்லச் சிறுமிகளுக்காக புதிய விடுதிச்சாலை அமைக்கப்பட்டது. புதிய விடுதிச்சாலையை அமைப்பதற்கு ஆறு. திருமுருகன் ஐயா அவர்களும், நிர்வாக சபையினரும் எடுத்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. பல பிள்ளைகள் இங்கிருந்து ஆண்டுதோறும் பல்கலைக்கழகம் செல்கிறார்கள். அவர்களுக்கான சில உதவிகளை யாமும் செய்கின்ற வாய்ப்புப் பெற்றோம். அதிபர் திருமதி. சிவமலர். அனந்தசயனன் அவர்களின் ஆளுமைத்திறனை யாம் கண்டு வியந்தோம் சகல நவீன வசதிகளுடனும் துர்க்காபுர மகளிர் இல்லத்தின் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். மகளிர் இல்லப் பிள்ளைகளின் திருமணச் சடங்குகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு சில சந்தர்ப்பங்களில் கிட்டியது. மிகவும் ஆச்சரியமாக இருந்தது. செல்வந்தர் வீட்டுத் திருமணம்போல திருமணச் சடங்குகள் நடைபெறுகின்றன. மகளிர் இல்லத்திற்கு தூர்க்கை அம்மன் எவ்வித குறையும் விடவில்லை. மகளிர் இல்லப் பணியாளர்கள், இல்லப் பிள்ளைகள் பிறரை மதிக்கும் விதம் தனித்துவமானது. இல்லத்தில் இன்றும் விருந்தோம்பல் நடைபெறுகின்றது. உண்மையிலேயே இல்லத்தை இறைசக்தி தான் இயக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் சமூகப் பொறுப்போடு ஆற்றிவரும் திருத்தொண்டை ஏனைய தேவஸ்தானங்களும் பின்பற்ற வேண்டும். ஆண்டுதோறும் வைத்தியசாலைகளுக்கு தேவஸ்தானம் நிதியுதவி வழங்குகின்றது. அன்னையின் பெயரால் வேதியர்கள், கலைஞர்கள், நாட்டுக்கு நல்லது செய்தவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். ஆறு. திருமுருகன் பிறந்தநாள் அறக்கட்டளையும் உருவாகி இளைய தலைமுறையைச் சார்ந்தவர்கள் கௌரவம் பெறத் தொடங்கிவிட்டார்கள். இலங்கையில் எந்தவொரு சைவத்திருக்கோயில்களும் செய்யாத பணியை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் துணிந்து செய்துவருகிறது. இன்று இல்லத்தில் கற்கும் அன்புக் குழந்தைகள் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் உண்டு அவர்களுக்காக யானும் பிரார்த்திக்கிறேன்.

எனது இதயபூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் துர்க்காதேவி தேவஸ்தானம் பெண்களுக்கான தொழிற்பயிற்சிக் கூடங்களையும், தொழிற்சாலைகளையும் நிறுவவேண்டும் என்ற எனது சிந்தனையை சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்**
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,
கோபாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
T.P. No.:-021 321 3151
பதிவிலக்கம்:- HA/5/JA/193
E.Mail:- thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
Fax:- 021 224 1909
திகதி..../..../20....



## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவரும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி.

எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு 40ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு ஆனந்தம் அடைகிறேன். இவ் இல்லத்தை ஆரம்பித்த ஆத்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் திருவடிகளை நீள நினைந்து வணங்குகின்றேன். இவ் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட போது அம்மையாருக்கு பக்கபலமாக நின்று உதவிய நிர்வாக சபையின் பொதுச்செயலாளர் அமரர் சு.சிவவாகீசர் அவர்களின் பணியினை நினைந்து போற்றுகின்றேன். கடுமையான போர் நிகழ்ந்த காலத்தில் இல்லத்தை தளர விடாது சிவத்தமிழ்செல்வி அம்மா அவர்களும் மகளிர் இல்லப் பணியாளர்களும் இல்லத்தைக் காத்த வரலாறு சொல்லில் வடிக்க முடியாதது. இராமநாதன் கல்லூரி, கைதடி உசன் கந்தசாமி கோயில் என பல இடங்களில் இல்லப் பிள்ளைகளோடு அம்மையார் அவர்கள் அலைந்து திரிந்து இல்லத்தை காத்த மேன்மையை எளிதில் மறந்துவிட முடியாது.

2008ஆம் ஆண்டு அம்மையாரது பிரிவிற்குப் பின் இல்லத்தலைமையை பெறுப்பேற்ற யான் 52 பிள்ளைகளோடு இல்லத்தை வழிநடத்திக் கொண்டிருந்த வேளை 2009 வன்னிப் பெரும் போர் எமக்குப் பாரிய பொறுப்பைத் தந்தது. போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்ந்த சுமார் 70 பெண் பிள்ளைகளைப் பொறுப்பேற்றோம். மொத்தமாக 144பெண் பிள்ளைகள் 2009 மார்கழியில் இல்லத்தில் வசித்தார்கள். பாரிய நெருக்கடியின் மத்தியில் எமது தேவஸ்தான யாத்திரிகர் விடுதியில் சிறுமிகளுக்கான இல்லத்தை தற்காலிகமாக ஆரம்பித்தோம். பின்பு சிறுமிகளுக்கான புதிய இல்லத்தை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். ஆரம்ப நிதியாக கனடா இணுவில் திருவூர் ஒன்றியம் சுமார் 16 இலட்சம் வழங்கினார்கள். பின்பு அவுஸ்திரேலியா அபயகரம் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த அமரர். செல்வி சின்னையா மற்றும் அன்பர்களின் உதவியினால் ஆலய தெற்கு வீதியில் சிறுமிகளுக்கான புதிய இல்லம் கட்டப்பட்டு 14.07.2013 இல் திறந்து வைக்கப்பட்டது.

எங்கள் இல்லப் பிள்ளைகளின் வளர்ச்சியில் அன்று தொட்டு இன்று வரை மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள் அர்ப்பணிப்பான சேவை செய்து வருவது எமக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது. எங்கள் இல்லப் பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஆர்வமாக விளங்குகின்றார்கள். எமது இல்லத்தின் வளர்ச்சிக்காக ஒரு பெண் அதிபரை நியமிக்க வேண்டுமென எமது நிர்வாக சபை கூறியது. புகழ்பூத்த மகாஜனக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களை அவரது இல்லத்திற்குச் சென்று எமது நிர்வாக சபையினர் இப் பணியை பொறுப்பேற்குமாறு வேண்டினர். அவர்கள் எந்த ஊதியமும் பெறாமல் இன்றுவரை தனது பணியை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களின் உன்னத சேவையால் தற்போது சமகாலத்தில் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகள் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களின் பிரத்தியேக கல்வி வழங்கல் சிறப்பாக நடைபெறுகிறது. மாணவர்களின் உளவள ஆலோசகராக திருமதி பாகீரதி கணேசதுரை நன்முறையில் செயற்பட்டு வருகிறார்.

எங்கள் இல்லப்பிள்ளைகளின் திருமண வாழ்விற்கு எமது நிர்வாக சபை பல செயற்பாடுகளை முன்வைத்து செயற்பட்டு வருகின்றது. துர்க்காதேவி வீட்டுத்திட்டம் என்ற பெயரில் 09 வீடுகள் இதுவரை கட்டப்பட்டு 7 வீடுகள் எங்கள் இல்லப் பிள்ளைகளுக்கு சீதனமாக வழங்கப்பட்டு விட்டது. அவர்கள் குடும்பம் குடும்பமாக சிறப்பாக வாழ்கின்றார்கள். எங்கள் இல்லப் பிள்ளைகள் எங்கள் தேவஸ்தான அலுவலகப் பணிகளிலும், எங்கள் தேவஸ்தானத்திற்கு உரித்தான சுன்னாகம் திருமகள் அழுத்தகப் பணிகளிலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்கள். எமது இல்லத்தில் இருந்து கற்று வெளியேறிய மாணவிகளும் சகல வைபவங்களிலும் கலந்து சிறப்பித்து வருகிறார்கள்.

எங்கள் இல்லத்தின் வளர்ச்சியில் பெரும் துணை செய்யும் பொது மக்களுக்கும், அவுஸ்திரேலியா அபயகரம் அறக்கட்டளையினருக்கும், நிதியுதவிகளை வழங்கி வரும் அன்பர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்ற தர்மகர்த்தா சபை, நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், எங்கள் இல்லப் பிள்ளைகளின் வளர்ச்சியில் தனது சொந்த செலவில் உதவிகள் வழங்கி வரும் நிர்வாக சபை உப தலைவர் ச.ஆறுமுகநாதன் அவர்களுக்கும் உற்ற துணையாக இருக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலர், வலி வடக்கு பிரதேச சபை தலைவர், நன்நடத்தைப் உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியை கூறிக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல ஈஸ்வரி அருட்கடாட்சத்தால் எங்கள் இல்லம் என்றும் ஏழைப் பெண் பிள்ளைகளின் அரணாக நின்று உதவும் என வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி.

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் சமுதாயத்திற்கு சேவை ஆற்றுகின்ற முக்கிய ஆலயமாக எமது துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்குகின்றது என்பது யாவரும் அறிந்ததே. எமது ஆன்மீக தாய் சிவத்தமிழ்செல்வி அம்மையார் அவர்களினதும் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் பொதுச் செயலாளர் அமரர் சு.சிவசுவாகீசர் அவர்களினதும் பெரு முயற்றியால் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்காக சிறுவர் இல்லம் 03.02.1982ல் உருவாக்கப்பட்டதே துர்க்காபுரம் மகளிர் இல்லமாகும். இவ் இல்லம் தற்போது நாற்பதாவது வருடத்தை பூர்த்தி செய்ததையொட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சிவத்தமிழ்செல்வி அம்மையாரின் சிந்தனையில் இவ் இல்லப் பிள்ளைகள், சகலவசதிகளுடன் கூடிய இருப்பிடம் அமைக்க வேண்டும் என்ற. எண்ணம் 18.01.1984இல் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத்தலைவர் முன்னாள் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமாகிய அமரர். வி. தருமலிங்கம் அவர்களினால் அத்திவாரமிடப்பட்டு எழில்மிகு இரு மாடிக்கட்டிடம் 31.01.1986இல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஐயா. திரு. மு பஞ்சலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இல்லப் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி, வைத்தியம் ஆகியவற்றுக்கு உள்நாட்டு அன்பர்கள், வெளி நாட்டு நிறுவனங்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் தாராள சிந்தனையுடன் உதவி செய்துவருகின்றார்கள்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் நற்சேவை 15.06. 2008 இல் அவர் சிவபதமடைந்தபின் நிறைவுக்கு வந்தது. அம்மையாரின் அடிச்சுவட்டை பின்பற்றி துர்க்காபுரம் மகளிர் இல்ல சேவையை செஞ்சோற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் பொறுப்பேற்று செய்து வந்தார். அவரின் தலைமைக் காலத்தில் 2009ல் வன்னிப் போர் நிறைவுக்கு வந்தது. அப்போரில் பாதிக்கப்பட்ட 70 பெண் பிள்ளைகளை பொறுப்பேற்று இல்லத்தில் அப் பெண்பிள்ளைகள் கல்வி, உணவு, உடை இருப்பிடம் உட்பட சகல வசதிகளையும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பிள்ளைகளுக்கான புதிய இல்லம் 04.04. 2011 ல் அடிக்கல் நாட்டப்பட்டு 14.07 .2013 ல் சகல வசதியான இல்லம் தேவஸ்தான தெற்குப் புறமாக அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. சிறுவர் உரிமை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய தலைவரின் முயற்சியாலும் 18.03.2012ல் திகதி நிர்வாகசபைத் தீர்மானத்திற்கு அமைய தெல்லிப்பழையில் புகழ்பூத்த மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா அதிபராக விளங்கியவரும் சிறந்த நிர்வாகியுகிய திருமதி சிவமலர் அனந்தசயனன் (ஓய்வு நிலை அதிபர்) 19.03.2012ல் துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபராக நியமிக்கப்பட்டார்.

அவரின் சிறந்த நிர்வாகத்தினால் இல்லப்பிள்ளைகளில் பெரும்பாலானவர் பட்டதாரிகளாக வெளியேறி அரசசேவையில் சேர்ந்து சிறப்புடன் கடமையாற்றி வருகின்றார்கள். இல்ல அதிபரின் வழிகாட்டலின்படியும் இல்ல மேற்பார்வையாளர்களின் பூரண ஒத்துழைப்பினாலும் இவ் இல்லம் மென் மேலும் சிறப்புடன் இயங்க அம்பாளின் திருவருள் கிடைக்க பிராத்தித்து வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**நா. தவநாதன்**
நிர்வாகச் செயலாளர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபரின் உள்ளத்திலிருந்து .....

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பவர்கள் அந்நாட்டுப் பெண்களே ஆவர். ஒவ்வோர் இனத்திலும் உருவாகும் பெரியவர்க்குப் பின்னால் ஒரு பெண் உந்துசக்தியாக இருப்பதை வரலாறு கூறுகின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றம் சட்டத்திட்டங்களினால், சூழல் காரணிகளினால் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெரும் கேடாக அமையும்.

**யத்ர நாரியஸ்து பூஜ்யந்தே, ரமந்தே தத்ர தேவதா"**
**பெண்கள் மதிக்கப்படுகின்ற இடங்களில் தேவர்கள் இன்புறுகின்றனர்"**

என்று பெண்களின் முன்னேற்றம் எவ்வளவு முக்கியம் என மனுஸ்மிருதி கூறுகின்றது. இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் இதனை உணர்ந்து ஆதரவற்ற, பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண் பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும், சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த துர்க்காபுரம் மகளிர் இல்லம். இவ்வருடத் தொடக்கத்தில் 120 பிள்ளைகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வில்லமானது இதுவரை காலமும் ஏறக்குறைய 546 பிள்ளைகளுக்கு வாழ்வளித்திருக்கின்றது.

சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் தூரநோக்கோடு தாய்த்தலைமைத் துவத்தைக் கட்டியெழுப்பி எம் இல்லப் பிள்ளைகள் சமுதாயத்தின் சவால்களை எதிர்நோக்கும் திறன் பெற்றவர்களாக சமுதாயத்தில் காலடி எடுத்து வைக்கிறார்கள் என்பது ஸ்தாபகருக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

28. 05. 2018இல் இவ் இல்லமானது சைவ ஆன்மிக மகளிர் விடுதிச்சாலையாக நன்நடைத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடமாகாணம் ஆணையாளர் திரு. தி. விஸ்வரூபன் அவர்களின் உதவியுடன் மாற்றப்பட்டது. இவ் இல்லத்தை சிறப்பாக நடத்துவதற்கு எம்முடன் ஒத்துழைக்கும் இல்ல நிர்வாகத்திற்கும் சிறப்பாக இதற்காக எம்முடன் ஒத்துழைக்கும் இல்லத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இல்லப் பிள்ளைகளின் சகல தேவைகளும் இனம் காணப்பட்டு அறியப்படும்போது உடனடியாக அவற்றைத் தீர்த்து வைப்பதில் ஒரு தலைசிறந்த நிர்வாகியாக அவர் தொழிற்படுகின்றார் என்பது மிகையல்ல. அத்துடன் எமது பிள்ளைகளின் தொகைக்கு ஏற்ப இருக்கவேண்டிய 13 மேற்பார்வையாளர்களின் வேலைகளை 5 மேற்பார்வையாளர்கள் ஆற்றிக் கொண்டிருப்பது என்பது மேற்பார்வையாளர்களுக்கும் மனமார நன்றிகூற வைக்கின்றது.

கடந்த 13 வருடங்களாக பிள்ளைகளின் சகல தேவைகளையும் எவ்வித மறுப்பும் இல்லாமல் பெற்றோர் தமது சொந்தப் பிள்ளைகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுப்பார்களோ அதற்கும் மேலதிகமாக சிறப்பாக எமது பிள்ளைகள் பராமரிக்கப்படுவதற்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களது அளுமை போற்றுதற்குரியது மேலும் பொதுவாக ஆதரவற்றோர் இல்லம் எனும்போது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பவைதான் அத்தியாவசிய தேவைகள் என்பது சமூகத்தின் எண்ணமாகும். ஆனால் அவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்கள் ஒரு சிறந்த பிரஜையாக சமூகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு கல்விதான் முக்கியம் என்பதை உணர்ந்து கல்வித்தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவானாலும் மறுப்பேதுமின்றி ஏதோ ஒரு வகையில் உதவிகளைப் பெற்று எம் பிள்ளைகளுக்கு வழங்குவது என்பது எமது தலைவர் கலாநிதி ஆறு. திருமுமுருகன் அவர்கள் தூரநோக்கோடு செயற்படுகின்றார். என்பதற்குச் சான்றாகும்.

எம் பிள்ளைகளில் 24பேர் இதுவரை பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்தவர்கள், 16 பேர் பட்டப்படிப்பில் ஈடுபடுகின்றனர். பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து 08 பேர் உள்ளனர். 10 பேர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இதைவிட தரம் 10, 11 இல் 21 பேர் உள்ளனர். இவர்களுடைய பாடசாலைக்கல்வி, பிரத்தியேக பாட போதனை என்பவற்றுக்கு நாம் மிகுந்த முயற்சி எடுக்கின்றோம். இதைவிட இன்றைய உலகின் தேவை கருதி கணனிக்கல்வி, பேச்சு ஆங்கிலம், இசை, வாத்தியக்கருவிகள் இசைத்தல் போன்றவற்றையும் கற்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரையில் எந்த ஒரு பிள்ளையும் இந்த வகையான கல்வியைப் பெற விரும்புகின்றேன் எனக் கூறினால் அவரது வேண்டுகோள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் என்றைக்குமே நாம் மறுத்ததில்லை என்பதைப் பெருமையுடன் கூறிவைக்க விரும்புகின்றேன். இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும் தலைவர் அவர்கட்கும் சிறப்பாக இத்தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பண உதவி மற்றும் உதவிகளைச் செய்யும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள்.

40வது ஆண்டு விழா சிறப்புமலர் இப்போது உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. பிள்ளைகளின் ஆக்கங்கள், எண்ணங்கள், ஆதங்கங்கள். இலக்குகள் எழுத்துருவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பெரியோர்களின் ஆசிகள், வாழ்த்துக்கள், அறிவுரைகள் மலருக்கு மெருகூட்டுகின்றன. நிறைவாக இல்லம் பிள்ளைகளின் தொகை அதிகரிப்பால் வளரவேண்டும் என நிச்சயமாக எந்தக் காலத்திலும் நாம் விரும்பவில்லை. வளர்பவர்கள் தரத்தில், பண்பில், கல்வியில் மேலாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றோம்.

எம்மிடம் வளரும் பிள்ளைகள் அனைவரும் கல்வியில் ஒழுக்கத்தில் மேலோங்கி சுபீட்சமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என ஸ்ரீ துர்க்காதேவி அம்பாளின் பாதங்கள் பணிந்து பிரார்த்தனை செய்வதோடு எம் பிள்ளைகளும் அதை உணர்ந்து தம்மை வளர்த்தவர்களிடமும் தமக்கு உதவிகள் செய்பவர்களிடமும் நன்றி மறவாமல் நற்பிரஜைகளாக சமூகத்தில் நுழைய வேண்டுமென மனமார வாழ்த்தி அமைகின்றேன்.

**திருமதி. சிவமலர் அனந்தசயனன்,**
அதிபர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
(சைவ ஆன்மிக விடுதிச்சாலை)
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


ஆசிச் செய்திகள்
வாழ்த்துச் செய்திகள்

| | |
|---|---|
| 01. துர்க்காபுரம் மகளிர் இல்ல 39வது ஆண்டறிக்கை | 1 |
| 02. ஆன்மீக ஒளி பரப்பி மனித நேயம் போற்றிய அன்னை | 13 |
| 03. இதய அஞ்சலி | 20 |
| 04. சமூக சேவைக்கும் சமூகப் பணிக்குமுள்ள வேறுபாடுகளும் சமூகப்பணியினூடாக சமுதாய விருத்தியை ஏற்படுத்தலும் ஒரு பார்வை | 22 |
| 05. ஆற்றுப்படுத்தும் ஆற்றுகைகள் | 24 |
| 06. நாற்பது ஆண்டுகள் நற்பணி | 25 |
| 07. மாண்புமிகு மகளிர் இல்லம் | 26 |
| 08. இல்லத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு நோக்கு | 29 |
| 09. இல்லத்தின் வளர்ச்சியில் ஒரு நோக்கு | 38 |
| 10. இல்லப் பிள்ளைகளின் ஆக்கங்கள் | 40 |
| 11. கலாநிதி C.W.W கன்னங்கர | 41 |
| 12. அறிவியலின் விந்தை | 42 |
| 13. நன்றி மறவாமை | 42 |
| 14. நான் விரும்பும் நூல் திருக்குறள் | 44 |
| 15. நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு | 46 |
| 16. நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் சமூகத்தின் பங்களிப்பு | 46 |
| 17. இளைஞர்கள் நாட்டின் விடிவெள்ளி | 47 |
| 18. விஞ்ஞானமும் அறிவியலும் | 48 |
| 19. சமூதாயத்தில் இளைஞர்களின் வகிபங்கு | 49 |
| 20. கிருமிகளின் உச்சம் கொரோனா | 50 |
| 21. சமூகத்துக்காக தனியொருவன் | 51 |
| 22. நாட்டிற்கு தொழில் வழிகாட்டல் சேவையின் முக்கியத்துவம் | 53 |
| 23. கொரோனாவால் வாழ்வே மாயம் | 54 |
| 24. கனவு காண்போம் திட்டமிடுவோம் வேலை உலகை வடிவமைப்போம் | 56 |
| 25. மாண்புலகில் மதம் | 58 |
| 26. எங்கே போகிறது எதிர் காலம் | 58 |
| 27. மாசற்ற மனித வாழ்வின் பண்பியல் | 59 |
| 28. மனிதத்துவத்துடன் வாழ்க | 61 |
| 29. இந்து சமயமும் எமது வாழ்க்கை முறையும் | 62 |
| 30. எங்கே போனது மனிதம் | 65 |
| 31. தொழில் முயற்சியாண்மை மூலம் பொருளாதாரத்தை வெல்லுங்கள் | 65 |
| 32. யதார்த்தமான சில உண்மைகள் (புதுக் கவிதை) | 67 |
| 33. சுதந்திர மதத்திற்கு வழிகோலும் மனித நேய குணங்கள் | 68 |
| 34. எனது பார்வையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் | 71 |
| 35. புதிய அரசும் எதிர்கால கல்வி செல்நெறிகளும் | 75 |
| 36. எமது எண்ணங்கள் நல்லனவாக அமையட்டும் | 77 |

பரிசுப்பட்டியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## (சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை)

## தெல்லிப்பழை

## 39ஆவது ஆண்டு அறிக்கை

**(2020, 2021ஆண்டு அறிக்கையை உள்ளடக்கியது)**

துர்க்கையம்பாளின் பாதங்களை பணிந்து வணங்கி 39வது ஆண்டு நிறைவு அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றைய இந்த விழாவிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட நரம்பியல் நிபுணர் திருநாவுக்கரசு திவாகரன் அவர்களே, அவர் தம் பாரியார் திருமதி. பிரமிளா திவாகரன் அவர்களே, ஆசியுரை வழங்கவந்த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. செந்தில்ராஜக் குருக்கள் அவர்களே, நல்லை ஆதீனகுரு முதல்வர் அவர்களே, கோப்பாய் சுப்பிரமுனியக் கோட்டம் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆங்கிலமொழிக் கற்கைகள் துறை பேராசிரியை திருமதி சண்முகயோகினி ரவீந்திரன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள திருமதி அம்பிகை சிவஞானம் அதிபர் யா/இராமநாதன் கல்லூரி அவர்களே, வரவேற்புரை வழங்க வருகை தந்துள்ள இல்ல நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் அவர்களே, வாழ்த்துரை வழங்க வந்துள்ள துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்களே நன்றியுரை வழங்க வந்துள்ள நிர்வாகசபை உபசெயலாளர் திரு.இ.இராதாகிருஷ்ணா அவர்களே, நிர்வாகசபை உறுப்பினர்களே, பெரியோர்களே நலன்விரும்பிகளே, இல்ல மேற்பார்வையாளர்களே, இல்லச் சிறார்களே அனைவருக்கும் எனது இதயம் கனிந்த காலை வணக்கம் கூறி வரவேற்று உவகையடைகின்றோம்.

03.02.1982 இல் 09 சிறுமிகளுடன் ஆரம்பித்த தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று தனது 40வது ஆண்டு விழாவை கொண்டாடுகின்றது. ஆன்மீக வழிகாட்டி துர்க்கா துரந்தரி அன்னை சிவத்தமிழ் செல்வி. அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சரணாலயம் இன்று எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்துள்ளது. இதற்கு காரணம் எமது "அம்மா" அவர்களின் தியாகசிந்தனையும் தவப்பலனும் என்பதோடு எமக்கு அருள் பாலித்து கொண்டிருக்கும் ஸ்ரீ துர்க்காதேவி அம்பாளின் அருட்கடாட்சமுமேயாகும் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா" அவர்கள் அம்பாளின் பாதங்களை அடைந்து 13 வருடங்கள் பூர்த்தியானதை ஆத்மார்த்தமாக நினைவு கூருகின்றோம். நாட்டில் ஏற்பட்ட நோய் தொற்று காரணமாக ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தும் 38ஆவது, 39வது ஆண்டு விழா நடை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்று 40ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுவதற்கு அம்பாள் அருள் பாலிப்பதற்கு தலை வணங்குகின்றோம்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுக்குப் பின் இல்லத் தலைவராக பொறுப்பேற்ற செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் எமது இல்லத்தை சகல துறைகளிலும் வளப்படுத்தி உன்னத நிலைக்கு கொண்டு வந்தள்ளார் என்பது கண்கூடு. சில பாடசாலைகளை கல்விக்காக தேர்ந்தெடுத்து பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்புவது போன்று கல்வியில் மேம்பட்டு தமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வார்கள் என்ற நம்பிக்கையோடு தமது பிள்ளைகளை எமது இல்லத்தில் சேர்த்துவிட துடிக்கின்ற பெற்றோர்களை நாம் தினமும் அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம். பல்கலைக்கழகத்திற்கு செல்ல, சென்ற பின் சகல வசதிகளோடும் கல்வி கற்க எமது தலைவர் முனைப்போடு செயலாற்றுவது போற்றுதற்குரியது.

## இல்லத்தின் விருதுவாக்கு

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"

## தூரநோக்கு

"சுயதிறன் நிறைவுடன் உயர் மனித விழுமியங்களைக் கொண்டதாக தாய்த் தலைமைத்துவப் பண்பு நிலை விருத்திசார் மகளிர் உருவாக்கம்"

## பணிக்கூற்று

"**தாங்கும் திறன், அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி** ஆகியன வழங்கப்படுவதன் மூலம் வாழ்வாதார மேம்பாட்டை வேண்டி நிற்கும் பெண் பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத் தேவையை சைவ ஆன்மிகச் சூழலில் பெற்று எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சமூக அந்தஸ்தை எட்டும் ஆறுதல் மையமாக உணர்ந்து பயணிப்போம்"

**நோக்கம் / இலக்கு :-**

(அ) இந்நிறுவனம் சைவசமயத்தைச் சேர்ந்த ஆன்மீகச் சூழலில் சைவ பண்பாட்டுடன் கலை, கலாசார, கல்வியை கற்க விரும்பும் 6-17 வயதுடைய பெண் பிள்ளைகளுக்கு இல்லமாக அமையும்.

(ஆ) இல்லத்தில் வாழும் பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள் மற்றும் போதிய கல்வி வசதிகள் சைவ கலாசார பாரம்பரியதுடன் தொடர்புடையதாக வழங்கப்படும்.

(இ) இந் நிறுவனம் 18 வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கும் உணவு, உடை, உறையுள், விசேடமாக உயர்கல்வி, பல்கலைகழகப் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி ஆகியவற்றை வழங்கி வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும்.

(ஈ) இந்நிறுவனம் அல்லது வேறு தொழில் நிறுவனங்கள் இந்நிறுவனத்தில் உள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க முடியும் மற்றும் ஏனைய பயன் தரக்கூடிய பயிற்சிகள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) இந்நிறுவனத்தில் இருந்து ஆன்மீக கட்டுப்பாடுகளுக்கு அமைய மேற்படி (ஈ)யில் தரப்பட்டதுக்கு ஒப்பான பயன் தரக்கூடிய வேறு பயிற்சிகளும் வழங்கப்படும். குறிப்பாக

(ஏ) அழகியல் கல்வி பயிற்சிகள் வழங்கப்படும். சைவம், தமிழ்ப் புலமை, பண்டிதம், யோகாசனப் பயிற்சி, தியான வகுப்புக்கள் ஆகியவற்றிற்கு முதன்மை வழங்கப்படும்.

(ஊ) இல்லத்தை சேர்ந்த பொருத்தமான பெண் பிள்ளைகளுக்கு வாழ்வியல் வசதிகள், வாழ்வாதார வசதிகள் என்பன வழங்கப்படும். பருவ வயது வந்ததும் தேவைப்படும் பிள்ளைகளுக்கு நிர்வாகத்தால் திருமணம் செய்து வைக்கப்படும்.

**இல்லஅனுமதி:-**

பின்வரும் வகைகளுக்குரிய பிள்ளைகள் மேற்படி இல்லத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

(அ) 6 - 17 வயதிற்கு உட்பட்ட சைவசமயத்தைச் சேர்ந்த ஆன்மீகச் சூழலில் சைவ பண்பாட்டுடன் கலை, கலாசார, கல்வியைக் கற்க விரும்பும் பெண் பிள்ளைகள்.

(ஆ) 18வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வசதி குறைந்த பல்கலைக்கழக கல்வி உயர்கல்வி பெறும் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர்.

(இ) ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினால் இந்நிறுவனத்தின் சகல செயற்கூறுகளும் மேற்பார்வை செய்யப்படும்.

**அரசாங்கப்பதிவு**

துர்க்காபுரம் மகளிர் இல்லம் J/3/84 இலக்கத்தில் 23.09.1988 இல் நன்னடத்தை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அரச அங்கீகாரம் பெற்றுள்ளது. வலி வடக்கு பிரதேச செயலகத்தில் J/F/GN/83/VO1/2005/1 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் யாழ் மாவட்ட சிறுவர் இல்ல மாகாண பதிவாளரால் 1956ஆம் ஆண்டு திருத்திய சட்டயாப்பின் பிரகாரம் 6வது கோவை 142 வது அத்தியாய விதிகளுக்கு அமைவாக NP/24/02/01/CH/06 பதிவு இலக்கத்தில் எமது இல்லம் 02.04.2009 இல் பதிவு செய்யப்பட்டது. 2017ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆணையாளர் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் அவர்களினால் யாப்பு விதிகள், நிர்வாக கட்டமைப்பு மாற்றப்பட்ட நிலையில் சிறுவர் அபிவிருத்தி நிலையமாக மாற்றம் படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும் இல்லத்தின் தலைவர் அவர்களின் முயற்சியினால் NP/30/04/PO-1/CH இலக்கமிடப்பட்ட 15.12.2017 தேதியிட்ட கடிதத்தின் படி எமது இல்லம் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வடக்குமாகாண சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிசட்டத்தின் கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையமாக பதிவுகளை மேற்கொள்ள விரும்பாதமையினால் சிறுவர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகளை முடிவுறுத்த தீர்மானித்துள்ளது என ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது. ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் அவர்களின் NP/30/04/PO-1/CH இலக்கமிடப்பட்ட 02.01.2018 கடிதத்தின்படி 2016ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வடக்கு மாகாணசபை நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிசட்டத்தின் பிரிவு 12க்கு அமைவாக **மாணவர் விடுதிச்சாலையாக 28.05.2018 திகதி முதல் செயற்பட அனுமதி கிடைத்தது இதன்படி எமது இல்லம் துர்க்காபுரம் மகளிர் இல்லம் (சைவ ஆன்மீக விடுதிச்சாலை) யாக இயங்க ஆரம்பித்தது.** இதில் 54 பேர் சிரேஸ்ட இல்லத்திலும் 47 பேர் கனிஸ்ட இல்லத்திலும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (தரம் 1 தொடக்கம் 05 வரை) தரம் 06 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை மருதனார்மடம் யா/இராமநாதன் கல்லூரியிலும் கல்வி கற்கின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்த்தெடுக்கும் அப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றி கூறுகின்றோம். மேலும் எமது பிள்ளைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ் நுண்கலைப்பீடம், வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம், விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், Software Engineering IIT Campus, Colombo, பேராதனை பல்கலைக்கழகம், இலங்கை சப்ரமுவ பல்கலைக்கழகம், Colompo Horizon Campus, ஆகியவற்றில் உயர்கல்வியை மேற்கொண்டு வருகின்றனர்.

### 2019இல் எமது இல்லப்பிள்ளைகளில்

*01.* செல்வி. ஜெ. நாகசுஜித்தா, (விபுலானந்தா கல்லூரி, கிழக்கு பல்கலைகழகம்),

*02.* செல்வி. ஜெ. தேவரூபி (இராமநாதன் நுண்கலைபீடம், (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) பட்டப்படிப்பை முடித்து பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர்.

### 2020இல் எமது இல்லப்பிள்ளைகளில்

*01.* செல்வி.த.தேவதர்சினி Informatics Institute of Technology Affliated with University of Westminster ( U.K) யில் B Eng Software Engineering முடித்து *2021ல்* Associate Process at Informatics Itoldings Ltd Company யில் மென்பொறியியளாளராக கடமையாற்றுகிறார்.

### 2021இல் எமது இல்லப்பிள்ளைகளில்

| | |
|---|---|
| 01. செல்வி. வி. பிரசா | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| 03. செல்வி. ர. விதுரா | கிழக்கு பல்கலைக்கழகம் |
| 04. செல்வி. கா. கயனிகா | கிழக்கு பல்கலைக்கழகம் |

ஆகியோர் பட்டபடிப்பை முடித்து பட்டதாரிகளாகவெளியேறியுள்ளார்கள்

### 4.பட்டதாரிபயிலுனர்களாக உள்ள இல்லத்துப்பிள்ளைகள்

| | |
|---|---|
| 01. செல்வி. இ. சர்மிளா | (Eastern University of Sri Lanka, Sociology Special, 4th Year) |
| 02. செல்வி. கி. ரூபிகா | (Colompo Horizon Campus, Faculty Education, 4th Year) |
| 03. செல்வி. ஜீ. நிருத்திகா | (Arts and Culture Special in Comparative Religion 3rd Year) |
| 04. செல்வி. த. தர்மினி | (University of Jaffna,Financial Manegement, B. Com 3rd Year) |
| 05. செல்வி.ந. கிருசாந்தினி | (Eastern University of Sri Lanka, Special in Education,3rd Year) |
| 06. செல்வி. செ. நிசாந்தினி | (Higher National Diploma in Management, 3rd Year) |
| 07. செல்வி. யோ. வினுஜா | (Eastern University of Sri Lanka, Special in Education, 3rd Year) |
| 08. செல்வி. வி. விதுஜா | (University of Peradeniya, B. Com special, 3rd Year) |
| 09. செல்வி. து. சுபாஷினி | (Sabragamuwa University of Sri Lanka, Social Science and Languages, 3rd Year). |
| 10. செல்வி. இ. ஐஸ்வர்யா | (Sabragamuwa University of Sri Lanka, Social Science and Languages, 2nd Year). |
| 11. செல்வி. பா. ஸ்ரீபிரியா | (University of Jaffna. Arts, 2nd Year). |
| 12.செல்வி. ஜெ. தேனிலா | (Eastern University of Sri Lanka. Arts, 2nd Year). |
| 13. செல்வி. ஆ. ஜான்சிகா | (Eastern University of Sri Lanka. Arts, 1st Year). |
| 14. செல்வி. கா. மதனப்பிரியா | (Eastern University of Sri Lanka. Arts, 1st Year). |
| 15. செல்வி. ந. நிந்துஜா | (University of Jaffna. Arts, 1st Year). |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல நிர்வாகம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்தின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லம் (சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை) செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமையில் இயங்குகின்றது. இல்ல நிர்வாக கடமைகளில் அவருக்குதவியாக திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள் இல்ல அதிபராக சேவையாற்றுகின்றார் நிர்வாகசபையில் அங்கம் வகிக்கும் திருமதி. கலாதேவி பொன்னம்பலம் அவர்கள் இல்லத்திற்கு வருகை தந்து குறை நிறைகள் அறிந்து நிர்வாகசபையின் உதவியுடன் தீர்வுகளுக்காக உதவுகின்றார். திருமதி.பாகீரதி கணேசதுரை உளவள ஆலோசகராகச் சேவை அடிப்படையில் செயலாற்றுகின்றார்.

## இல்ல உத்தியோகத்தர்கள்

**மேற்பார்வையாளர்களாக :-**

01. செல்வி. செல்வராணி பெரியதம்பி
02. செல்வி. உஷாதேவி சுப்பையா
03. செல்வி. சுகந்தினி சுப்பையா
04. செல்வி. மோகனாம்பாள் நவநாதன்
05. செல்வி. பவானி பொன்னையா
06. செல்வி. தே.சங்கரபிள்ளை
07. திருமதி. க. சிவாஜினி

ஆகியோர் தொழிற்படுகின்றனர். மேற்பார்வையாளர்களினால் மாணவர் ஒழுங்கு, ஒழுக்கம், கல்வி, உடை, வைத்தியம் போன்ற தேவைகள் கவனிக்கப்படுகின்றது. மேற்பார்வையாளர் செல்வி. சுகந்தினி சுப்பையா தலைமையில் திருமதி. க. சிவாஜினி, திருமதி. து. தவமலர், செல்வி. மு. பூமலர் உணவுத் தேவைகளைக் கவனித்து வருகின்றனர். இல்ல அலுவலக உதவியாளராக செல்வி. ச. வைஸ்ணவி தொழிற்படுகின்றார். திரு. இ. பாலசந்திரன் முச்சக்கர வண்டிச் சாரதியாகவும், திரு. தயானந்தன் பாடசாலைப் பேருந்து சாரதியாகவும், திருமதி. இரத்தினமாலா, திரு. ஜெகதீஸ்வரன் ஆகியோர் சமையல் உதவியாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

## தொழிற்பயிற்சி

இல்லப்பிள்ளைகள் குறிப்பாக க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் பரீட்சைகள் எடுத்தபின் பெறுபேறுகளுக்கு காத்திருப்பவர்களுக்காக தையல் பயிற்சி ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் லயன்ஸ் கிளப்பினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 06 தையல் இயந்திரங்களுடன் மொத்தமாக 10 தையல் இயந்திரங்கள் இருந்தன. இவற்றில் 2 தையல் இயந்திரங்கள் திருமணமாகி குடும்பத்துடன் வாழும் எமது இரு இல்லப்பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது நிர்வாகசபை உபதலைவர் தேசகீர்த்தி லயன் ச. ஆறுமுகநாதன் அவர்களின் அனுசரணையில் பிள்ளைகளுக்கான தையல் பயிற்சி நடைபெறுகின்றது.

## பரீட்சைப் பெறுபேறுகள்

01. க.பொ.த சாதாரணதரம் 2019இல் 05 பிள்ளைகள் முதற்தடவையாக பரீட்சை எடுத்தனர். 05 மாணவர்கள் உயர்தரம் கற்ககூடியவர்களாக உள்ளனர்.

02. க.பொ.த சாதாரணதரம் 2020இல் 05 பிள்ளைகள் முதற்தடவையாக பரீட்சை எடுத்தனர். 05பேர் தகுதிபெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் 2018/2019;2019/2020 கல்வி ஆண்டு**

**2018/2019 :-**

01. செல்வி. இ. ஐஸ்வரியா
02. செல்வி. பா. ஸ்ரீபிரியா
03. செல்வி. ஜெ. தேனிலா

**2019/2020 :-**

04. செல்வி. ந. நிந்துஜா
05. செல்வி. ஆ. ஜான்சிகா
06. செல்வி. கா. மதனப்பிரியா

**2020-2021 கல்வியாண்டு கற்கைநெறிக்காக தகுதிபெற்றவர்கள்**

01. செல்வி. பு. டிலக்சனா,
02. செல்வி. ஞா. சாளினி,
03. செல்வி. நா. ரஞ்சிதமலர்
04. செல்வி. ச. சோபிதா
05. செல்வி. ர. டிசானி
06. செல்வி. க. தயாளினி,
07. செல்வி. க. கௌசி
08. செல்வி. ர. ரஜிதா
09. செல்வி. இ. சங்கவி

**2021 இல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டோர்**

| | |
|---|---|
| 01. செல்வி. ர. டிசானி | - கிழக்கு பல்கலைக்கழகம் (கலைப்பீடம்) |
| 02. செல்வி. நா. ஞா. சாளினி | - கிழக்கு பல்கலைக்கழகம் (கலைப்பீடம்) |
| 03. செல்வி. ச. சோபிகா | - இராமநாதன் நுண்கலைப்பீடம் (கர்நாடக சங்கீதம்) |
| 04. செல்வி. செ. றஜிதா | - தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம். சீதுவ. (Notional Institute of Social Development. Seeduwa.) |
| 05. செல்வி. க. கரிசாளினி | - தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய். |
| 06. செல்வி. ஜீ. நிவேனிகா | - தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம். சீதுவ. (Notional Institute of Social Development. Seeduwa.) |
| 07. செல்வி. இ. சங்கவி | - தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம். சீதுவ. (Notional Institute of Social Development. Seeduwa.) |

## வாகன வசதி

இல்லப் பிள்ளைகள் பாடசாலைக்கு சிரமமின்றி சென்றுவர எற்கெனவே எம்மிடம் ஒரு சிற்றூர்தியும் ஒரு பேரூந்து பஸ்வண்டியும் உள்ளன. இதைவிட வைத்திய தேவைக்கும் மேலதிக வகுப்புக்களிற்கு செல்லவும் முச்சக்கர வண்டி உள்ளது.

## விழுமியக்கல்வி:-

தரம் 09 வரையான சகல பிள்ளைகளும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையில் இயங்கும் ஸ்ரீ துர்க்காதேவி அறநெறி பாடசாலைக்கு வாரம் தோறும் வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00மணிக்கு ஒழுங்காக ஆசாரமுறைப்படிசென்று கல்வி பயிலுகிறார்கள். அறநெறி பாடசாலை நடாத்தும் குரு பூசை, மற்றும் விழாக்கள் போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாடவிதானச் செயற்பாடு

பிள்ளைகள் மாலை நேரங்களில் திறந்த உள்ளக விளையாட்டுகளில் ஈடுபடுவதுடன் நேரம் ஒதுக்கப்பட்டு (சனி, ஞாயிறு) இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றது. குறிப்பாக வீணை, வயலின், மிருதங்கம், பண்ணிசை, நடனம் ஆகியவற்றுக்கு வகுப்புகள் நடாத்தப்படுகின்றது. இதற்காக எம்மிடம் அன்பளிப்பாகவும், கொள்வனவாகவும் 11 வயலின்கள்; 04 வீணைகள்; 03 மிருதங்கங்கள்; 03 புல்லாங்குழல்; 01 ஆர்மோனியம்; 01 டோலக்; 02 சுருதிப் பெட்டி; 01 கஞ்சிரா உண்டு பிள்ளைகள் மிக ஆர்வமுடன் கற்று வருவதுடன் அவர்கள் மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்காமல் இருக்க இசை உதவுகின்றது.

## கணனி அலகு

தற்கால உலகின் தேவை கருதி எமது பிள்ளைகள் அனைவருக்குமான கணனி அலகு உள்ளது. 11 கணனிகள் பிள்ளைகளின் கற்றலுக்கு பயன்படுத்தப்படுகின்றன. திருமதி.ர.கலையரசி ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். Smart Boad (43500/= பெறுமதி) கணனி அறையில் 13.10.2021ல் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் திரு. நடராசா காளிதாசன், ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர்களின் பழைய மாணவர்களினால் அவரது 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஒருலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுதியான கணனி 30.06.2021 அன்று எமக்கு வழங்கப்பட்டது. திரு. திருஞானசம்பந்தர் (அவுஸ்திரேலியா) அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி. பத்மலோஜினி வேலுப்பிள்ளை அவர்களினூடு 2,35,000/= பெறுமதிக்கு இரு கணனிகள் 08.10.2021 அன்று எமது கணனி அலகுக்குக் வழங்கினார். மேலும் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளினால் 25.07.2021ல் அன்று கனடாவிலுள்ள ஒரு உதவு நிலையத்தின் மூலம் 03 வயுடிடநவள எமக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறாக அன்பர்களின் முயற்சியாலும் எமது பல்கலைக்கழக மாணவர்கள் தமது மடிக்கணனிகளை பிள்ளைகளின் பாவனைக்கு உட்படுத்தியதாலும் 2021 May – Sep வரைபாடசாலை, வலயம், மாகாணம் என்பவற்றினால் நாள் முழுவதும் நடாத்தப்பட்ட zoom வகுப்புகளுக்கு எமது பிள்ளைகள் எவ்வித தடையுமின்றி முகம் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அதற்காக 16.07.2021 தொடக்கம் 100 GB இணையத்தொடர்பு இல்லத்திற்காக பெறப்பட்டது.

யாவருக்கும் இல்லப்பிள்ளைகள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இம்முயற்சியில் எமது பல்கலைக்கழக மாணவிகள் சமகாலத்தில் தமது பரீட்சைகள், விரிவுரைகள் என்பவற்றுக்கு தோற்றியதுடன் தரம் 05 தொடக்கம் தரம் 13 வரை ஒவ்வொரு வகுப்பை பொறுப்பெடுத்து எந்த வகுப்பையும், பரீட்சையையும் தவறவிடாமல் zoom வகுப்புகளுக்கு மாணவர்கள் தோற்ற ஒத்துழைத்தமைக்கு நன்றி.

இவர்கள் அனைவரையும் பாடசாலையுடனும் ஆசிரியர்களுடனும் இணைப்பாளராக இருந்து திறம்பட உதவி செய்த மேற்பார்வையாளர் செல்வி. உஷாதேவி சுப்பையா அவர்களுக்கும் நன்றி. zoom வகுப்புக்களுக்கு ஒழுங்கு தவறாமல் பிள்ளைகள் செல்கிறார்கள் என்பதை மேற்பார்வை செய்தும் வழிகாட்டியும் ஒத்துழைத்த மேற்பார்வையாளர் செல்வி.தேவராணி சங்கரபிள்ளை செல்வி. மோகனாம்பாள் நவநாதன், செல்வி. பவானி பொன்னையா, அலுவலக உதவியாளர் செல்வி. வைகஷ்ணவி சக்திவேல் ஆகியோருக்கும் நன்றி.

அபயகரம் அவுஸ்திரேலியாவினூடு வைத்திய கலாநிதி ஜனனி மகாதேவா அவர்கள் 2019, 2020, 2021 இற்காக வருடா வருடம் பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளைகளுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்டவுடனேயே மடிக்கணனிகளை வழங்குகின்றார் என்பது சிறப்பு. இதுவரை இவர்கள் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு 18 மடிக்கணனிகள் கிடைக்கப் பெற்றமைக்கு நன்றி கூறுகின்றோம். இதைவிட தலைவர் அவர்கள் வெளிநாடுகளுக்கு போகும்போது பல அன்பர்களினால் வழங்கப்பட்ட மடிக்கணனிகளும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது. எமது பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்த மறுநாளே அவர்களுக்கு மடிக்கணனியும் அவர்களுக்காக இல்லத்தினால் சேமிப்பு வங்கியில் சேமிக்கப்பட்ட பணத்தில் இருந்து (Smart Phone) கையடக்க தொலைபேசி வாங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரத்தியேக பாடபோதனை

இல்லப் பிள்ளைகளின் கல்வியை மேலும் வளப்படுத்தும் நோக்கமாகவும் வினைதிறன் உள்ள வகையில் கல்வியைப் பெற மாலைநேர, வார இறுதி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதன்போது தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், சமயம் ஆகிய பாடங்கள் தரமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு புவியியல், தமிழ், இந்து நாகரீகம், வரலாறு, நாடகமும் அரங்கியல் ஆகிய பாடங்கள் தரமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் இணைப்பாடவிதான பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

## இல்லத்திற்கு வருகை தந்து கற்பிக்கும் ஆசிரியர்கள்

### இடைநிலைப் பிரிவு

01. திரு. ந. காளிதாசன் - விஞ்ஞானம்
02. திரு. V. தவராசா - கணிதம்
03. திரு. S. யோகராஜா - தமிழ்
04. திரு. கு.புவிராஜ் - தமிழ்
05. திருமதி. ர. கலையரசி - தகவல் தொழில்நுட்பம், கணனி கற்கை
06. திருமதி. N. நகுலேஸ்வரி - ஆங்கிலம்
07. செல்வி. வே. பத்மலோஜினி - விஞ்ஞானம்
08. திரு. சி. ஜபாகர் - புவியியல்
09. திரு. பு. புவிராஜ் - வரலாறு

### உயர்தரப் பிரிவு

01. திரு. கு. புவிராஜ் - இந்துநாகரிகம்
02. திரு. யோ. பிரதீபன் - வரலாறு
03. திரு. பா. பாலமுரளி - தமிழ்
04. திரு. சி ஜபாகர் - புவியியல்

### இணைப்பாடவிதான ஆசிரியர்கள்

01. திருமதி. மலர்விழி கனகசபை - வீணை
02. திரு. நி.மதிருபன் - மிருதங்கம்

## சேவையடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்கள்

01. திருமதி. பாகீரதி கணேசதுரை - நாடகமும் அரங்கியலும்
02. திரு. ந. காளிதாசன் - விஞ்ஞானம்
03. திருமதி. தெய்வீக சௌந்தரராணி சௌந்தரராஜன் சர்மா - வயலின்
04. செல்வி. சந்திரிகா கணேஸ்பரன் - பண்ணிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 வது ஆண்டு விழா 07.04.2019





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. செல்வி. பத்மலோஜினி வேலுப்பிள்ளை - விஞ்ஞானம்

06. செல்வி. தேவராணி சங்கரப்பிள்ளை - விஞ்ஞானம், கணிதம்

07. திருமதி. புஷ்பலட்சுமி உமாசங்கர் - பண்ணிசை

சகலருக்கும் நன்றி தெரிவிப்பதோடு எமது பிள்ளைகள் பல்கலைக்கழக தேவைக்காக நேர்முக பரீட்சைக்கு கொழும்பு செல்லவேண்டிய சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்யும் செல்வி. அருந்ததி துரைராஜாவுக்கு நன்றி கூறுகின்றோம்.

## மாணவர் மன்றமும் பிறந்தநாள் கொண்டாட்டமும்

ஒன்றுவிட்ட ஒவ்வொரு மாதமும் கடைசி வியாழக்கிழமை நடைபெறும் மாணவர் மன்றக்கூட்டத்தில் அம்மாதத்தில் பிறந்த சகல பிள்ளைகளுக்கும் புதிய உடை வழங்கப்பட்டு மாணவர் மன்றக்கூட்டத்தில் வாழ்த்தப்படுகின்றார்கள். மாணவர் மன்றத்தில் பேச்சு, பாடல், நாடகம், பத்திரிகை வாசித்தல், பொது அறிவு போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பிறந்தநாள் கொண்டாட்ட செலவு அமரர் கந்தையா நீலகண்டன் ஞாபகார்த்தமாக அவருடைய பிள்ளைகளினால் மாதாந்தம் அன்பளிப்பு செய்யப்படுகின்றது

### 2019ஆம் ஆண்டு மாணவர் மன்றம்

01. தலைவர் - செல்வி.ஜீ.நிவேனிகா

02. செயலாளர் - செல்வி.கா.மதனப்பிரியா

03. பொருளாளர் - செல்வி.ஆ.பானுயா

04. உப பொருளாளர் - செல்வி.கி.கிருசாந்தினி

05. பத்திராதிபர் - செல்வி.ச. சந்தியபானு

### நடைபெற்ற செயற்பாடுகள்

01. ஒன்றுவிட்ட ஒவ்வொரு மாதம் கடைசி வியாழக்கிழமை பிறந்தநாள் கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது.

02. மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

03. சிறுவர்தினம், முதியோர்தினம் கொண்டாடப்பட்டது.

### 2020 ஆம் ஆண்டு மாணவர் மன்றம்

Covid - *19* நோய் காரணமாக மாணவர் மன்றம் தொழிற்பட்டவில்லை.

### 2019 ஆம் ஆண்டு இந்துமன்றம்

01. தலைவர் - செல்வி. ர. டிசானி

02. உப தலைவர் - செல்வி. ம. அட்சகி

03. செயலாளர் - செல்வி. க. தயாளினி

04. பொருளாளர் - செல்வி. இ. சங்கவி

### 2020 ஆம் ஆண்டு இந்துமன்றம்

Covid - *19* நோய் காரணமாக இந்து மன்றம் தொழிற்படவில்லை.

2020இல் வாணிவிழாவுக்கான போட்டிகள் மாவட்ட செயலக கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு 11.12.2020 மேலதிக அரசாங்க அதிபர் திரு.ம.பிரதீபன் அவர்கள் வருகைதந்து திணைக்களத்தினால் பரிசுகள் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021இல் வாணிவிழா போட்டிகள் நடாத்தப்பட்டு 26.12.2021ல் பிரதம விருந்தினராக துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைவர் செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்.

அன்றைய தினம் 2022ம் ஆண்டுக்கான மாணவமன்றம், இந்து மன்றம் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## மாணவர் மன்றத்தின் பிற செயற்பாடுகள்

01) எமது இல்லம் யோகாசன பயிற்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டு 2மாதத்திற்கு ஒரு தடவை Armetur Yoga Association (AYA) Colombo பயிற்சியாளர்கள் வருகை தந்து பயிற்சி வழங்குகின்றனர். இச் செயற்பாட்டை செல்வி.தே.சங்கரப்பிள்ளை அவர்கள் நெறிப்படுத்துகின்றார் பயிற்சியாளராக வருகைத்தரும் திருமதி. சாந்தினி செல்வரட்ணம் அவர்களுக்கு இல்லம் சார்பில் நன்றிகள். நாடளாவிய ரீதியில் இந்திய தூதுவர் ஆலயத்தினால் நடாத்தப்பட இருக்கும் யோகாசன போட்டியில் பங்கு பற்றுவதற்காக எமது பிள்ளைகள் தயார்படுத்தப்படுகின்றனர்.

02) பேச்சு ஆங்கில பயிற்சி (Spoken English) வகுப்புகள் இணையத்தினூடாக (Zoom) நடைபெறுகின்றது இதில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றுகின்றார்கள் இதற்காக அவுஸ்திரேலியாவிலுள்ள சில ஆங்கில ஆசிரியர்கள் எமது பிள்ளைகளை பயிற்றுவிக்கின்றனர். இதற்கு இணைப்பாளராக அவுஸ்ரேலியா அன்பர் திரு. பரிபுரபவன் அவர்கள் அவுஸ்ரேலியாவிலிருந்து தொழிற்படுகின்றார். பிள்ளைகள் ஆர்வமாக பங்குபற்றுகின்றனர்.

## வைத்தியசேவை

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலைக்கும் தேவையேற்படின் யாழ்போதனா வைத்தியசாலைக்கும் பிள்ளைகள் அழைத்துச்செல்லப்பட்டு கவனிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியே வைத்தியக்கோவை பேணப்படுவது குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலைக்குச் செல்லும் போதும் அங்கு எமது இல்லப்பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் போதும் இல்லப் பிள்ளைகள் என்ற மனிதாபிமானத்துடன் சிறப்புக் கவனம் செலுத்தும் வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். குறிப்பாக தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை வைத்திய கலாநிதி. ஜெயந்திரன் எமது பிள்ளைகளை இலவசமாக பார்வையிட்டு சேவை வழங்குகிறார். வைத்தியசாலைக்கு பிள்ளைகள் அழைத்தச் செல்லப்படுவதற்கு முழுமனதோடு தொழிற்படும் மேற்பார்வையாளர் க.சிவாஜினிக்கு நன்றி கூற கடமைப் பட்டிருக்கின்றோம்.

## ஆலோசனை வழிகாட்டல்

எமது இல்லப்பிள்ளைகளுக்கு தேவைப்படும் வழிகாட்டல் ஆலோசனைகள் எமது உளவள ஆலோசகர் திருமதி. பாகீரதி கணேசதுரை அவர்களினால் வழங்கப்படுகிறது. சிறுவர் உரிமைமேம்பாட்டு அலுவலர்களாலும் மாவட்ட உளசமூக இணைப்பாளர் ஆகியோர் இல்லத்தை நடத்திச்செல்வதற்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோர்/பாதுகாவலர் ஒன்று கூடல்

வருடத்தின் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை பெற்றோர் / பாதுகாவலர்கள் பிள்ளைகளைச் சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர். மாதத்தில் இரு தடவை சனி / ஞாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைகளில் தொலைபேசியினூடாக பெற்றோர் பிள்ளைகளுடம் தொடர்பு கொள்ளும் வசதியும் அவசர தேவைக்கு செய்தி அனுப்பும் ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது.

## சிவத்தமிழ் செல்வி அன்னையர் இல்லம்

முதியோரான தனித்த பெண்கள் இவ்அன்னையர் இல்லத்தில் வசிக்கினறனர். இவர்கள் ஆன்மீக நாட்டமுடையவர்கள். ஆலயத்தில் தங்களால் இயன்ற சரியைத்தொண்டுகளில், பங்கெடுப்பதோடு பெண்கள்தொண்டர் சபையில் அங்கம் வகித்து வருகின்றனர். கடந்த சில வருடங்களாக இவ் இல்லத்தில் முதிர்ந்த அன்னையர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதாலும் ஒருசிலர் இறந்து விட்டதாலும் தற்போது 04 பேர் உள்ளனர். அவர்கள் நோய், நொடியின்றி நிம்மதியாக வாழ பிராத்திக்கின்றோம்.

## அன்னையர் இல்லத்தில் வாழ்பவர்கள்

01. செல்வி.க.மகேஸ்வரி

02. திருமதி.து.தவமலர்

03. செல்வி.எஸ்.மீனா

04. செல்வி.மனோன்மணி சின்னத்தம்பி

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் வீட்டுத்திட்டம்

அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 09 வீடுகள் அன்பர்களின் உதவியாக கட்டப்பட்டு எமது இல்லத்தில் வளர்ந்து திருமணமாகி சென்ற இல்லப்பிள்ளைகளுக்கு ஏழுபேருக்கு அவ்வீடுகள் வழங்கப்பட்டு குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

## கோசாலை

பிள்ளைகளின் தேவைக்கான போதியளவு பால் பெறுவதற்காக 19 பசுக்கள் பராமரிக்கப்படுகின்றது இவற்றில் பல நன்கொடையாக பெறப்பட்டவை. இவற்றில் 6 பசுக்கள் பால் கறக்கின்றனர் 2 பசுக்கள் பால் கறக்க தயாரகின்றன. 02 இளம் பசுக்களும் 3 கன்றுகளும் பராமரிப்பில் உள்ளனர். நீலன் நாகமுத்து என்ற பணியாளர் தொழிற்படுகின்றார்.

## நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

நல்லூர் முருகப்பெருமானின் மேற்கு வீதியில் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் வெள்ளிக்கிழமை அன்னதானம், மகோற்சவ கால அன்னதானம், ஆறுமுக நாவலர் குரு பூசை, யோகர்சுவாமிகள் குருபூசை, இசைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பிராத்தனைகள், சமய சொற்பொழிவுகள், மாநாடுகள் ஆகிய பணிகள் நடைபெறுகின்றது இப்பணிகள் நிர்வாக சபை செயலாளர் திரு. நா. தவநாதன் அவர்களின் மேற்பார்வையில் நெறிப்படுத்தப்படுகின்றது. 2020, 2022 நாட்டில் ஏற்பட்ட நோய் தொற்று காரணமாக முழுமையாக எல்லா நிகழ்வுகளும் நடைபெறவில்லை.

## நன்றிக்குரியோர்

2020ஆம் ஆண்டு அபயகரத்தினால் (நாற்பது லட்சத்து இருபத்திரண்டாயிரத்து நூற்றி எழுபத்தேழு) 4,022,177.02/= தொகையும் 2021 ஆண்டு அபயகரத்தினால் ( ஐம்பத்தேழு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்று) 5,722,921.85/= அத்துடன் 07 Laptops வழங்கப்பட்டது. அபயகரம் அவுஸ்திரேலியா அவர்களுக்கும் இல்லத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அரசாங்க அதிபர்.

02. வலிவடக்கு பிரதேச செயலாளர்.

03. கிராமசேவையாளர், துர்க்காபுரம் தெல்லிப்பழை.

04. வலிவடக்கு பிரதேசசபையினர்.

05. தர்மகர்த்தா சபையினர்.

06. தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்.

07. காலத்திற்குக்காலம் நிதி அன்பளிப்பு செய்யும் நிறுவனங்கள், வெளிநாட்டு உள்நாட்டு அன்பர்கள்.

08. இல்லப் பிள்ளைகளினுடைய வாகனங்களை பராமரித்து இல்லப் பிள்ளைகளின் தேவைகளுக்கமைய ஒழுங்கு செய்யும் நிர்வாக சபை.

09. தேவஸ்தான உத்தியோகத்தர்கள், மகளிர் இல்ல உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்.

10. பத்திரிகைகளான உதயன், வலம்புரி, தினக்குரல், தினகரன், வீரகேசரி ஆசிரியர்கள்.

11. மகளிர் இல்ல கணக்குகளை காலத்துக்கு காலம் கணக்காய்வு செய்யும் செல்வேந்திரா அன்கோ பட்டய கணக்காளர் நிறுவனம்.

12. இலங்கை வங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம், யாழ்ப்பாணம்

13. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள், ஊழியர்கள்.

14. பொதுசுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்.

15. சேவை அடிப்படையில் பிள்ளைகளுக்கு கல்விபுகட்டும் ஆசிரியர்கள்.

16. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக ஒளி பரப்பி மனித நேயம் போற்றிய அன்னை

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

சைவசமய வரலாற்றில் மக்களை ஆற்றுப்படுத்தும் உன்னத நிலையமாக ஆலயம் விளங்கியுள்ளது. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கலாகாது" என்பது முதுமொழி. பல நூறு வேந்தர்கள் தம் ஆட்சிக் காலங்களில் கோவில்களைக்கட்டி கோவில்கள் வாயிலாக பக்தியையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் வளர்த்துள்ளனர். தென்நாட்டில் பல்லவ மன்னர்கள், சோழ மன்னர்கள் பின் ஆட்சிக்கு வந்த நாயக்க மன்னர்கள் வரை எண்ணிறைந்த கோயில்களை உருவாக்கி நெறிப்படுத்தினார். சோழ மன்னர்கள் கோயில்களை உருவாக்கிய தோடு அவற்றை மக்களின் வழிபாட்டுத் தேவைக்கு அப்பால் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையமாகவும் கோவில்களை நெறிப்படுத்தினர். சோழ மன்னர்கள் பெருங் கோவில்கள் பலவற்றை உருவாக்கியவர்கள். திருமங்கையாழ்வார் திருநிறையூர்ப்பதிகத்தில் "எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுவது செய்து உலகாண்ட திருக்குலத்துவளச் சோழன் சேர்ந்த கோயில் என்றும்" செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில் "என்றும் அப்பர் சுவாமிகள் பெருங்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்" என்றும் கோச்செங்கட் சோழன் மாடக் கோயில்கள் கட்டியதைப் புகழ்ந்து கூறியுள்ளனர். சோழ மன்னர் பாரம்பரியத்தில் உதித்த இராச இராச சோழன் தான் அமைத்த தஞ்சைப் பெருங் கோயிலை முற்று முழுதாகச் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான நிலையமாக அமைத்து நெறிப்படுத்தினான்.

கோயில்களை மையமாகக் கொண்டு சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை செலுத்திய சோழமன்னர்கள் கோயில்களில் நெற் களஞ்சியங்களை உருவாக்கி அவற்றில் சேமிக்கப்பட்ட நெல்லை பின் மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளனர். வைத்தியம், சோதிடம், தர்க்கம், கலையரங்கம் அனைத்தும் கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டு மக்கள் பயன்பெற்றனர். தஞ்சைப் பெருங்கோயிலில் தேவாரம் பாடுவோர் 48 பேர், உடுக்கை கொட்டி மத்தளம் வாசிப்போர் இருவர். ஐம்பதின்மருக்கு நாள் ஒன்றுக்கு. முக்குறுணி (6 படி) நெல் கொடுப்பதற்கு நிந்தம் எழுதியதாக கல்வெட்டுக் கூறுகிறது. திருமாத்தூரில் 16 கண் தெரியாத பொதுமக்களுக்கும் அவர்களுக்கு வழிகாட்டுபவர்களுக்கும் கோவில் அருகே நிலையம் அமைத்துப் பாதுகாத்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் இராஜ இராஜன் கோயில்களில் நாட்டிய நாடக அரங்கு, சிற்ப ஓவியகாட்சிச் சாலை, ஊராட்சி மன்றம், மருத்துவமனை, மாணவர் விடுதி, ஆதுலர் சாலை, ஆராய்ச்சிக் கல்வி எனப் பல்வேறு சமூகத் தேவைகளை நிறைவேற்றக் கோவில்களைப் பயன்படுத்தியமைக்கு பல்வேறு சான்று உண்டு.

ஈழத்திருநாட்டில் கோயில்களை மையமாகக் கொண்டு சமூகப்பணியாற்றிய சிறப்பு நீண்ட காலமாக நிலவியுள்ளது. குறிப்பாக கோயில்களைச் சார்ந்த மடங்களில் ஆதரவற்றோர் தங்குவதும் அவர்களுக்கு அன்னதானம் மூலம் ஆதரவளிப்பதும் வழக்கமாக இருந்துள்ளது. மேலும் சில ஆலயங்களில் சித்த ஆயுர்வேத வைத்தியம் நடைபெற்றுள்ளது. ஆலயங்களில் கல்விப்பணியும் நடைபெற்றுள்ளது.

**அன்னை சிவத்தமிழ்ச்செல்வியும் அவரது சமூக நோக்கும்**

ஈழத்திருநாட்டில் கோயிலை மையமாகக் கொண்டு சமூகப் பணியாற்றும் நெறிமுறைபற்றிய நிலையில், கோயில்கள் வெறும் வழிபாட்டு நிலையங்களாக மட்டும் செயற்பட்டு வந்த காலத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை சமூக நேசிப்புக்குரிய ஆலயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியதுடன், ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் புதியதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து சைவசமய வளர்ச்சியில் ஒரு வரலாற்று நாயகியாக அம்மையார் திகழ்கிறார். 19 ஆம் நூற்றாண்டில் நல்லை நகர் நாவலர் பெருமான் அன்னியரால் அழிக்கப்பட்ட சைவசமயத்தை நிலை நாட்ட அரும்பணியாற்றியவர். அன்னை சிவத்தமிழ்ச்செல்வியும் நாவலர் பெருமான் வழியில் தன்வாழ்வை அர்ப்பணித்து அரும்பணியாற்றினார்.

### தேவஸ்தானத்தின் வளர்ச்சிப் பாதை

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 1961 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய திருப்பணிச் சபையில் உறுப்பினராக இணைந்து தன் திருத்தொண்டை ஆரம்பித்தார். அருள்மிக்க அம்பாள் ஆலயம் பற்றைகள் நிறைந்த சூழலில் காணப்பட்டது. பொங்கல் விழாக்களும் மானம்பூ உற்சவமும் இவ்வாலயத்தில் முக்கியம் பெற்றன. உறுப்பினராகச் சேர்ந்த நாள்முதல் கோவில் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்டார். 1966 ஆம் ஆண்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தனாதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஆலயத்தை துரிதகதியில் வளர்த்தெடுப்பதற்காக நிதி தேடி வீடு வீடாகச் சென்று எல்லோரையும் அரவணைத்து நிதி திரட்டினார். திருக்கோவில் மிகவும் புனிதம் பெற்றது. ஆலயத்தில் ஆன்மிகச் சொற்பொழிவுகளை ஆற்றி மக்களை ஈர்த்தார். ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது . மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உரையாற்றச் சென்ற அன்னை அங்கெல்லாம் துர்க்காதேவியின் பெரும் புகழை எடுத்துரைத்தார். அங்கு வாழும் சைவ மக்களும் ஆலயத் திருப்பணிக்கு அள்ளிக் கொடுத்தனர். அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள், தேவஸ்தானத் தலைவராக விளங்கிய முன்னாள் மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு. து. ஜெயரட்ணம் அவர்கள் காலமான பின் 1977 இல் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெரும் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

### தேவஸ்தானத்தின் பொற்காலம்

அன்னை தலைவராக பதவியேற்ற நாள்முதல் ஆலயத்தின் வளர்ச்சி எழுச்சி பெற்றது எனலாம். 1978 ஆம் ஆண்டு அழகான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் ஓடியது. 1981 ஆம் ஆண்டு இராஜகோபுரம் கட்டிமுடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1981 ல் ஆலய முன்றலில் சைவ சித்தாந்த மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு கோயிலில் நடைபெற்றமை பாரிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என அம்மா அடிக்கடி கூறுவார்கள். குறிப்பாக ஈழத்து அறிஞர்கள், இந்திய அறிஞர்கள் தெல்லிப்பழையில் சங்கமமாகினர். மாநாட்டில் எதிர்காலச் சமகாலநிலைபற்றிய சிந்தனைகள் ஆராயப்பட்டன. பத்திரிகைகள் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாநாட்டுப் பணி தொடர்பாக ஆசிரியத் தலையங்கம் தீட்டின. கோயில்களில் வாண வேடிக்கையும் வீண் ஆரவாரங்களும் செய்வதை விட்டு சிவத்தமிழ்ச் செல்வியின் வழியில் அறிவு பூர்வமாக கோயில்களை நடாத்துங்கள் என ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு.என். சபாரட்ணம் எழுதியதை அம்மா நினைவு கூருவது வழக்கம். தேவஸ்தானத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டுடன் ஆலயத்தின் பொதுப்பணி விரிவு பெற்றது.

### துர்க்காபுரம் மகளிர் இல்லம்

சைவமாநாடு முடிந்தபின் அமரர். வித்துவான் சி. ஆறுமுகம் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்) சிவத்தமிழ்ச்செல்வியை பாராட்டி எழுதிய கடிதத்தில் ஆதரவற்றவர்களை காக்கும் அறச்சாலை உருவாகட்டும் என வாழ்த்தியிருந்தார். அன்னையின் அகத்தில் நீண்ட நாட்களாக எண்ணிய விடுதிச்சாலை உருவாக்கும் திட்டம் புத்துயிர் பெற்றது. 1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற இல்லத்தைத் தோற்றுவித்து கோயிலின் சமூகப்பணியின் மகுடமாக இக் கைங்கரியத்தை துணிந்து நிறைவேற்றினார். அம்பாளுக்கு கிடைக்கும் காணிக்கைகள் ஆதரவற்ற சீவன்களின் பாதுகாப்புக்குக் பயன்படுத்த வேண்டும் எனத் துணிகரமாக முடிவெடுத்தார். அவரது தூயசிந்தனை வீண் போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூறு பெண் பிள்ளைகள் நல்வாழ்வு பெற்றனர். எக்குறையுமின்றி அக்குழந்தைகளை நேசித்தவர் அன்னை. உலகம் முழுவதும் இத்தொண்டு பற்றிய செய்தி பரவியது. துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு பலரும் அன்பளிப்புகளைச் செலுத்தினர். அன்னை அகமகிழ்ந்தார். இன்று மகளிர் இல்லம் வெள்ளிவிழாக் கண்டு பலரை வாழ்வித்து வரலாற்றுப் பெருமையோடு தொடர்கிறது.

## ஆலய நிதியில் நோயாளருக்கு உதவுதல்

அம்பாளின் மீளா அடியவர்கள் வழங்கிய காணிக்கையில் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றிய அன்னை அவர்கள், அதே வேளையில் நோயாளர்கள் நேசிப்பில் அக்கறை செலுத்தினார்கள். குறிப்பாக புற்றுநோயில் வருந்தியவர்கள் கொழும்புக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு உதவி கேட்ட போதெல்லாம் நிதி உதவி செய்து ஆறுதல் வார்த்தைகள் கூறி வழியனுப்பி வைத்தார்கள். இதய சத்திரசிகிச்சைக் குரியவர்கள் வைத்தியசாலை அத்தாட்சியுடன் வந்தவேளை எல்லாம் அவர்களை வெறுங்கையோடு அனுப்பியது கிடையாது. அவர்களுக்கு ஏற்ற நிதியை வழங்கி உதவினார்கள். போரின் அனர்த்தங்களால் கால்கள் இழந்து துன்பப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் ஜெயப்பூர் செயற்கை கால் நிறுவனத்தின் செயற்கை கால் பொருத்தும் பணிக்கு உதவினார்கள். கடவுளின் பெயரால் ஊனமுற்றவர்க்கு உதவுவது உத்தமப்பணி என்பதனை அம்மா பலருக்கும் விளங்க வழி செய்தார்.

## வைத்தியசாலைகளுக்கு உதவி கோரும்

தெய்வத்தின் பெயரால் மக்களின் உடற்பிணி போக்கும் வைத்தியசாலைகளுக்கு தேவஸ்தானத்தின் பெயரில் உதவ வேண்டும் என்பது அம்மா இறக்கும் வரை எமக்கு எடுத்துரைத்த உன்னத பணியாகும். அன்னை அவர்கள் 1983 ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு ரூபா ஐம்பதினாயிரம் வழங்கி அவசர சிகிச்சைப் பிரிவின் அவசர தேவைக்கு பயன்படுத்துமாறு பணித்தார். இதனால் பல நோயாளர்கள் பயன்பெற்றனர். 1984 ஆம் ஆண்டு ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் பிரதான வாட்டைப் பொறுப்பேற்று ரூபா நாற்பதாயிரம் செலவில் தேவஸ்தானத்தின் பெயரில் புனர்நிர்மாணம் செய்தார். இப்புண்ணிய பணி பலரது பாராட்டை தேவஸ்தானத்துக்குத் தேடிக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து வைத்தியசாலைகள் உதவி கோரும் போதெல்லாம் தேவஸ்தானம் பல்வேறு உதவிகளைச் செய்ய அன்னை வித்திட்டார். 1996 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் மூன்று நாட்கள் அன்னை தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வேளை அம்மையார் தங்கியிருந்த பகுதிக்கு அருகே சிறுவர்கள் பிரிவும் செயற்பட்டது. 1995 இடப்பெயர்வில் யாழ். போதனை வைத்தியசாலை பலவற்றை இழந்திருந்தது. 1996 ஆம் ஆண்டு மீளவும் மக்கள் வந்து வந்து சேர்ந்தபோது யாழ். போதனா வைத்தியசாலையை இயக்க பலரது உதவி தேவைப்பட்டது. இந்நிலையில் வைத்திய கலாநிதி செல்வி. நவமலர் கனகரத்தினம் யாழ். வைத்தியசாலையின் பணிப்பாளராக விளங்கினார். அவர் கேட்ட உதவிகளை தேவஸ்தானத்தின் பெயரில் அன்னை உதவினார். இக்காலப் பகுதியில் வாட்டிலிருந்த அன்னை ஒரு விடயத்தை அவதானித்தார். சக்கர் என்று அழைக்கப்படும் சளி வெளியேற்றும் இயந்திரம் வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு. தன் அருகே ஒரு நோயாளிக்கு பொருத்தப்பட்டு இருந்த இயந்திரம் திடீரெனக் கழற்றப்பட்டு சிறுவர் பகுதியில் சிறுவனுக்கு அவசரமாக பொருத்தப்பட்டது. இயந்திரத் தட்டுப்பாட்டால் மாறி மாறி நோயாளருக்கு பொருத்தும் நிகழ்ச்சியை அன்னை அவதானித்தார். அன்று வைத்தியசாலையில் அன்னையைப் பார்க்கச் சென்ற எனக்கு அடுத்தவாரம் தனது பிறந்ததினத்துக்கு எவ்வாடம்பரமும் வேண்டாம். பிறந்தநாள் அறநிதிய வட்டிப் பணத்தில் சளி வெளியேற்றும் இயந்திரம் ஒன்று வாங்கி சிறுவர் பகுதிக்கு உடன் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டார். இப்பணி 1997 ஜனவரி 07 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இக் கைங்கரியங்கள் அன்றைய சூழலில் பெரிதும் போற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரேத வண்டில் அன்பளிப்பு**

பொதுவாக திருக்கோயில் திருப்பணிகளில் எத்தனையோ ரதங்களை வாகனங்களைச் செய்வது வழக்கம், ஆனால் யாழ். குடாநாட்டில் ஒரு கோயில் பிரேத வண்டிலை கோயிலின் பெயரால் செய்த கைங்கரியம் தனித்துவமானது. யாழ். போதனா வைத்தியசாலை சந்தித்த இடப்பெயர்வு பல்வேறு அவசிய தேவைகளை இழக்க நேரிட்டது. 1996 ல் வைத்தியசாலை குடாநாட்டில் இயங்கிய வேளை உரிமை கோரப்படாத உடல்கள் போதனா வைத்தியசாலையில் அதிகரித்தது. குறிப்பாக போராளிகள் மறைந்திருந்து குடாநாட்டில் சண்டையிட்ட காலம். தினமும் உடல்கள் உரிமை கோரப்படாமல் வைத்தியசாலையில் தேங்கும். இருவாரங்கள் காத்திருந்து விட்டு பண்ணைப் பகுதியில் வைத்தியசாலைச் சமூகம் கொண்டு போய் அடக்கம் செய்யும் வழக்கம் தொடர்ந்தது. இவ்வேளை உடம்பைக் கொண்டு போவதற்கு மூடிய வண்டில் இல்லை. திறந்த தள்ளுவண்டியில் தலையைப் போர்த்த வண்ணமாக ஊழியர்கள் தள்ளிக் கொண்டு போவார்கள். பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டது. "திறந்த வண்டியில் பிரேதம், காகங்கள் கொத்துகின்றன. ஊழியர்கள் களைத்துப் போய் ஒரு கரையில் ஓய்வெடுக்கின்றனர். "இத்துன்பகரமான செய்தியைப் படித்த அன்னை அவர்கள் அன்றே எனக்குக் கட்டளையிட்டார்கள் - இறந்தவரைக் கௌரவமாகக் கொண்டு செல்ல, மூடிய வண்டி எவ்வளவு செலவானலும் தேவஸ்தானத்தால் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு. மறுநாளே புறோமோட்டோர்ஸ் நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டு மிக நேர்த்தியான பிரேத வண்டில் உருவாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. இக் கைங்கரியம் ஆலயத்தின் பெயரால் பலரும் நினைத்துப் பார்க்க முடியாதபடி இன்றும் பேசப்பட்டு வருகிறது.

**யாழ் பல்கலைக்கழகத்துக்கு தேவஸ்தானத்தின் நன்கொடை**

யாழ். பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட அன்று உரையாற்றிய பிரமுகர்களில் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையும் ஒருவர். பல்கலைக்கழகம் எம்மக்களின் சொத்து என அவர் என்றும் போற்றுவார்.

1984 ஆம் ஆண்டு சைவசித்தாந்தத் துறையில் மிகவும் ஆர்வம் கொண்ட அன்னை ரூபா ஐம்பதினாயிரம் தேவஸ்தான அறக்கட்டளையினை உருவாக்கி யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கினார். சைவசித்தாந்தத் துறையில் சிறப்புறும் மாணவருக்கு தேவஸ்தானத்தின் பெயரில் சிறப்புக் கௌரவம் செய்யுமாறு பணித்தார். 1999 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ரூபாய் ஐம்பதினாயிரம் வழங்கப்பட்டு அவசர தேவைகளை பூர்த்தி செய்யுமாறு பணித்தார். யாழ் பல்கலைக் கழகத்தில் பண்ணிசைத் துறையை ஆரம்பிக்குமாறு வேண்டுதல் செய்த அன்னை பண்ணிசைத் துறைக்கும் ஓர் அறக்கட்டளையை பல்கலைக்கழகத்துக்கு வழங்கினார். ஆண்டு தோறும் பல்கலைக்கழகத்தில் கற்கும் வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு மாதா மாதம் ரூபா ஆயிரம் வீதம் பல மாணவருக்கு தேவஸ்தானத்தின் உதவி நன்கொடை வழங்கும் திட்டத்தை உருவாக்கி உதவினார். இன்றும் அப்பணி தொடர்கிறது. பல்கலைக்கழக அறிஞர்கள் வெளியிட்ட பல்வேறு நூல்களை தேவஸ்தானம் பிரதிகள் பெற்றுப் பின் பலருக்கு உதவ அம்மையார் வசதிகள் செய்தார்.

**திருமகள் அச்சகமும் நூல் வெளியீடும்**

நல்லை நகர் நாவலர் பெருமான் ஆற்றிய சமயப் பணிகளில் நூற்பதிப்பு பணி காலங்கடந்தும் போற்றப்படுகின்ற உன்னத பணி, அச்சு இயந்திரம் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து அழுத்தகம் உருவாக்கி ஏட்டில் அருகிக் கொண்டு இருந்த நூல்களை அச்சில் பதிப்பித்து காப்பாற்றிய சிறப்பு மறக்க இயலாது. இவ்விடயம் தொடர்பாக அம்மையார் அவர்கள் தனது நாவலர் பெருமான் பற்றிய சொற்பொழிவுகளில் உருக்கமாகப் பேசுவார்கள். 1989 ஆம் ஆண்டு பழம் பெரும் அச்சுப் பதிவு நிறுவனமான சுன்னாகம் திருமகள் அழுத்தகம் விலைப்பட்டபோது அதனை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் கொள்வனவு செய்ய அம்மையார் வித்திட்டார். அன்று முதல் பல நூல்கள் தேவஸ்தானத்தால் பெயரிடப் பெற்று பாதுகாக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச்செல்வி பிறந்த நாள் அறக்கொடை விழா 2021















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறக்கொடை விழாவும் குருபூசைதின வைபவமும் 2019















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகதிகள் வாழ்வில் ஆலயம்**

ஈழத்தமிழர் வாழ்வில் அல்லற்பட்டு அகதிகளாக இடம் பெயர்தல் என்பது சர்வசாதாரணமாகி விட்டது. எத்தனை எத்தனை தடவைகள் அப்பாவி மக்கள் அலைந்த வண்ணமாக உள்ளனர். இந்நிலையில் அகதிகள் என்ற அவலநிலை தொடங்கிய நாள் முதல் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் பொதுமக்களுக்கு உதவுவதற்கு பின் நிற்கவில்லை. அன்னையின் அரவணைப்பில் பல தடவைகள் துர்க்கை அம்மன் கோவிலில் அகதிகள் பராமரிக்கப்பட்டனர். இந்திய இராணுவ நடவடிக்கையின்போது ஆயிரக் கணக்கான அகதிகள் தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்தனர். அவர்களுக்கு உணவு கொடுத்து உறங்க இடம் கொடுத்து பிரசவ வேதனையில் துடித்த தாய்மார்களுக்கு நேசக்கரம் நீட்டி, கோயிலில் பிரசவம் நடந்தபோது அவர்களுக்கு எல்லாம் தாயாக நின்று அன்பு செய்தார். பலர் கோயில்களை பூசைக்கு மட்டும் என மட்டுப்படுத்திய காலத்தில் அல்லற்பட்டு வரும் அகதிகளுக்காக அகலத்திறந்த கோயிலாக துர்க்காதேவி ஆலயத்தை கருணையோடு நெறிப்படுத்தியவர் அன்னை. அகதிகள் புனர் வாழ்வுக்காக தேவஸ்தானம் பல்வேறு நன் கொடைகளைக் காலத்துக்குக் காலம் வழங்கியது.

**அந்தணர்களை நேசித்த அம்மையார்**

சிவாசாரியார்கள் சிறக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடையவர் அன்னை அவர்கள். துர்க்காதேவி தேவஸ்தானத்தில் குருகுலத்தை உருவாக்கி சிவாசார்ய பாரம்பரியம் காக்க முற்பட்டவர். அவர் உருவாக்கிய குருகுலத்தில் கற்றவரே இன்றும் ஆலயத்தின் பிரதம குருவாகப் பணியாற்றும் சிவஸ்ரீ. அகிலேஸ்வரக் குருக்கள். சிவாசாரியார்கள் நிறைவாக வாழ்வதற்கு ஆலய வீதியில் தேவஸ்தானத்தால் வீடுகள் அமைத்துக் கொடுத்தார். எவ்வேளையும் சிவாசாரியார்கள் உதவி கேட்டு வந்தால் உடன் உதவுவார்.

1995 இடப்பெயர்வில் தென்மராட்சி, வடமராட்சியில் அந்தணர்கள் மிகவும் அவலப்படுவதுகண்டு அந்தணர்க்கு உதவுவதற்கு ஒரு சபையை உருவாக்கினார். இடம் பெயர்ந்த இந்துக் குருமார் நலநோம்பு அமைப்பின் ஊடாக அல்லற்பட்ட சிவாசாரியார்களுக்கு உதவினார். அம்மையார் உஷன் கந்தசாமி கோவில் அருகே துர்க்கா தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ. சுந்தரேஸ்வரக் குருக்கள் வீட்டில் தங்கியிருந்தார். அச்சூழலில் நாடிவந்த சிவாசாரியார்களுக்கு தாராளமாக தேவஸ்தானத்தால் உதவினார். 1996 ஜனவரி 7ஆம் திகதி 250 சிவாசாரியர்களுக்கு தனது பிறந்த நாளில் நிதி வழங்கி அவர்கள் துயரைப் போக்கினார். அவர் செய்த இப்பணியை சிவாசாரியச் சமூகம் என்றும் போற்றுவர்.

**கல்வி நிதி**

எந்தவொரு திருக்கோவில்களும் சிந்திக்காத விடயங்களை அம்மையார் சிந்தித்து செயல் வடிவம் கொடுப்பார். பல ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களுக்கு மாதந்தோறும் வழங்கும் கைங்கரியத்தை தேவஸ்தானத்தில் ஏற்படுத்தினார். இதனால் பல ஊர் ஏழை மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

**பாடசாலைகளுக்கு நிதி உதவி**

தேவஸ்தானத்தின் பெயரில் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பெரும் பகுதி பாடசாலைகளின் பரிசளிப்பு விழாவுக்கான நன்கொடை, விளையாட்டுப் போட்டிக்கான நன்கொடை என்பவற்றுக்கு கணிசமான தொகை வழங்கப்பட்டு வருகிறது. எம் மண்ணில் கல்விச் செல்வம் நிலைக்க கோயில் உதவுவது கடமை என நிலை நாட்டியவர் அன்னை. பல்கலைக்கழகத்தில் கற்கும் ஏழை மாணவர்கள் சிலருக்கு மாதா மாதம் உதவும் திட்டமும் அன்னையால் அறிமுகம் செய்யப்பட்டது.

**விதவைப் பெண்கள், மற்றும் உதவியற்ற பெண்களுக்கான உதவி.**

இளம் வயதில் கணவரை இழந்து குடும்பச் சுமையோடு வாழும் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதா மாதம் உதவி வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. மேலும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் தேவஸ்தானத்தில் திட்டங்கள் தொடர்ந்து உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்னதானப் பணி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செவ்வாய், வெள்ளி நாட்களிலும், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் வெள்ளிதோறும் தேவஸ்தானம் அன்னதானம் வழங்கும் திட்டத்தை அன்னை அவர்கள் தோற்றுவித்தார்கள். ஒரு மனிதன் போதும் என்று சொல்லக்கூடிய நிகழ்வு நிறைவாகச் சாப்பாடு வழங்கும்போது மட்டுமே என அன்னை அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். அன்னதானம் வழங்கும் ஒவ்வொரு வேளையும் அவ்விடத்தில் வந்து நின்று கண் காணிப்பார்கள். நிலத்தில் இருக்கமுடியாத மூத்தோரைக் கண்டால் கதிரையில் இருத்தி உணவு பரிமாறுமாறு கட்டளையிடுவார்கள். இறக்கும்வரை அன்னதானம் வழங்கும் ஆலய அன்னசத்திர மண்டபத்தில் நின்று ஆற்றுப்படுத்தியவர் அன்னை. கோவில் பணத்தில் ஒருவரது பசிபோக்குவது முதன்மையான தர்மம் எனச் சொல்லி முக்கியத்துவம் கொடுப்பார். நல்லூர் உற்சவகாலத்தில் இருபத்து நான்கு நாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் கொடுக்க ஏற்பாடு செய்தார். இராமகிருஷ்ண மிஷனால் கோவிலுக்கு வழங்கிய பெரும் கிடாரம் அன்னபூரணி என்று பெயர் சூட்டிப் பாதுகாத்தார் அக்கிடாரத்துக்கு திருநீறு சாத்தி தேங்காய் உடைத்து அடுப்பேற்றும் காட்சியை அகமகிழ்ந்து முக்கிய வைபவமாக நெறிப்படுத்தினார். அன்னதானத்தின் போது ஒரேநேரம் பலர் சாப்பிட வசதி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 101 அடி நீளத்தில் அன்னசத்திரம் அமைப்பித்தார். இத்தகைய பொதுச்சிந்தனைகள் அம்மையாரின் அற்புதத் திட்டங்கள் எனலாம்.

### அறநெறிப் பாடசாலைத் திட்டம்

தேவஸ்தான வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தின் சுற்றாடலில் வசிக்கும் மாணவர்கள் அறச்சிந்தனைகளைக் கற்க தேவஸ்தானம் ஊடாக ஏற்பாடு செய்தார். மாணவர்களுக்கு உடை, வகுப்பு நாள்களில், சிற்றுண்டி, தேநீர் வசதிகள் செய்து கொடுத்து ஊக்குவித்தார்.

### சமூகத்தை நெறிப்படுத்தும் நற்சிந்தனை

வாரந்தோறும் ஆலயத்தில் காலை, மாலை நேரங்களில் சைவ நற்சிந்தனைக்கும் கூட்டுப் பிரார்த்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். நற்சிந்தனைகளூடாக சமயம் மட்டுமல்ல சமூகத்தில் நாம் எவ்வாறு அறநெறியில் வாழவேண்டும் என்பதை காலந் தவறாது போதித்தல் ஒவ்வொரு கோயில்களும் பிரதான கடமையாக கொள்ள வேண்டும் எனக் கூறுவார். மக்களுக்கு நல்வாழ்வுக்கான கருத்துக்கள் எடுத்துரைக்க வேண்டும் என அம்மையார் அறை கூவல் விடுத்தார். சில ஆலயங்கள் அம்மையார் வழியைப் பின்பற்றின.

### இறுதிக்கிரிகைகளுக்கு உதவுதல்

பல ஏழைகளின் மரணவீட்டு அந்திமக் கடமைகளுக்குதேவஸ்தானம்உதவ அம்மையார் வழியேற்படுத்தினார். இத்தகைய கடமையை யாரும் நினைத்துப் பார்க்கமாட்டார்கள். இதுமட்டுமன்றி பல தடவைகள் மயானங்களின் புனர்நிர்மாணத்துக்கு கோவிலின் பெயரால் உதவினார். இப்பணி என்பது சமூக நேசிப்பின் உச்சநிலையின் அடையாளங்கள் எனலாம். ஆலயத்தை மையமாகக் கொண்டு தெய்வத்திருமகள் அன்னை ஆற்றிய சமூகப்பணிகள் எல்லையற்றன. எவ்வளவோ விடயங்களை இங்கு குறிப்பிட்டமைக்கு அப்பாலும் அம்மையார் செய்தார்கள். கோவிலுக்கு அன்பளிப்பாகக் கிடைத்த பொருட்கள், கோவில் தேவைக்கு அப்பால் பயனற்று இருப்பதை விட, இல்லாத கோவிலுக்கு கொடுத்தல் மிகநன்று எனக் கூறி பொருட்களைப் பகிர்வார். இதுபோலவே சமூகத்தின் தேவையை நிறைவு செய்ய தெய்வத்தின் பெயரால் ஆக்கபூர்வமான பணிகளாற்றி உலகளாவிய ரீதியில் தன்னிகரில்லாத தலைவியாக ஆளுமை மிக்க ஆன்மீக வழிகாட்டியாக விளங்கிய அன்னை சாதாரண ஆத்மா அல்ல - தெய்வீக ஆத்மா அவர் எமக்குத்த நல் வாழ்வை நாம் தொடர்வதே அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன். எனவே ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் அன்னையின் நெறியைப் பின்பற்றுவார்களாயின் இவ்வையகம் நல்ல வண்ணம் வாழும்.

**நன்றி – தெய்வத்திருமகளின் வாழ்வும் பணியும்– 2009 என்னும் நூலில் 78 பக்கம் தொடக்கம் 84 பக்கம் வரை வெளியிடப்பட்ட கட்டுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வி. காமாட்சி கந்தையா அவர்களின்
## 10ஆவது ஆண்டு நினைவஞ்சலி



சிறிலங்காவின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் இனிய வளங்கொண்ட இளவாலைப் பகுதியில் மாரீசன்கூடல் என்னும் கிராமத்தில் 1940ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 9ம் திகதி கார்த்திகேசு கந்தையாவிற்கும் முருகேசு சின்னம்மாவிற்கும் இரண்டாவது மகளாக செல்வி காமாட்சி கந்தையா அவர்கள் அவதரித்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், மேற்படிப்பை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் கற்றார், பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவானார்.

இவர் பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்தார். பின்னர் மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலையில் தொண்டர் ஆசிரியராக ஆங்கிலம் கற்பித்தார். 1985ஆம் ஆண்டு பத்திரிகையில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு கல்வியறிவுள்ள இல்ல மேற்பார்வையாளர் தேவையென விளம்ரமொன்று வந்தது. சமயப்பற்று மிகுந்தவர் என்பதால் அதற்கு விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பத்தை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஏற்றுக்கொண்டார். அத் தொண்டில் அவருக்கு பூரண திருப்தி. அன்று முதல் 10.08.2012 வரை 27 வருடங்கள் அத் தொண்டையே கடைமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டிற்கமைய மேற்கொண்டு கடமையாற்றும் போதே அமரரானார். காலத்தில் கள்ளங்கபடமின்றி நேர்மையாக தொழிலாற்றுகின்றார் என்று துர்க்கா துரந்தரியினாலும், அங்குள்ள நிர்வாக சபையினராலும் பாராட்டப்பட்டவர். அனைத்து இல்லப் பிள்ளைகளையும் அரவணைத்த அன்பின் ஆழத்தை அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அப்பிள்ளைகளின் கதறியழுத காட்சியினால் யாவரும் அறிந்து கொண்டனர். துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் கை விளக்காக நின்று பிள்ளைகளுக்கு பாதை காட்டிய ஆத்மா செல்வி காமாட்சி கந்தையா அம்மையார் மனிதர்களில் மாணிக்கம். தன்னை அர்ப்பணித்துச் சேவை செய்த பிறவி. அகத்தில் அழுக்கற்ற ஈர நெஞ்சுடைய இனிய பிறவி.

துர்க்காபுர இல்லப் பிள்ளைகளின் துயர்துடைத்த தாயாகி, தாங்குகின்ற தெய்வமாகி மங்காப் புகழுடனும் அம்மனின் அருளுடனும் அமரராகிவிட்ட அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.


2022ஆம் ஆண்டு ஆவணி மாதம் அவர் அமரராகி 10வருடங்கள் நிறைவடைகின்றது. அன்னாரின் தியாக வாழ்வின் பின்னரான ஒரு தசாப்தத்தினை அவரின் நினைவுகளுடன் வாழும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் தலை வணங்கி அஞ்சலி செலுத்துகின்றது.

ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. மஞ்சுளா உதயகுமார் அவர்கள்
## 10ஆவது ஆண்டு நினைவஞ்சலி



சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் துர்க்காபுரம் மகளிர் இல்லம் 03.02.1982 ல் ஸ்தாபிக்கப்பட்ட போது இணைந்த 09 பிள்ளைகளில் ஒருவர் அமரர் திருமதி. மஞ்சுளா உதயகுமார். இல்லத்தில் வாழ்ந்து கல்வி கற்று இல்லற வாழ்க்கையில் இணைந்து தான் வளர்ந்த இல்லத்திற்கு நன்றிக்கடனாக ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அலுவலகத்தில் நிர்வாக கடமைகளில் ஈடுபட்டு வாழ்ந்தவர். இல்லற வாழ்க்கையில் ஒரு பெண் மகவைப் பெற்று குடும்பமாக வாழ்ந்தாலும் தேவஸ்தான அலுவலக நிர்வாகத்தில் தேவையான உதவிகளைச் செய்து வந்தவர். சிவத்தமிழ்ச்செல்வி உயிரோடு இருந்தவரையில் அவருக்கு மிக உதவியாக ஆத்மார்த்தமாக பணிபுரிந்தவர். 'மஞ்சு', 'மஞ்சக்கா' என எல்லோராலும் விரும்பி அழைக்கப்பட்டவர். தனது இரண்டாவது குழந்தை பிரசவத்தில் 31.05.2012 அமரரானார். அவருடைய ஆளுமைக்கும் தொண்டுக்கும் அவரது 10 ஆவது நினைவு ஆண்டில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் தலை வணங்கி தனது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



சைவ ஆன்மிகத் துறவி, அருட்சகோதரி. ஜதீஸ்வரி அவர்கள்

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள் 01.02.2022 திகதியில் இவ்வுலகை விட்டு நீத்தார். இவர் மலையகத்தில் பூண்டிலோயா எனுமிடத்தைச் சேர்ந்தவர். நன்கு அறியப்பட்ட மலையக பெண் எழுத்தாளர். குழந்தைகளுக்கான பாட்டுக்கள், கதைகள் என நிறைய ஆக்கங்கள் வெவ்வேறு சஞ்சிகைகள், மலர்களில் வெளிவந்துள்ளன. எமது இல்லத்தில் இணைந்து இல்லப்பிள்ளைகளை கட்டுரைகள், பாடல்கள், பேச்சு, அபிநயப்பாடல்கள் போன்றவற்றில் ஈடுபடுத்துவார். கதை கூறல் போன்ற நிகழ்ச்சிகளைப் பழக்கி மேடையேற்றுவார். மகளிர் இல்ல ஒவ்வொரு ஆண்டு விழாவிலும் சிறிய பிள்ளைகளின் ஒரு நிகழ்வு அவர் தயாரிப்பில் மேடையேறும். எமது 37ஆவது ஆண்டு விழாவிலும் ஒரு நிகழ்வு மேடையேறியது. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாது. அவருக்கு துர்க்காபுரம் மகளிர் இல்லம் தனது இதய அஞ்சலிகளை செலுத்துகின்றது.

## எமது இல்லத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் போது இறைபதம் எய்திய பிள்ளைகள்



அமரர். தி. கீர்த்திகா



அமரர். ச. தனுசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைக்கும் சமூகப் பணிக்குமுள்ள வேறுபாடுகளும் சமூகப்பணியினூடாக சமுதாய விருத்தியை ஏற்படுத்தலும் ஒரு பார்வை



**சமூக சேவை** (Social Service) என்பது ஒரு தன்னார்வபணி அல்லது பணம், பொருள் என எதுவித கைமாறும் பெறாமல் ஒரு நோக்கத்துக்காக தமது உழைப்பினை வழங்குவதாகும். உறவினர்களுக்கு உதவுவது முதலாக அமைப்புக்களில், படை துறைகளில், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது வரை எனப் பல்வேறு துறைகளில் சமூகசேவைகள் செய்யப்படுகின்றன.

**சமூகப் பணி** (Social work) என்பது தனிநபராகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களாலோ சமூக நலன் கருதியும் மேம்பாடு கருதியும் செய்யப்படும் சேவையாகும். சமூகப் பணி என்பது "மனிதனின் சமூக செயற்றிறனை உருவாக்குவதாகும்" என வேர்னர் போம் (Werner WBoehmn) என்ற அறிஞர் கூறுகின்றார். மேலும் "சமூகப் பணி மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்து கொள்வது அல்லது சிக்கல்களை தாங்களே எவ்வாறு வென்று முன்னேறுவது என்பதற்கு வழிகாட்டுவது என்ற தத்துவத்தின் கீழ் செயற்படுகின்றது" என ஸ்ரோப் (Stroup) என்ற அறிஞர் வரையறுக்கின்றார்.

**சமூக சேவையின் நோக்கமே** மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் பிற வாழ்க்கைத் தேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்து இந்த மனித சமூகம் நிம்மதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதாகும்.

**சமூகப் பணியின் இலக்குகளாவன**

01. முற்கூட்டிய பாதுகாப்பு
02. உளவளத் துணை வழங்குதல்
03. புனர்வாழ்வளித்தல்

சமூகப் பணியின் மூலம் சமுதாயத்தில் உள்ளவர்களை சமூகப் பிரச்சினையிலிருந்து பாதுகாத்து பிரச்சிகைளால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் இடையே பணியாற்றி அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து மனித வள விருத்தியை மேம்படுத்தலாகும்.

**ஒரு சமூக சேவையாளருக்கும் சமூகப் பணியாளருக்குமுள்ள தனித்துவமான அம்சங்களை நோக்குவோம்.**

**சமூக சேவையாளர்** என்பவர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் சமுதாயத்துக்காக அல்லது இயற்கை சூழலை பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகளுக்காக ஊதியம் எதிர்பாராமல் உழைப்பவர் ஆவர். பல சமூக சேவைளார்கள் அரசு சாரா அமைப்பு மூலம் சேவை செய்கிறார்கள். சில வேளைகளில் இவர்கள் **முறைசார்ந்த சமூக சேவையாளர்** என அழைக்கப்படுவர். அதே சமயம் பொதுச் சேவைக்காக தனது பணத்தை செலவு செய்திருந்தால் அந்த (செலவு செய்த) சொந்தப் பணத்தை மட்டும் திரும்பப் பெற்றுக் கொள்வர்.

**சமூகப் பணியாளர்** சமூக சேவகர், சமூகப் பணி மேலாளர், மன நல சமூக ஆர்வலர், குழந்தைகள் நல சமூகப் பணியாளர், முதியோர் நல சமூகப் பணியாளர், குழந்தைகள் கற்றலின் குறைபாடுகள் களையும் சமூகப் பணியாளர், மது, மருந்து, போதை அடிமையில் இருந்து புனர்வாழ்வு அளிக்கும் சமூகப் பணியாளர், தடயவியல் சமூகப் பணியாளர், சமூக மேம்பாட்டு ஆலோசகர்கள், மருத்துவ சேவைத் தொண்டர்கள், மனித உரிமைக்கான சமூக சிந்தனையாளர்கள், பன்நாட்டு சமூகப் பணியாளர்கள் போன்ற பதவிகளிலிருந்து பொருளாதாரம், கல்வி, சுற்றுச் சூழல், சமூகவியல் சட்டம், மருத்துவம், தத்துவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், மானுடவியல், மனநல மருத்துவம் மற்றும் ஆலோசனைகள் மூலம் சமூக சுதந்திரம், மனித உரிமைகள், சமூக முன்னேற்றம், சமூக மாற்றம் என்பவற்றை முன்னெடுத்துச் செல்பவர்களாக இருப்பர்.

**சமூக சேவையினதும் சமூகப் பணியினதும் பண்புகள்/ இயல்புகள்** பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது. அதாவது சமூக சேவை என்பது தேவையானவர்களுக்கு உதவி செய்வதையே குறிக்கும். இங்கு சேவை நாடிகள்/ பயனாளிகள் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு குறைவு. ஏனெனில் சமூக சேவையில் ஈடுபடுபவர்களே சேவைகளை வழங்கலில் திட்டமிடல், தீர்மானமெடுத்தல், அமுல்படுத்தல், மதிப்பிடல்போன்றவற்றில் ஈடுபாடுவதால் மக்களின் பங்கு குறைவாகவும் வலுவூட்டல் குறைவாகவும் இருக்கும். ஆனால் குறுகிய காலத்தில் தேவையானவருக்கும் ஆறுதலளிப்பதாக மற்றும் உடனடி தேவை பூர்த்தி அடைவதாகவும் இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக தாமாகவே தம்மை பாதுகாக்க முடியாதவர்கள் உதாரணமாக சிறுவர்கள், மனநலம் குன்றியோர் ஆகியோரை மனபூர்வமாக ஏற்று மனிதாபிமான வகையில் ஒழுக்கசார், சட்டசார் பாதுகாப்புக்களை ஏற்படுத்தி சமூகப் பணியினூடாக சமுதாய விருத்தியை ஏற்படுத்த முடியும்.

உலக சமூகபணி தினம் மார்ச் 15 என்பதை மட்டும் வெறுமனே அனுஷ்டிக்காமல் சமூகப்பணினூடாக சமுதாய விருத்தியை ஏற்படுத்த ஒவ்வொரு தனிமனிதனும் முயற்சிக்க வேண்டும்.

பணமின்மை, நேரமின்மை, மனமின்மை, திறன்இன்மை போன்ற காரணங்களைக் காட்டி பொதுச்சேவை செய்ய மற்றும் தொண்டர் நிறுவனங்களில் இணைந்து பணியாற்ற பலர் முன்வருவதில்லை. இது வருத்தப்படக்கூடிய விடயம். இந்த நிலை மாறவேண்டும். மனமுள்ள ஒவ்வொருவனும் விமர்சனங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு சமூகப் பணியில் இறங்கினால். நம் நாடும் பிறநாடுகளுக்கு இணையாக வளர முடியும்.

சமூக சேவையாளர்களுக்கும் சமூகப் பணியார்களுக்கும் தோள் கொடுப்போம். இலங்கையைப் பொறுத்த வரையில் பசி நோய்கள், கல்வி அறிவு கிடைக்காமை எனப் பல உயிர் போகும் விடயங்கள் உள்ளன. இவற்றை ஒரளவாவது இல்லாமல் செய்து நாடு வளமுற **சமூகசேவையாளர்களுக்கும் சமூகப் பணியாளர்களுக்கும்** தோள் கொடுப்போம்.

**திருமதி. சிவமலர் அனந்தசயனன்,**
அதிபர் துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
(சைவ ஆன்மீக விடுதிச்சாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுப்படுத்தும் ஆற்றுகைகள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்காய் மண்ணில் மானுடப் பிறவி எடுத்த மனிதகுலம் நாங்கள். விசேட, அச்சம் நிறைந்த, விலங்கினத்தின் வழித்தோன்றல் நாம் என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். செம்மைப் படுத்தப்பட்ட சிறப்பான படைப்பே மனிதனாவான். அந்த வகையில் மனம் என்னும் உருவமற்ற ஒன்று நம்மை வழிநடத்திச் செல்வதால் நாம் மனிதனாக நடமாடுகின்றோம். உளம், உள்ளம், மனம் என்று சொற்பதங்களால் அழைக்கப்படும் உளமானது ஆழ்கடலை விட ஆழமாகவும் காற்றை விட வேகமானதும் பிரபஞ்சத்தையே சுற்றிவரும் வல்லமை பொருந்தியதாகவும் பேசப்படுகின்றது. ஆம்! அத்தகைய உள்ளமானது அரங்க வெளி போன்ற பரந்துபட்ட களமாக அமைந்து பல்வேறு காட்சிகளை நிமிடத்திற்கு நிமிடம் அரங்கேற்றிக் கொண்டே இருக்கின்றது. அப்படி அரங்கேறும் ஆற்றுகைகள் நமக்குள் மட்டும் நிகழ்வதில்லை. எம்மைச் சூழவுள்ள ஆலயங்களில் அன்றாடம் நிகழும் ஆறு காலப் பூசைகள், மகோற்சவங்கள் என்பன அமைதி தேடும் மனங்களை ஆற்றுப்படுத்தவல்லன. பக்தி பரவசமாக எமை மறந்த நிலையில் நாம் தரிசனம் செய்கிறோம் என்றால் அந்த நிமிடத்தில் நாம் பரவச நிலைக்கு உள்ளாவதை உணர முடியும். தெய்வ சந்நிதியில் நிகழும் தீப, தூப அபிஷேக அலங்காரங்கள் அனைத்தும் கலைத்துவ மகிமை கொண்டு ஆத்மார்த்த நிறைவை அளிக்க வல்லன. காண்டாமணி ஓசையிலிருந்து மங்கல இசை வரை தெய்வாம்சம் பொருந்தியவை. மந்திர உச்சாடனங்கள் அகத்தையும் புறத்தையும் புனிதமாக்க வல்லன.

குழப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் கோயில் செல்லும் மரபு இந்து மத வழிபாட்டில் முதலிடம் பெறுகின்றது. வேண்டும் வரம் அருளுவதும் அதற்கு நேர்த்திகள் செய்வதும் அது நிறைவேறிய பினபு அதற்கு இறைவனுக்கு நன்றி தெரிவிப்பதும் படித்தவர் பாமரர் என்ற வேறுபாடின்றி எல்லா மட்டங்களிலும் ஆற்றப்படுவதைக் காணலாம். கையறு



ஏற்படும் போது மனிதன் கடவுளைக் கூவி அழைப்பதென்பது நிலை இறைநம்பிக்கை உள்ளோர் நடைபெற்றுக் மத்தியில் கொண்டே இருப்பதை நாம் அன்றாடம் காண்கின்றோம்.

மனச்சாட்சியின் குரலே இறைவன் என்று குறிப்பிடும் அளவிற்கு மனச்சாட்சிக்கு விரோதமாக எந்த ஒரு பாவ காரியமும் செய்யாதிருக்கும் வகையில் குழந்தைகளை வளர்க்கும் பெரியவர்களை இன்றும் காண்கின்றோம். உதவிக்கு அழைக்கும் தெய்வத்தை ஒரு உறவினராக எண்ணித் தமது மனக் கஷ்டங்களைக் கூறி கண்ணீர் மல்கிக் கையெடுத்து கும்பிடும் காட்சிகள் காலாதி காலமாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

ஆன்மா இலயிக்கும் இடமே ஆலயம் என்னும் வாக்கிற்கிணங்க வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் இத்தகைய வழிபாட்டு மரபில் இணைந்து வாழ்வியலின் பாதையை செம்மைப்படுத்த பெற்றவர்கள் முன்மாதிரியாக அமைவது அவசியம்.

ஆலயக் கிணற்று நீரையே கங்கா, ஜமுனை, சரஸ்வதி, நர்மதா, கோதாவரி என்னும் புனித நதிகளின் பெயரை உச்சரித்து அதனை சங்கினில் நிறைத்து அபிடேகம் செய்வதன் மூலம் புனித நதிகளின் தீர்த்தமாக ஆவாகனம் செய்வதை தெய்வீகமாக நாம் அனுபவிக்கின்றோம். நம்பிக்கை உள்ளவர்களுக்கு அதுபுனித தீர்த்தம், மூலிகைகள் கலக்கப்பட்ட அபிஷேடக தீர்த்தம். மனித மனங்கள் புனிதம் பெற ஆலய தரிசனம் ஒரு அற்புதமான வரப்பிரசாதம் என்பதை சிறு பராயத்திலிருந்தே வளர்த்துக்கொள்வது பெரியவர்களின் தலையாய கடமை என்பதை மனதில் கொண்டு பணி செய்வோமாக.

**திருமதி. பாகீரதி கணேசதுரை,**
ஓய்வு நிலை ஆசிரியர்,
உளவளவாளர்.
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**28.05.2021இல் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் மணி விழா மலர் (திருமுகம் 60) ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வெளியீடு**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18.12.2021 செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகனின் 'திருமுகம் 60' வைபவ ரீதியாக வெளியீட்டு நிகழ்வு

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாற்பது ஆண்டுகள் நற்பணி

சிவத்தமிழ்ச் செல்வியின் சிந்தையில் உதித்த இத்
தவத் திருப்பயனே தரணியிலுள்ளோர் யாவரும்
உவப்புற உழைத்திட்ட இம்மகளிர் - இல்லமே
அவப்பொழுதல்ல ஆறு. திருமுருகனின் காலமுமே

நல்ல தலைமையும் நற்செயல்களும் இன்றுபோல் என்றும்
எல்லையில் இறையருள் எங்குமே பொலிவுறவே
தெல்லி நகர் உறை திருவே துர்க்கை அம்பிகையே
வல்லமை தந்து உனை நம்பினோர்க்கு நல்வழி காட்டிடு தாயே

ஆதரவற்ற மகளிரை அரவணைத்து ஆற்றுப்படுத்தியே
பேதமை அற்றிட பெரும் கல்வியும் ஊட்டியே
சீதனமற்றோர்க்கு சீர்வரிசையுடன் வாழ்வமைத்து
சாதனை நிகழ்த்தி சரித்திரம் படைக்கும் இல்லமே வாழி

பெண்களுக்கெனவே பெருந்தகை இராமநாத வள்ளல்
எண்ணியே எடுத்த கல்லூரியிலே என் காலமதில்
மண்ணிலே நல் அறிவுள்ள மகளிர் பலர் பல்கலை சென்றிடவே
நண்ணினாள் எனக்கு நல்வரமே துர்க்கை அம்பாளே.

நாற்பதாண்டுகள் நங்கையருக்காய் நற்பணி புரிந்து
நூற்பயனோடு தோற்றிடும் பண்புநிறை மகளிராய்
ஏற்றிடுவர் எத்திசையோரும் எம் துர்க்காபுர மகளிரையே
போற்றிடுவோமே பன்னூறாண்டுகள் உன் பணி நிலைக்கவே

**திருமதி. கமலராணி கிருஸ்ணபிள்ளை,**
முன்னாள் அதிபர்,
யா/ இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு மகளிர் இல்லம்

**"வாழிய வாழியவே என்றென்றும்**

**மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று"**

என்ற இல்லக் கீதத்தின் பல்லவிக்கு அமைய தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்றும் மாண்பு மிக்க இல்லமாக வளர்ந்து வருவதற்கு மேற்பார்வையாளரான செல்வி பொன்னையா பவானி ஆகிய நான் அதன் வழி நின்று பணியாற்ற கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவியின் கருணையில் இயங்கிவரும் துர்க்காபுரம் மகளிர் இல்லமானது ஓர் ஆன்மீக விடுதிச்சாலையாகவும் அம்பாளின் அருட்கிருபையால் ஒரு பண்பாட்டு விழுமியங் களுடன் கூடிய மாண்புமிகு இல்லமாகவும் விளங்குவதால் இங்கு மேற்பார்வையாளர்களாக கடமையாற்றுவது பூர்வ ஜன்மப்பலன் என்பதை இட்டு பெருமை அடைகின்றேன்.

"யாமறிந்த மொழிகளுள் தமிழ்மொழி போல் இனிதாவதொன்றும் யாம் காணோம்" என்று பாரதியார் கூறிய சிறப்புமிக்க தேமதுரத் தமிழையும், மேன்மைகொள் சைவ நீதியையும் தமது இரு கண்களாக கொண்ட எமது அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் அவர்களைத் தொடர்ந்து எமது தற்போதைய தேவஸ்தான தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களும் நீதி வழுவாது நெறி நின்று நிர்வகிப்பதில் எமது மகளிர் இல்லப் பிள்ளைகளும் மேற்பார்வையாளர்கள் பணியாளர்களும் இங்கு பணி செய்து பயன் பெறுவது பேரின்பமாகும்.

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற விருது வாக்கிற்கு அமைய இயங்கிவரும் எமது மகளிர் இல்லமானது 1982.03.02 அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் அடிக்கல் காட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுயதிறன் நிறைவுடன் உயர் மனித விழுமியங்களைக் கொண்ட தாய் தலைமைத்துவ பண்பு நிலை விருத்தி சார் மகளிர் உருவாக்கம் என்ற தூரநோக்கு உடையதாக எமது மகளிர் இல்லம் செயற்பட்டு வருகின்றது. இதன் பணியை உற்று நோக்குவோமாயின் தாங்கும் திறன் அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி ஆகியவற்றை வழங்குவதன் மூலம் வாழ்வாதார வளம் குறைந்த பெண் பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத் தேவைகளைப் பெற்று தமது எதிர்கால சமூக சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியதாக சமூக அந்தஸ்தைப் பெற்று அதன் மூலம் உயர்ந்த சமூக கட்டமைப்பை உருவாக்கவும் உடல், உள ஆன்மீக ஆற்றுப்படுத்தலுக்குமான மையமாகவும் இவ் இல்லம் பயணிக்கிறது என்பது ஒரு பெருமைசேர் விடயமாகின்றது.

**"அருவினை என்ப உளவோ – கருவியான்**

**காலம் அறிந்து செயின்"**

என்ற திருக்குறளுக்கு அமைய ஏற்ற காலத்தில் ஒரு செயலை செய்தமையானது கவனத்திற்குட்பட்டதாகும். ஏனெனில் எமது இலங்கை நாடானது கடந்த பல தசாப்தங்களாக பல இன்னல்களுக்கும், பல அசாதாரண சூழ்நிலைகளுக்கும் இயற்கையின் சீற்றங்களுக்கும் உட்பட்டமையானது, மக்கள் மத்தியில் பல சங்கடங்களையும் சீர்குலைவுகளையும் ஏற்படுத்தி உள்ளது. இதனால் மனிதத்துவம் மதிக்கப்படுகின்றனவா, மனித உரிமைகளும், சிறுவர், பெண்கள் உரிமைகளும் பேணப்படுகின்றனவா? மக்களின் வாழ்வாதாரங்கள், பிரச்சனைகள் அபிவிருத்திகள் பூரண நிலையை எய்துள்ளனவா என்பன யாவும் கால காலம் கேள்விக்குரியதாகவும் ஒரு பேசுபொருளாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறான காலத்தில் எமது மகளின் இல்லத்தின் உருவாக்கமும் அதன் செயற்பாடுகளும், பணிகளும் பலரின் சுமையை குறைக்க வல்லதாக அமைந்துள்ளமையானது சாலப் பொருத்தமானது என எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அசாதாரண சூழ்நிலையில் சமூக மட்டத்தில் ஏற்படும் பல்வேறு விதமான பாதிப்புகள், பிறழ்வுகள், பழக்கவழக்கங்கள் நெருக்கடிகள் மற்றும் குடும்ப சூழல் பின்னணிகள் சிறுவர்கள் மற்றும் பெண்களை உடல் உள ரீதியான தாக்கத்திற்கு வழிவகுக்கும். இவ்வாறான பிறழ்வுகளால் எதிர்கால சமூக வளர்ச்சி பின்னடைவை சந்திக்க நேரிடும். இந்த மன உளவியல் தாக்கம் மற்றும் உணவுத் தவிர்ப்பானது தார்மீக குழப்பத்துடன் தொடர்புடையதாகிறது. இது அவர்களது சமூக வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அவர்கள் பங்களிக்காததற்கும் காரணமாக அமையலாம். அவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்வியலில் ஆர்வம் இல்லாமல் இருப்பார்கள். இது தற்கொலை மற்றும் சமூக குற்றங்களில் ஈடுபட வழிவகுக்கும். இவையனைத்தும் சமூக கட்டுப்பாட்டின் செயல்முறையை மிகவும் சிக்கலாக்கும்.

இந்த சமூக நோய்க்கு என்ன தீர்வு என்பது பெறுமதி வாய்ந்த கேள்வியாகும். பிள்ளைகளுக்கு ஒழுக்கம், நெறிமுறை, கலாசாரம் மற்றும் மத விழுமியங்களை வழங்குவதோடு அந்த நெறிமுறைகளின் பிரகாரம் அவர்களுக்கு வாழ்வை முன்னோக்கி வழிகாட்டுவதே சிறந்த தீர்வாகும். இதனை உணர்ந்த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தமது நிர்வாகம் ஊடாகவும் மற்றும் மகளிர் இல்ல கட்டமைப்பின் நிர்வாக மூடாகவும் மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள் மூலம் தமது சமூகப் பணிகளை தலைமைத்துவ பண்புகளுக்கு அமைய வழி நடத்திச் செல்கின்றனர். இவ்வகையான வழிநடத்தலில் எமது மகளிர் இல்லத்தில் இணையும் பிள்ளைகள் பல்வேறுபட்ட சூழ்நிலை, தாக்கம் மற்றும் பழக்கவழக்கங்களை கொண்டவர்களாக உள்ளனர். இவர்களின் நிலைக்கு ஏற்பவும், சிறியோர், யுவதிகள் என்ற படிமானங்களிலும் இவர்களை தனித்தோ, ஒருமித்தோ வழிகாட்டி வழி நடத்துவது என்பது தனித்திறமைக்குட்பட்டவை என்பதை யாவரும் அறிவார்.

இந்நிலையில் நாமும் "அறிவை விருத்தி செய்து **செய், அகண்டமாக்கு, விசாலப் பார்வையால் விழுங்கு" என்ற கவிஞர் பாரதிதாசனின் கவி** வரிக்கு அமைய எமது அறிவையும் அனுபவத்தையும் விருத்தி செய்து விசாலமாக்கி கடமையாற்ற வேண்டியவர்களாகவும் உள்ளோம். அத்தோடு நாம் ஒரு சமூகப் பணியாளராக (One of Ethics) சமூகப்பணி ஒழுக்கக்கோவையின் செயற்பாடுகளை மதித்துச் செயற்படவும் கடமைப்பட்டுள்ளோம்.

எமது இல்ல நிர்வாக செயல்பாடுகளில் மனித உரிமைகளும் மனித கௌரவமும் பேணப்படல் வேண்டும் என்பதிலும், எல்லா மனிதருள்ளும் பொதிந்துள்ள மனிதப் பெறுமதியான விளைவுகளுக்கு மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து அம்மனிதருடைய உள, உடல் உணர்வுகளை புரிந்து சிறியோர், இளையோர் என்ற பகுப்பின் கீழ் பிரித்து பகுத்தறிந்து சமூக ரீதியில் பணியாற்றுவதன் மூலமே எதிர்கால சந்ததியினருக்கு நல்வாழ்வை பெற்றுக்கொடுக்க முடியும் என்பது நிஜம். இந்த வகையில் எமது மகளிர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இங்கு பணியாற்றியவர்கள் அனைவரும் அவ்வாறே செயற்பட்டு வந்துள்ளனர். இதன் விம்பங்களாகவே எமது இல்ல பழைய மாணவிகள் அவர்களுடைய சுயதிறன் நிறைவுடனான உயர் மனித விழுமியங்களை கொண்ட தாய் தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டி சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எமது நிர்வாகத்திற்கும் நிர்வாகத்தின் சமூகசேவை செயற்பாடுகளுக்கும் வலுவூட்டுவதுடன் எமது இல்லம் ஒரு மாண்புமிகு மகளிர் இல்லம் என்பதையும் அதற்கேற்ற தலைமைகளால் நாம் வழிநடத்தப்பட்டுள்ளதையும், நன்றி மறவா மனப்பாங்குடன் இன்றும் வாழ்ந்து வழிகாட்டி கரம் கொடுத்து செயல்படுவதானது எமக்கு மேலும் பெருமையை கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமன்றி எமது மகளிர் இல்லத்தின் சிரேஷ்ட பிள்ளைகள் தமது பொறுப்புக்களையும், தமது கடமைகளையும் நன்கு உணர்ந்து தமது மேற்படிப்புகளை செவ்வனே முன்னோக்கி நகர்த்துவதில் மிக்க ஆர்வலராக செயல்படுவதுடன், இல்ல நடைமுறைகளையும் கலாசார விழுமியங்களையும் கடைபிடித்து மத அனுட்டானங்களை பின்பற்றியும் ஆளுமை மிக்கவர்களாக வளர்ந்து வருகின்றனர்.

அத்துடன் ஆலயப்பணி, இல்லப் பொதுப்பணிகளுக்கு தம்மால் இயன்ற ஒத்துழைப்புகளை வழங்கி வருவதானது எமக்கும் எமது நிர்வாக செயற்பாட்டிற்கும் பெரிதும் உதவியளிக்கின்றதாக அமைகின்றது. இவர்களது ஒற்றுமையான செயற்பாடுகளுக்கும் பங்களிப்பிற்கும் மேற்பார்வையாளராகிய நாங்கள் நன்றியையும் வாழ்த்துக்களையும் கூற கடமைப்பட்டுள்ளதோடு இவ்வாறான மனப்பாங்கு இவர்களை எதிர்காலத்தில் சமூகத்தில் நற்பிரஜையாக வாழவைப்பதுடன் எமது இல்ல நிர்வாகமும் மாண்பு பெறும் என்பதும் திண்ணம்.

இப்பணி இன்று நேற்றல்லாது கடந்த நாற்பது ஆண்டுகளாக இங்கு பணியாற்றும் அனைத்து பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட மாணவிகளையும் சாரும். இவ்வாறு பணியாற்றிய காலங்களில் பணி முதிர்வில் அம்மனின் பாதங்களை மரணத்தின் மூலம் சென்றடைந்த எமது மூத்த சேவையாளர்கள் அனைவரையும் நாற்பதாவது ஆண்டில் நினைவு கூர்ந்து சிரந் தாழ்த்துவதுடன் இவர்களது ஆத்மீக ஆசிகள் என்றும் எம்மை வழிப்படுத்தும் என்பதையிட்டு பெருமை கொள்கின்றேன்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்கு மக்களின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத ஒரு கூற்றாகும். ஆனால் நாமும் நமது பிள்ளைகளும் கோயிலே இடமாகக் கொண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் சைவ ஆன்மீக விடுதிச்சாலையில் நல்லுள்ளங்கள் மூலம் கிடைக்கும் அன்பளிப்பு மூலம் உணவு, உடை, இருப்பிட வசதிகளை பெற்று கல்வி, ஒழுக்கம், அன்பு, அறம், தெய்வபக்தி என்பவற்றைக் கற்று எதிர்காலத்தை ஒளியூட்ட செய்யக்கூடிய வகையில் வளர்க்கப்படுவதானது உண்மையில் மகத்தான செயல் ஆகும். இவ்வாறு இறை முக்தியையும் நல்லொழுக்கத்தையும் வளர்த்துக் கெள்வதற்குவதற்கு நல்வாய்ப்பையும் வழிகாட்டுதல்களையும் பயிற்சியையும் சேவையாக கொண்டு செயல்படுவதால் சிறுமிகள் எதிர்காலத்தில் தாங்கள் வாழும் சமுதாயத்திற்கும் தங்களுடைய சேவையை நல்குவார்கள் என நாம் எதிர்பார்க்கலாம். இதற்காகவே பல சவால்கள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியிலும் இவ் இல்லத்தை இயக்கி வரும் எமது ஆலய தர்மகர்த்தா மற்றும் நிர்வாகிகளுக்கும் பக்கபலமாக மேற்பார்வையாளர்களாகிய நாமும் ஆத்மரீதியாக பணியாற்றுவோம். என்பதுடன் எமது மகளிர் இல்லத்தையும் எமது பிள்ளைகளின் எதிர்கால நல் வாழ்வையும் சமுதாய மத்தியில் மாண்பு பெற்றுத் திகழ வழிகாட்டி நிற்போம். என்பதிலும் திடங்கொண்டுள்ளோம்.

எனவே "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கு ஈடாக மாண்புமிகு மகளிர் இல்லத்தின் பணியும் ஆண்டவன் பணியென எண்ணி என் பணி தொடரும் என்பதை இந் நாற்பதாவது ஆண்டு விழாவில் கூறி கருத்தமர்கின்றேன்.

**பொ.பவானி**
மேற்பார்வையாளர்,
சிரேஷ்ட இல்லம், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மேற்பார்வையாளர்கள்



## மாணவர் மன்றம், இந்து மன்றம் 2021





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு நோக்கு

**1982:-**

✶ 1982.02.03இல் துர்க்காபுரம் மகளிர் இல்லம் சிவத்தமிழ்செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் ஸ்தாபிதம்.

✶ 11.12.1982 ல் அமரர் சிவதர்மவள்ளல் மில்க்வைற் கனகராஜாவினால் ஞானசுரபி மண்டபத்தில் துர்க்காபுரம் மகளீர் இல்லம் திறக்கப்பட்டது.

✶ 09 பிள்ளைகளுடன் ஆரம்பமாகி ஆண்டு இறுதியில் 15 பிள்ளைகள் இருந்தனர்.

1983

✶ இல்லத்தில் 04 பிள்ளைகள் சேர்ந்து எண்ணிக்கை 19 ஆகியது.

1984

✶ இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர் . 03 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ 18.01.1984இல் தர்மகர்த்தா சபைத் தலைவர் அமரர் முன்னாள் பராளமன்ற உறுப்பினர் திரு.ஏ.தர்மலிங்கம் அவர்களால் மகளீர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

1985

✶ இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 04 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ அமரர் செல்வி. காமாட்சி கந்தையா இல்ல மேற்பார்வையாளராக கடமையேற்றார்.

1986

✶ இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ 31.01.1986 ல் புதிதாக இருமாடி மகளிர் இல்லக் கட்டிடம் திறக்கப்பட்டது.

1987

✶ இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். 40 பிள்ளைகள் இல்லத்தில் வாழ்ந்தனர்.

1988

✶ இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ 23.09.1988 ல் 3/3/84 இலக்கத்தில் மகளிர் இல்லம் நன்னடத்தை திணைக்களத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என பதிவுசெய்யப்பட்டு அரச அங்கீகாரம் பெற்றது.

✶ முதன் முதல் இல்ல மெய்வல்லுனர் போட்டி திலகவதி, வாசுகி, மங்கையற்கரசி ஆகிய 03 இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது.

1989

✶ இல்லத்தில் 19 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 10 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ 01.04.1989 ல் செல்வி. செல்வராணி பெரியதம்பி இல்ல மேற்பார்வையாளராக கடமையேற்றார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990

* இல்லத்தில் 05 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 65 வயதான இவ்வாண்டில் இல்லத்தில் 65 பிள்ளைகள் வாழ்ந்தனர்.
* 1991 இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* 31.05.1991 இல் முதன் முதலில் இல்லம் இடம் பெயர்ந்தது.
* 66 பிள்ளைகளுடன் இடப்பெயர்வு.

1992

* இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* முதன் முதலில் செல்வி.ம.சுமித்திரா தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை சித்திபெற்றார். சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு கலாநிதி பட்டம் கிடைத்தது. நல்லூர் துர்க்கா மணிமண்டபம் திறக்கப்பட்டது.

1993

* இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 10 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* சப்பறம் திருவிழா அன்று ஷெல்வீச்சினால் இல்ல வளாகத்தினுள் சுமித்திரா செல்வராசா (கௌரி) மரணமானார்.

1994

* இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 12 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

1995

* இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 12 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* பாரிய இடப்பெயர்வினால் கைதடி சிறுவர் இல்லம், தொடர்ந்து உஷன் கந்தசுவாமி கோயிலில் இடம்பெயர்ந்தது.

1996

* இல்லத்தில் 03 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 24 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். 03 பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

  1. செல்வி.த.தவனேஸ்வரி - கலைப்பீடம், யாழ்பல்கலைக்கழகம்.
  2. செல்வி.சு. சயாரூபி - கலைப்பீடம், யாழ்பல்கலைக்கழகம்.
  3. செல்வி.வி.வடிவாம்பிகை- நுண்கலைப்பீடம், யாழ்பல்கலைக்கழகம்.

1997

* இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர் . 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998

✶ இல்லத்தில் 22 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். இடப்பெயர்விற்குப் பின் மீண்டும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் பழைய இடமாகிய தெல்லிப்பழைக்கு வந்தது.

1999

✶ இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

2000

✶ இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 01 பிள்ளை பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டார்.

2001

✶ இல்லத்தில் 09 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

2002

✶ இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ 17.01.2002 இல் சிவத்தமிழ்செல்வி சைவ ஆய்வு நூலகம் திறப்பிக்கப்பட்டது. இதனை பிரதம நீதியரசர் சி.விக்னேஸ்வரன் (முன்னாள் வடக்கு மாகாண முதல் அமைச்சர்) அவர்கள் திறந்துவைத்தார்.

✶ செல்வி. கே.புஸ்பலட்சுமி யாழ்.நுண்கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றார்.

2003

✶ இல்லத்தில் 06 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ செல்விகள் கு.சர்மிளா யாழ். பல்கலைக்கழகத்திற்கும், மு.கலாநிதி. ஸ்ரீ.கலைவதனி இருவரும் யாழ். நுண்கலைப் பீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

✶ த.தவனேஸ்வரி இல்லம் திருமணம் செய்து வைத்த முதலாவது பிள்ளையாகும்.

2004

✶ இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

2005

✶ இல்லத்தில் 08 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர் . 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

✶ துர்க்காபுரம் மகளிர் இல்லம் வலிவடக்கு பிரதேச செயலகத்தில் J / F / GN / 83 / VOL / 2005 / 1 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. இல்லத்தில் வளர்ந்த செல்வி. த. மஞ்சுளாவிற்கு இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006

* இல்லத்தில் 01 பிள்ளை புதிதாக சேர்ந்தார். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். செல்வி. ம . சுமித்திரா பல்கலைக்கழக அனுமதி பெற்றார்.

2007

* இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 08 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* மகளிர் இல்லம் தனது வெள்ளி விழாவை 10.03.2007 ல் கொண்டாடும் போது 52 பிள்ளைகள் இருந்தனர்.
* நா.கிருபாலினி முதன் முதலில் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றார். (ஆரம்ப பிரிவு)
* 03.02.2007ல் செல்வி.நாகராணி அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது.
* வி.ஜலயா க.பொ.த.சாதாரண பரீட்சையில் 6A சித்தி பெற்றார். இல்லத்தில் 03 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

2008

* இல்லத்தில் 03 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர் . 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* 15.06.2008 ல் சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இறைவனடி சேர்ந்தார். செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவராக பதவியை ஏற்றுக்கொண்டார்.
* இல்லத்தில் வளர்ந்த கே. புஸ்பலட்சுமிக்கு இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

2009

* இல்லத்தில் 30 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 04 பிள்ளைகள் பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். 02.04.2009 இல் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வடமாகாணத்தில் NP / 24 / 2 / 1 / CH / 06 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

2010

* நாட்டில் போர் முடிவுற்றதன் பின் இல்லத்தில் 99 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 10 பிள்ளைகள் பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். போர்க் கால சூழலால் 99 பிள்ளைகள் இல்லத்தில் இணைக்கப்பட்டனர். இடப்பற்றாக்குறை ஏற்பட்டமையால் தரம்- 09 திற்கு கீழ்ப்பட்ட மாணவர்கள் யாத்திரிகர் விடுதியில் தங்கவைக்கப்பட்டனர்.


2011

* இல்லத்தில் 17 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 23 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* செல்வி. அ. ஜெயந்தினி. செல்வி. து. துஸ்யந்தினி ஆகியோர் யாழ்நுண்கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றனர். செல்வி. செ. தமிழ்விழி வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றார்.
* 04.04.2011இல் புதிய மகளிர் இல்லத்திற்கான அடிக்கல் தலைவர் ஆறு. திருமுருகன் அவர்களால் நாட்டப்பெற்றது.
* செல்வி. பு.செல்வதியம்மா சுற்றாடல் துறையில் தேசியமட்ட கட்டுரைப் போட்டியில் 2 ம் இடத்தை பெற்றார்
* செல்வி. த.தேவதர்மிளா தினக்குரல் நடத்திய தேசியமட்ட கட்டுரைப் போட்டியில் 3 ம்இடத்தை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 வது ஆண்டு விழா கண்காட்சி










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லத்துப் பிள்ளைகளுக்கு இல்லத்தினால் நடாத்தப்பட்ட திருமண நிகழ்வுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காபுர மகளிர் இல்லத்தின்
## 'ஸ்ரீ துர்க்காதேவி வீட்டுத்திட்ட' வீடுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 2011.10.06இல் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் சமூகப் பணி, சைவப்பணி, தமிழ்ப்பணிக்காக கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

2012

* இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 25 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* 19.03.2012 ல் இல்லத்திற்கான அதிபர் நியமிக்கப்பட்டார்.
* 31.05.2012 ல் இல்லத்தில் வளர்ந்து திருமணமாகி ஆலய அலுவலக உதவியாளராக கடமையாற்றிய திருமதி.மஞ்சுளா உதயகுமார் இறைபதம் அடைந்தார்.
* 10.08.2012 ல் இல்லத்தில் 27 வருடங்களாக பிரதம மேற்பார்வையாளராக கடமையாற்றிய செல்வி காமாட்சி கந்தையா இறைபதம் அடைந்தார். இதனால் 30 வது ஆண்டுவிழா நடைபெறவில்லை. செல்வி. மு.கலாநிதி, செல்வி. ம.சுமித்திரா ஆகியோருக்கு இல்ல நிர்வாகசபையினர் திருமணம் செய்துவைத்தனர்
* முதன் முதலில் இல்ல மாணவி செல்வி. த. தேவதர்சினி க.பொ.த.சாதாரண தரத்தில் சகலபாடங்களிலும் விசேடசித்தியாக 9A பெற்றார்.

2013

* இல்லத்தில் 09 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
* புதிய மகளிர் இல்லம் ஆலயத்தின் தெற்கு பக்கமாக 14.07.2013 ல் பேராசிரியர் கலாநிதி மிகுந்தன், பீடாதிபதி விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு யாத்திரிகர் விடுதியில் இருந்த பிள்ளைகள் அன்றைய தினமே குடிபுகுந்தனர்.
* செல்வி. பூ.செல்வதியம்மா, பா. விதுசாயினி யாழ்பல்கலைக்கழகத்திற்கும். நா.சர்வலோயினி வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.
* செல்வி. த.தேவதர்மளா யாழ்தேசியகல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார். செ.தமிழ்விழி கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றார்.

2014

* இல்லத்தில் 08 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர்.
* துர்க்காபுரம் மகளிர்இல்ல வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டுவிழா 02.02.2014 நடைபெற்றது. செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது.
* செல்வி. ஜெ.தேவரூபி பல்கலைக்கழக அனுமதி பெற்றார்.

2015

26.01.2015 -

* சமூகநல பயிற்சி திட்டம் 65 பிள்ளைகளுக்கு இரு பிரிவாக நடைபெற்றது. கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. கோபத்தை முகாமை செய்தல் திருமதி. பகீரதி கணேசதுரையாலும் ஏதிர்கால இலக்குகளை அமைக்கும் ஆற்றலை வளர்த்தல் திருமதி சிவமலர் அனந்தசயனாலும் நடாத்தப்பட்டது.

02.02.2015

* சமூக நல பயிற்சி திட்டம் : திரு. ச. அருமைத்துரை உளவளவளார் நன்னடத்தை திணைக்களகம் ஆளிடை தொடர்பாடல் பற்றிய கருத்தரங்கை நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.02.2015

✱ எமது இல்லத்தில் வளர்ந்த செல்வி. சீறிதரன் கம்சிகாவுக்கு திரு. கேசவனுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

05.02.2015

✱ துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வசித்து திருமண பந்தத்தில் இணையும் பிள்ளைகளுக்காக 06 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது.

11.02.2015

✱ சமூக நல பயிற்சி திட்டம்: மனவழுத்தத்தை முகாமை செய்தல், மாறுபடும் உடல் உள வளர்ச்சி விருத்திற்கேற்ப எம்மை தயார்படுத்தல் திரு. ச. அருமைத்துரையினால் நடாத்தப்பட்டது.

16.02.2015

✱ சமூக நல பயிற்சி திட்டம்: மனவழுத்தத்தை முகாமை செய்தல், மற்றவர்களுக்கு பயன்தரவல்ல சமூக விடயங்களில் பங்குபற்றும் திறன்களை வளர்த்தல். கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களினால் நடாத்தப்பட்டது.

23.02.2015

✱ சமூக நல பயிற்சி திட்டம்: சிறுவர் உரிமைகள் மற்றும் கடமைகள், சட்டங்கள் அறிந்து கொள்ளல் திரு.கு.கௌதமனாலும் திருமதி புராதனி மதனரஞ்சனாலும் நடாத்தப்பட்டது.

31.05.2015

✱ மகளிர் இல்ல 33வது ஆண்டு விழாவில் திரு. நா.வேதநாயகம், அரச அதிபர் யாழ்ப்பாணம், பிரதம விருந்தினராக கலந்த கொண்டார். சிறப்பு விருந்தினராக வைத்திய நிபுணர் கவிதா இந்திரநாத் புற்றுநோய் பிரிவு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை, கௌரவ விருந்தினராக திருமதி புராதனி மதனரஞ்சன் கலந்து கொண்டார்.

08.06.2015

✱ பிள்ளைகளின் தொழில் பயிற்சித் திட்டமாக காளான் வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2016

22.01.2016

✱ இல்லத்தில் வளர்ந்த செல்வி. நாகேந்திரம் சிவமாலினிக்கும் திரு.அருளானந்தம் நிரோகூஷ் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது.

29.01.2016

✱ இல்லத்தில் வளர்ந்த செல்வி. அழகுராசா ஜெயந்தினிக்கும் திரு. பாலச்சந்திரன் சாம்ராஜக்கும் இல்லத்தினால் திருமணம் நிகழ்த்தி வைக்கப்பட்டது.

04.02.2016

✱ கொழும்பு Amateur Yoga Association (AYA) இனால் எமது இல்லம் யோகாப் பயிற்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டு யோகா வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.04.2016

* மகளிர் இல்லத்தின் 34வது ஆண்டு விழாவிற்கு உயர் திரு.சிவஞானம் ஜெயசங்கர், பணிப்பாளர் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம். பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக வைத்திய நிபுணர் கேதீஸ்வரி சிவசிதம்பரம், கதிர் இயக்கத்துறை யாழ் போதனா வைத்தியசாலை அவர்களும் கௌரவ விருந்தினராக Dr. சிவநந்தினி உதயகுமார் சிரேஷ்டவிரிவுரையாளர், உடற்கூற்றியல் துறை, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக் கழகம் அவர்களும் கலந்து கொண்டனர்.

28.05.2016

* தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் 55வது பிறந்தநாள் இல்லப்பிள்ளைகளினால் கொண்டாடப்பட்டது.

2017

07.02.2017

* ஸ்ரீ துர்க்காதேவி அறநெறி பாடசாலையின் எமது 09 பிள்ளைகள். தேசிய மட்ட ஆக்கத்திறன் போட்டியில் பரிசு பெற்றனர்.
* 18.02.2017 - ஸ்ரீ துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை தேசிய மட்டத்தில் ஆக்கத்திறன் போட்டிகளில் வில்லிசை 3ம் இடம், பேச்சு தரம் 10இல் 3ம் இடம் பெற்றனர். பரிசளிப்பு புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டியில் நடைபெற்றது.
* 17.03.2017 - மகளிர் இல்ல 35வது ஆண்டு விழாவிற்கு பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம், பிரதம விருந்தினராகவும் கௌரவ விருந்தினராக திருமதி. கமலராணி கிருஸ்ணபிள்ளை அதிபர், யா/இராமநாதன் கல்லூரி அவர்களும் கலந்து கொண்டனர்.

2018

* 07.01.2018 - ஆணையாளர் நன்னடத்தை திணைக்களம் வடமாகணத்தின் NP/30/14/PO/CH இலக்க 15.17.2017 கடிதத்தின் படி சிறுவர் அபிவிருத்தி நிலயச் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டது.
* 28.05.2018 - துர்க்காபுரம் மகளிர் இல்லம் துர்க்காபுரம் சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலையாக தொழிற்பட வடமாகாண சிறுவர் பராமரிப்பு சேவைகள் நன்னடத்தை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.
* 26.01.2018 - அறநெறிப் பாடசாலைகளின் தேசிய ஆக்கத் திறன் பரிசளிப்பு விழா கொழும்பில் நடைபெற்றது. இதில் குழு நாடகம் முதலாம் இடம், செல்வி த. சுதர்சா பேச்சு 1ம் இடம், செல்வி யோ. அனுசா கதாப்பிரசங்கம் 3ம் இடம் பரிசில்கள் வழங்கப்பட்டது.

06.08.2018

* செல்வி பாலச்சந்திரன் விதுசாயினி, செல்வி பூலோகம் செல்வதியம்மா ஆகிய இருவருக்கும் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.
* 2018இல் நடைபெற வேண்டிய 36வது ஆண்டு விழ சிவஸ்ரீ அகிலேஸ்வர குருக்கள் அமரரானதால் நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019

07.04.2019

★ மகளிர் இல்ல 37வது ஆண்டு விழா நடைபெற்றது. பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, துணைவேந்தர். யாழ்ப்பாண பல்கலைக்கழகம். பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக திருமதி வேணுகா சண்முகரத்தினம் ஓய்வு நிலை அதிபர் இராமநாதன் கல்லூரி அவர்களும் கௌரவ விருந்தினராக திருமதி. சரஸ்வதி மோகநாதன் பிரதிப் பிரதம செயலாளரும், பதில் செயலாளர் நிதித் திட்டமிடல் உள்ளூர் அமைச்சு வடமாகாணம் அவர்களும் கலந்து கொண்டனர்.

16.01.2019

★ எமது இல்லத்தில் வளர்ந்த செல்வி. ஜெகம்புகழ்ராஜா நாகசுஜித்தாவிற்கு திரு. கிருஸ்ணன் விஷ்ணுகாந்தன் என்பவருடன் திருமணம் நடாத்தி வைக்கப்பட்டது.

2020

01.01.2020

★ துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வசித்து திருமண பந்தத்தில் இணையும் பிள்ளைகளுக்காக மேலும் 03 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது.

07.02.2020

★ எமது இல்லத்தில் வளர்ந்த செல்வி. பிரபாகரன் பிருந்திகாகவுக்கும் திரு.கோபால் துஷ்யந்தனுக்கும் இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

★ நாட்டில் கொரோனா நோய் தொற்றுக்காரணமாக நாடு மூடக்கப்பட்டதால் 38வது ஆண்டு விழா நடைபெறவில்லை.

2021

20.03.2021

★ இல்லத்தில் வளர்ந்த செல்வி. அபிராமி ஜெயக்குமாருக்கும் திரு. நந்தகுமார் சடகோபனுக்கும் இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

27.03.2021

★ பட்டம் பெற்ற செல்வி. தேவதர்சினி தர்மகுலராஜாவுக்கு இல்லப்பிள்ளைகளினால் வரவேற்பு விழா நிகழ்த்தப்பட்டது.

27.03.2021

★ இல்லத்தில் வளர்ந்து திருமணம் முடித்த செல்வி. கயலி கந்தசாமி திரு. வினோத் தம்பதியினருக்கு விருந்துபசாரம் நடைபெற்றது.

28.05.2021

★ துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் மணிவிழாவுக்காக ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் திருமுகம் 60 மணிவிழா மலர் சம்பிராதாய பூர்வமாக வெளியிடப்பட்டது. நோய்யினால் நாடு முடக்கப்பட்டதன் காரணமாக மணிவிழா பிற்போடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.11.2021

* செல்வி விஜயகுமார் பிரசாவிற்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

18.12.2021

* துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைவர் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்களின் மலர் திருமுகம் 60 வைபவ ரீதியாக ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் வைபவ ரீதியாக வெளியிடப்பட்டது. மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மகேசன் அவர்களால் மலர் வெளியிடப்பட ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் தேசகீர்த்தி லயன் ச. ஆறுமுகநாதன் அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். போரசிரியர் சி. சிறி சற்குணராஜா, துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம் அவர்களினால் மலர் இணையத்தில் வெளியிடப்பட்டது. கலாநிதி ஆறு. திருமுருகன் பிறந்தநாள் அறநிதிய சபையினால் முதன்முதலாக இளையதலைமுறை ஆற்றலாளர் விருது அன்றைய தினம் இருவருக்கு வழங்கப்பட்டது. போரசிரியை திருமதி. கலாமதி முருகனாந்தம், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம், நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன், யாழ். போதனா வைத்தியசாலை ஆகிய இருவரும் கௌரவிக்கப்பட்டனர்.
* நோய் தொற்று காரணமாக இவ்வருடம் 39ம் ஆண்டு விழா நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லத்தின் வளர்ச்சியில் ஒரு நோக்கு

| வருடம் | அனுமதி பதிவேட்டின் படி இல்லத்தில் பயன் பெற்றோர் தொகை | இணைந்த பிள்ளைகள் தொகை | பெற்றோர்/ பாதுகாவலருடன் மீள் இணைப்பு/ திருமணம்/ தொழில் வாய்ப்பு பெற்று இல்லத்திலிருந்து வெளியேறியோர் |
|---|---|---|---|
| 03/02/1982-31/12/1982 | 15 | 15 | - |
| 31/12/1983-31/12/1983 | 19 | 04 | - |
| 31/12/1984-31/12/1984 | 30 | 11 | 03 |
| 31/12/1985-31/12/1985 | 37 | 07 | 04 |
| 31/12/1986-31/12/1986 | 50 | 13 | 05 |
| 31/12/1987-31/12/1987 | 57 | 07 | 05 |
| 31/12/1988-31/12/1988 | 70 | 13 | 06 |
| 31/12/1989-31/12/1989 | 89 | 19 | 10 |
| 31/12/1990-31/12/1990 | 94 | 05 | 06 |
| 31/12/1991-31/12/1991 | 96 | 02 | 07 |
| 31/12/1992-31/12/1992 | 103 | 07 | 06 |
| 31/12/1993-31/12/1993 | 114 | 11 | 10 |
| 31/12/1994-31/12/1994 | 125 | 11 | 12 |
| 31/12/1995-31/12/1995 | 129 | 04 | 12 |
| 31/12/1996-31/12/1996 | 132 | 03 | 24 |
| 31/12/1997-31/12/1997 | 134 | 02 | 07 |
| 31/12/1998-31/12/1998 | 156 | 22 | 06 |
| 31/12/1999-31/12/1999 | 158 | 02 | 05 |
| 31/12/2000-31/12/2000 | 162 | 04 | 01 |
| 31/12/2001-31/12/2001 | 171 | 09 | 02 |
| 31/12/2002-31/12/2002 | 184 | 13 | 02 |
| 31/12/2003-31/12/2003 | 190 | 06 | 02 |
| 31/12/2004-31/12/2004 | 192 | 02 | 07 |
| 31/12/2005-31/12/2005 | 200 | 08 | 05 |
| 31/12/2006-31/12/2006 | 201 | 01 | 06 |
| 31/12/2007-31/12/2007 | 205 | 04 | 08 |
| 31/12/2008-31/12/2008 | 208 | 03 | 07 |
| 31/12/2009-31/12/2009 | 238 | 30 | 04 |
| 31/12/2010-31/12/2010 | 337 | 99 | 10 |
| 31/12/2011-31/12/2011 | 354 | 17 | 23 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 31/12/2012-31/12/2012 | 356 | 02 | 25 |
| 31/12/2013-31/12/2013 | 365 | 09 | 06 |
| 31/12/2014-31/12/2014 | 399 | 26 | 36 |
| 31/12/2015-31/12/2015 | 409 | 10 | 24 |
| 31/12/2016-31/12/2016 | 430 | 21 | 25 |
| 31/12/2017-31/12/2017 | 462 | 32 | 30 |
| 31/12/2018-31/12/2018 | 494 | 32 | 32 |
| 31/12/2019-31/12/2019 | 422 | 28 | 24 |
| 31/12/2020-31/12/2020 | 446 | 24 | 24 |
| | 546 | | 431 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி C.W.W கன்னங்கர

கலாநிதி C.W.W கன்னங்கர அவர்களது முழுப் பெயர் கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கர ஆகும். அம்பலாங்கொட மற்றும் பலப்பிட்டிய நகரங்களுக் இடையிலுள்ள ரன்தொம்பே என்ற கிராமத்தில் 1884 ஐப்பசி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். அவரது ஆறாவது சிறியதாய் அவரை நன்றாக வளர்த்தார். சிறு வயதிலேயே மிகுந்த அறிவாற்றலை வெளிப்படுத்திய அவர் ஆரம்பக்கல்வியை ரன்தொம்பே வெஸ்லியான் மிஷனரி பாடசாலையில் கற்றார். அங்கு நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த காலி ரிச்மன்ட் கல்லூரி அதிபர் J.H டெரல் பாதிரியார் அவர்களினால் வழங்கப்பட்ட பரிசில்களில் அதிகமானவற்றை பெற்றவர் கன்னங்கர ஆவார். இதனால் சிறுவனான கன்னங்கர அவர்களுக்கு தனது 14வது வயதில் காலி ரிச்மன்ட் கல்லூரியில் கல்வி கற்பதற்கு புலமைப்பரிசில் கிடைத்தது. கற்றல் வசதி, உணவு, உடை அனைத்தும் இலவசமாக கிடைத்தது. இவ்வசதிகளைத் திருப்தியோடு ஏற்றுக்கொண்டார். இதற்கு மேலதிகமான எந்த சலுகையையும் அவர் கேட்கவில்லை. எந்த சலுகைகளும் கிடைக்காத பிள்ளைகளுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்கு தனது உள்ளத்தை திடப்படுத்திக் கொண்டார்.

அவர் அப்போது எதிர்நோக்கிய கசப்பான அனுபவங்கள் தான் இம்மன உறுதிக்கு காரணமாக இருந்திருக்கலாம். C.W.W கன்னங்கர கற்பிப்பதில் திறமையானவர். பிரித்தானியா கேம்பிரிட்ஜ் ஜூனியர் (Junior) பரீட்சையில் கணித பாடத்தில் முழு பிரித்தானியா ஆட்சியிலும் அதிகூடிய புள்ளிகளை பெற்றார். பாடங்களை படிப்பதில் கவனம் செலுத்தியதோடு விளையாட்டு, நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டார். அவர் ரிச்மண்ட் கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றி பின்னர் சட்டக் கல்வியை மேற்கொள்ளும் போது மொரட்டுவ பிரின்ஸ் ஒவ்(f)வேல்ஸ் கல்லூரி மற்றும் வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1910ஆம் ஆண்டில் சட்டத்தரணி தொழிலில் பிரவேசித்த இவர் சமூக மற்றும் அரசியல் விடயங்களிலும் ஈடுபாடு கொண்டார். 1923ஆம் ஆண்டு காலி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலமைப்பு சபைக்குச் தெரிவாகிய கன்னங்கர அவர்கள் 1931இல் இலங்கை தேசிய சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். அரசியலமைப்பு சபையில் கல்வி தொடர்பான நிறைவேற்றுக் குழு தலைவராக செயற்பட்ட இவர் 1931இல் இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராக விளங்கினார் **ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலும் இலவச கல்வியை வழங்குவதற்கு** முன்னின்ற இவர் தாய்மொழியில் கல்வியை வழங்கல் மற்றும் மத்திய மகாவித்தியாலயங்களை உருவாக்கி **இலங்கையில் இலவசக் கல்வி** ஆரம்பமாவதற்கு பாரிய பங்களிப்பை வழங்கினார். இதனால் இன்றும் இவர் இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை (Father of Free Education Of Ceylon)என போற்றப்படுகிறார்.

**செல்வி. லக்சிகா நாகவேந்தன்,**
தரம் - 6B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலின் விந்தை

நாம் இன்று அறிவியலின் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறிவியல் பல்லாயிரக்கணக்கான அதிசயங்களை தினம்தோறும் படைத்துக் கொண்டே இருக்கின்றது அவற்றில் சில நாம் வாழ்நாளில் காணாதவையாகவும் ஆச்சரியம் மிக்கனவாகவும் அமைகின்றன. மனித சமுதாயத்துக்கு பயன் தர வேண்டும் என்னும் நன்நோக்குடன் அறிவியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைகளாக இருந்தாலும் ஒரு சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தி உள்ளன என்றும் கூறலாம். அறிவியல் விந்தைகள் ஆக்கத்தில் மட்டுமன்றி அழிவிலும் விந்தைகளாக காணப்படுகின்றது. மனித சமுதாயம் அறிவியல் விந்தைகளை ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்த வேண்டும். அழிவு வேலைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்பலவாயினும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளுள் முதல் நிலை பெறுவது மின்சாரம் கண்டுபிடிப்பாகும் தோமஸ் அல்வா எடிசனின் அயராத உழைப்பின் பேறாகக் கண்டறியப்பட்ட மின்சாரம் இன்றும் உலகத்துக்கு பயன் தருகின்றது.

மின்சாரமின்றி இன்றைய உலகு இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. உலகின் தொழில் நுட்பத் தகவல் தொடர்பு வளர்ச்சிக்கு மின்சாரம் பெரிதும் பயன்படுகின்றது பலவியத்தகு சாதனங்களை இயக்கி இவ்வுலகை இயந்திர உலகாக்கி வருவதில் மின்சாரத்தின் பங்கு அளவிடற்கரியதாகி விட்டது. என்றால் அது மிகையல்ல. "பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்" என்று பாடினார் ஒரு கவிஞர். பறக்கும் பறவையை பார்த்து மனிதன் சிந்தித்தான் நம்மால் பறக்க முடியாதா? என்று யோசித்தான். அவன் சிந்தனை பயனளித்தது அதன் பேறாக கண்டுபிடிக்கப்பட்டதே விமானமாகும். ரைட் சகோதரர்கள் விமானத்தை கண்டுபிடித்ததன் பின் அதன் பயன் அதிகரிக்கப்பட்டது. சில நொடிகளில் பல்லாயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடங்களுக்குச் சென்றுவர விமானம் இன்று பெரிதும் பயன்படுகின்றது கடல்களையும் மலைகளையும் கடந்து செல்ல உதவுகின்றது. விரும்பும் திசைகளில் பறந்து செல்ல விமானம் உதவுகின்றது தொலைத்தொடர்பு சாதனங்கள் இன்று உலகை ஒன்றிணைக்கின்றன. நாளுக்கு நாள் பல மாற்றங்களை கொண்டு வரும் இச்சாதனங்கள் உலகை ஒரு சிறு கிராமம் ஆக்கி விட்டன. கணணிப்பொறி இணையம் இன்று உலகம் முழுவதும் பரந்து உள்ளன. தொலைத்தொடர்புசாதனங்களுள் கணணி மனித சமுதாயத்திற்குப் பெரும் பயனளிப்பதாகவே உள்ளது. உலகின் பல பாகங்களிலும் நிகழும் நிகழ்வுகளை வீட்டில் இருந்தவாறு அறிந்து கொள்ள முடிகின்றது. மருத்துவத்துறையில் அறிவியல் அரிய சாதனைகளை நிலைநாட்டி உள்ளது. புற்றுநோய் சிகிச்சை, இதய மாற்று சிகிச்சை போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். அறிவியல் கண்டுபிடிப்புகள் யாவும் மனித சமுதாயத்துக்கு பயன் தரும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டுள்ளன. அவை தொழில்துறைகளில் மட்டுமன்றி விவசாய தொழில் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிகின்றன.

அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித சமுதாயத்துற்கு பல நன்மைகளை அளிப்பதோடு தீய விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது. உலகின் முன்னேற்றத்துக்கு உதவிடும் நோக்குடன் கண்டுபிடிக்கப்பட்ட அணுசக்தி அறிவியலின் மகத்தான கண்டுபிடிப்பாக கருதப்பட்டது. ஆனால் இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்கா ஜப்பான் மீது வீசிய நாசகார அணு குண்டானது அழிவு வேலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டமைக்கு சான்றாக அமைகின்றது. இதனைப் போன்று மேலும் பல அழிவுக் கருவிகள் உலகை அச்சுறுத்தும் வகையில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. நோய்க் கிருமிகளை அழிக்க, நோய்களைப் போக்க மருந்துக்களைக் கண்டுபிடித்த அறிவியலானது இன்று நோய்களை உண்டாக்கும் கிருமிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

அரிய உயிர்களை பறிக்க உதவிடும் அழிவு சாதனங்களை உருவாக்கிறது. இத்தகைய அபாயமான நிலை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். ஆபத்தான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலை நீங்க வேண்டும். அறிவியலை ஆக்கப் வழிகளில் பயன்படுத்த முன் வரவேண்டும்.

**அறிவியல் வளர்ப்போம் ஆக்கப் பணிகளுக்கு பயன்படுத்துவோம்**

**உதயகுமார் லிவின்சிகா,**
தரம் -07,

# நன்றி மறவாமை

நன்றி மறவாமையானது மனிதரிடத்து இருக்க வேண்டிய உயர் தனிப் பண்பாகும். மனிதனென்பவன் உலகில் உள்ள ஏனைய உயிரினங்களில் எல்லாம் உயர் தனிச் சிறப்பாக கணிக்கப்படுவதற்கு காரணம் அவனுடைய இதமான வாழ்க்கை முறையே எனலாம். "மன் + இதன்" மனிதன் என்று இச்சொல்லை பதம் பிரித்து நோக்கலாம். அதாவது அடுத்தவரையும் மற்ற உயிரினங்களையும் இதயத்தால் நேசித்து அன்பு பாராட்டுவதோடு இதமாயிருப்பதுமாகும். மனிதன் ஒருவன் தன் வாழ்வில் செம்மையுற வாழ வேண்டுமானால் அவன் கடைபிடிக்கும் பண்புகளும் செம்மையாக இருக்கவேண்டும். செம்மையான நற்பண்புகளின் கூட்டுத்தான் "விழுமியங்கள்" எனப்படுவன ஆகும்.

நன்றி செய்தல் என்பது வேறு, நன்றி மறவாமை என்பது வேறு. நன்றி செய்தலாவது வேண்டியவேளைகளில் அடுத்தவருக்கு உதவுதல், இனம், மதம், சாதி பேதம், காலம், இடம், கருத்து, வேற்றுமை கருதாது தேவையான வகையில் மற்றவருக்கு அன்பு செய்தல் ஆகும். அவ்வாறு ஒருவரால் உதவி செய்யப்பட்டதை உதவி பெற்றவர் மறவாது இருத்தலும் பொருத்தமான வேறு சந்தர்ப்பத்தில் அன்பு பாராட்டி அவருக்கு உதவுதலுமே நன்றி மறாவாமை ஆகும். எனவேதான் எமது விழுமியங்களில் எல்லாம் உன்னதமானதாக நன்றியறிதலைக் குறிப்பிடுகிறோம்.

"நன்றி மறவேல்" என்ற வாக்கை அருந்தமிழ்ப்புலவர் ஔவைப் பிராட்டியார் தனது ஆத்திசூடி என்ற நீதி நூலில் உபதேசித்துள்ளார். உலகப் பொதுமறையான திருக்குறளில் திருவள்ளுவர் பெருமான் நன்றியுடன் இருத்தல் பற்றி போற்றிக் கூறியுள்ளார். நன்றி பாராட்டுதலின் சிறப்பையும் நன்றி மறத்தலால் வரும் கேட்டையும் சுட்டிக்காட்டி கூறுவதற்காக வள்ளுவனார் தனித்தனி அதிகாரங்களை ஆக்கித் தந்துள்ளார்.

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்-**
**உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு'**

என்பது அவர் தந்த செய்தி. செய்நன்றி கொன்றவர்கள் தம் வாழ்வில் உயர்வு பெறவே மாட்டார்கள். இங்கே நன்றி மறத்தலை "நன்றி கொல்லுதல்" என்ற வார்த்தைகளால் புலவர் சுட்டிக்காட்டுவதை அவதானிக்கலாம்.

நன்றி மறவாமைக்கு நல்ல எடுத்துக் காட்டாக திகழ்வோர் கர்ணனும் கும்பகர்ணனுமே ஆவார். உலகில் நாய்க்கு சமமான நன்றி அறிவுள்ள பிராணி வேறு எதுவும் இல்லை என்பர். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வளர்ப்பவர்களை காணும் போதெல்லாம் தன் வாலை ஆட்டி நன்றியை தெரிவித்துக் கொள்கிறது அடிக்கடி தன் எஜமான் காலை கூட அது நக்கி நக்கி தன் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்துகிறது. வீட்டைக் காவல் செய்கிறது. அஃறிணை பொருட்கள் கூட நன்றி மறவாமை பண்பு கொண்டவையாக இருக்கின்றன என்பதற்கு தென்னை மரத்தை எடுத்துக் காட்டி பாடுகிறார் ஒளவையார்.

"நன்றி ஒருவருக்கு செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்"

இளைய கன்றாக இருந்து வளருகின்ற தென்னையின் அடி மரத்திற்கு தண்ணீர் ஊற்றி வளர்க்கும் ஒருவனுக்கு அக் கன்றானது வளர்ந்து பெரிய மரமாகி இனிய இளநீரை பிரதியுபகாரமாகக் கொடுக்கின்றது. தன் தாளில் உண்ட நீரைத் தென்னையானது இனிய இளநீராக திருப்பித் தந்து தாகம் தீர்க்கிறது. அதுபோல காலமறிந்து நன்றி கடன் தீர்க்கும் மானுடர் இயல்பை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் பிறருக்கு உதவி செய்யும் போது காலம், நேரம், தகுதி நோக்காது ஆற்ற வேண்டும் என்பது ஒருவர் காலத்தால் செய்த உதவியை அது அளவில் சிறியதாயினும் பெரிதாக மதித்து நன்றி பாராட்ட வேண்டும் என்பதும் மக்கட்பண்பில் உயர்ந்த நாகரிகம் ஆகும்.

**"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

என்பது வள்ளுவர் வாக்கு. நன்றி ஆனது பல விதமாக செய்யப்படலாம் ஆபத்து வேளைகளில் அருகில் இருந்து உதவுதல், வாழ்வளித்தல், வறுமை, நோய், நொடி, பசி, பிணி வந்தவிடத்தும் மனம் கோணாது உதவுதல் என்பவையெல்லாம் நன்றி என்றதனுள் அடங்கும். இடது கை கொடுப்பதை வலது கை அறியாமல் செய்யும் தர்ம சிந்தனை நன்றி செய்யும்போது இருக்க வேண்டும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நால்வர்களிடத்திலும் காட்டும் இப்பிரதியுபகாரம் பின்னர் மற்றவர்களுக்கும் சேர அது வழிகாட்டும். நன்றி செய்வதை நம் கடமையாகக் கொண்டு நன்றி மறவாமையுடன் வாழ்வதனூடாக நம் வாழ்வில் சிறப்புடன் நிறைவாக வாழ்வோம்.

**கோபாலசிங்கம் டயானா,**
தரம் - 07,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல் திருக்குறள்

நம் அன்னைத் தமிழ் மொழியில் காலத்துக்கு காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரிய நூல்கள் சிலவும் உண்டு. அத்தகைய சிறப்புக்குரிய ஈடு இணையற்ற நூலாக போற்றப்படுவதில் திருக்குறளும் ஒன்றாகும். காலத்தை வென்று வாழும் இந்நூல் உலக மக்கள் நூலாகும். அதற்குரிய காரணங்கள் பல உள்ளன. திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலகமக்கள் அனைவரதும் உள்ளங்களை அளந்து உள்ளார் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே புரட்சிக்கவி பாரதியும்

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

எனப் போற்றினார். வள்ளுவன் தந்த முதற் குறளே பரந்த நோக்கு உடையதாக உலக சமுதாயம் அனைத்தையும் ஒன்றாகக்கருதும் பண்பு உடையதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்துடையதாக மிளிர்வதைக் காணலாம்.

**'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு'**

என்கிறார் வள்ளுவர். இது இன்றைய நிலையில் மிக முக்கியமாக நோக்குதற்குரிய கருத்தாகும். சமயப் பொதுமைக்கும் முற்போக்குச் சிந்தனைக்கும் தொடக்கமாக அமைகிறது இக்குறள்.

குறளின் அமைப்பு அதன் சீரிய சிந்தனைகளை மக்கள் மனதில் பதிக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. நூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்களையும் அதிகாரம் ஒன்றுக்குப் பத்து பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்குகின்றது. திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. இது அறநூலாகவும் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கின்றது. வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக திருக்குறள் விளங்குகின்றது. மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழியிதுவென வையகத்தாருக்கு வள்ளுவர் வழிகாட்டுகின்றார். அவரது குறள்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையை செம்மைப்படுத்துவனவாகவே அமைகின்றது.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று**

(குறள் 238)

என்கிறார். தோன்றினால் புகழொடு தோன்றுக எனக் கூறும் வள்ளுவர் புகழோடு தோன்றிப் புகழோடு வாழ்ந்து புகழோடு மறைதலே மனிதனாய் பிறந்தோருக்கு மாண்புடைத்து என அறிவுரை பகர்கின்றார்.

மனிதனாய் பிறந்தோர் வாய்மை உடையவராய் வாழவேண்டும் வாய்மையே எல்லாவற்றிலும் உயர்ந்தும் சிறந்துமான அணிகலம் ஆகும். அதன் பண்பினை கூற வந்த வள்ளுவர்

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்**

(குறள் 291)

என அழகுற விளக்குகிறார். நிகழ்ந்ததை நிகழ்ந்த படி அல்லது கேட்டதைக் கேட்டபடி கூறுதல் அன்று வாய்மை.

கேட்போருக்கு ஒரு சிறிதேனும் தீமை தராத ஒன்றே வாய்மை என்பது வள்ளுவர் தரும் கருத்தாகும்.

**பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்**

(குறள் 292 )

என்று வாய்மைக்குப் புது விளக்கம் தருகின்றார் வள்ளுவர். இவ்வாறு வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை வள்ளுவரது திருக்குறள் நமக்கு உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்துப்பாலில் அறநெறி உரைத்திடும் வள்ளுவர் பொருட்பாலில் புதிய பல கருத்துக்களை நமக்குப் புலப்படுத்துகின்றார் ஆட்சி புரிவோருக்கு அறிவுரை கூறுகின்றார். பொருள்வளம் பெருகிவிடும் முறைகளைப் புகழ்கின்றார். மனித வாழ்க்கையை செம்மைப்படுத்தும் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றார்.

காமத்துப்பாலில் இல்லறத்தான் இன்பம் பெறும் வழிகளை இனிய முறையில் எடுத்துரைக்கின்றார். அறம், பொருள், இன்பம் மூன்றையும் அழகாக எடுத்துக் கூறும் திருக்குறள் வாழ்வியல் நூலாகத் திகழ்கிறது. அதனாலேயே உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு நூலாகவும் உலகப் பொதுமறையாகவும் விளங்குகின்றது.

இன்று வானுயர்ந்த சிறப்பினை கொண்டுள்ளது உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களால் பெரிதும் போற்றி படிக்கப்படும் ஒரு நூலாக விளங்குகின்றது.

"கடுகு சிறிதெனினும் காரம் பெரிது" என்பர் குறுகிய இரு அடிகளில் ஆக்கப்பட்ட குறளானது இன்று எல்லா மக்களாலும் போற்றப்படுகின்றது என்றால் அதன் பொருட் சிறப்பே அதற்குக் காரணமாகும்.

**"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்"**

என்பது ஔவையாரின் அருள்வாக்கு குறளின் பெருமைக்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? திருக்குறளின் சிறப்பினை புலவர்கள் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

**"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத**
**எப்பொருளும் இல்லையாம் சொல்லால் பரந்த பாவால்**
**என் பயன் வள்ளுவனார்**
**சுரந்தபா வையத் துணை"**

என்று குறளின் புகழினை பாடுகின்றார். புலவர் மதுரை தமிழ் நாகனார் வள்ளுவரின் பின்வந்த புலவர்கள் யாவரும் அவரது கருத்துக்களைத் தத்தம் பாக்களில் புகுத்தியுள்ளமையைக் காண்கின்றோம். புலவர் போற்றும் புலவராக வள்ளுவர் விளக்குகின்றார். அவர் படைத்த குறள் உள்ளவரை அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை உலகப் புகழ் வாய்ந்த நீதி நூலாக உலகம் மாந்தர்களுக்கு வழிகாட்டும் தமிழ் மறையாக விளங்கும் திருக்குறளை ஓதி இன்புறுவேதே மனித வாழ்க்கைக்குகந்த நெறிகளை வகுத்து கூறும் திருக்குறள் என் நெஞ்சம் கவர்ந்த நூலாகும். அதனையே யான் எந்நாளும் விரும்பிக் கற்கின்றேன். உலகனைத்துக்கும் பொதுவாக இந்நூல் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு கூறும் நூலாக விளங்குகின்றது. இல்லறத்தை நல்லறமாக்கி மேற்கொண்டு ஒழுகும் முறைகளையும் விருந்தோம்பும் பண்பையும் மக்கட் பேற்றின் சிறப்பையும் திருக்குறளில் நாம் காணமுடிகின்றது. இதனாலேயே திருக்குறளை சிறந்த வாழ்வியல் நூலாக கருதுகின்றோம்.

ஒரு நாட்டுக்கோ, ஒரு மொழிக்கோ, ஒரு இனத்துகோ உரியதல்ல திருக்குறள் அது உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை ஒன்று படுத்த வல்லது. அத்தகு சிறப்புக்குரிய நூலை எந்நாளும் போற்றி கற்பதே நம் பெரும் பணியாக அமைதல் வேண்டும். தமிழுக்கும் தமிழினத்துக்கும் பெருமை சேர்க்கும் இந்நூலை வாழ்வில் எந்நாளும் மறவாது போற்றுவோமாக.

**"வள்ளுவர் தந்த திருமறையை – தமிழ்**
**மாதின் இனிய உயிர் நிலையை**
**உள்ளந் தெளிவுற பேற்றுவமே – என்றும்**
**உத்த மராகி ஒழுகுவமே"**

**நகுலேஸ்வரன் கஜானா,**
தரம் - 08,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு

பூவினை தேனீக்கள் கூட்டம் சுற்றி வருவது போல
பூமியை இளைஞர்கள் சுற்றி வருகின்றார்கள்
நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்கள் அவசியம்
இளைஞர்கள் இல்லாவிடின் - நாடு செழிப்பு இல்லை!
செல்வாக்கு இல்லை!!

நாடு வளர்ச்சி பெற இளைஞர்கள் தேவை
பார்வையாளர்கள் அல்லாது பங்காளர்களாக
நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது செய்ய
இளைஞர்கள் என்றும் அவசியம் இங்கு

எவ் இடர்ச் சூழலிலும்
இரவு, பகல் தெரியாது
சந்தோஷம், துக்கம் தெரியாது
பசி, தாகம் உணராது நாட்டுக்காய்
பணி புரிகின்றார்கள் இளைஞர்கள்

நாட்டின் வளர்ச்சியே இளைஞர்களின் இலட்சியம்
இளைஞர்கள் கையில் நாட்டின் வளர்ச்சி
இளைஞர் தமை மதிப்போம்
இளைஞர்கள் தமக்கு முன்னுரிமை அளிப்போம்.

**செல்வி. வஜிகா ஜெகன்**
தரம் - 09
**(அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது)**

# நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் சமூகத்தின் பங்களிப்பு

சமுதாய வளர்ச்சிக்கு மட்டுமன்றி
நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிப்பு கொடுக்கின்றான்
நாட்டினை முன்னேற்றிடவே
முன்னுதாரணமாக விளங்குவது
இளைஞரின் அடிப்படை உணர்வே

எமக்காகவும் சமூகத்திற்காகவும் உழைக்க
பல்லாயிரம் மக்கள் இருந்திடவே
இன்னல்கள் பல எம்மைத் தேடி
வந்த போது அயராது
உழைத்தான் அந்த இளைஞன்

இரவு பகல் பாராது காலங்கள் சென்றாலும்
தடைகள் பலவற்றைத் தாண்டியும்
உயர் மனப்பாங்குடனும் தன்னிறைவுடனும்
உன்னதமான பணிபுரிந்து
எம்மைக் காக்கின்றான் இளைஞன்

தன்நலம் கருதாது பிறர் நலம் கருதி
தம்மைப்போல் பிறரையும் நாட்டையும்
காத்திடவே தர்ம நெறியில் நின்று
நேசக் கரம் நீட்டி நாட்டுக்காகவும்
மக்களுக்காகவும் உழைக்கிறான் இளைஞன்

நாட்டின் அடைக்கலத்திற்காக
அனர்த்தங்களிலோ போர்க்காலங்களிலோ
அவனது உயர்ந்த எண்ணங்களால்
சமூகத் தொண்டனாக மாறி
முன்னேற்றப் படி ஏறுகின்றான் இளைஞன்.

நாளைய நாட்டின் வளர்ச்சி
இன்றைய இளைஞர்கள் கையில்
இளைஞர்கள் சக்தி மாபெரும் சக்தி
இளைஞர்கள் புரட்சி பெற்றிடும் வெற்றி
போற்றுவோம் இளைஞர்களை
முன்னேற்றுவோம் நாட்டினை.

**செல்வி. யுரேமி தயாகரன்,**
தரம் - 09
**(அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் நாட்டின் விடிவெள்ளி

ஒரு நாட்டின் சனத்தொகையைப் பொறுத்தவரை இளைஞர்கள் பெரும்பகுதியினராக காணப்படுகின்றனர். இவர்கள் நாட்டின் வழிகாட்டிகள் எனப்படுவர். அவர்கள் தமது வியர்வைத்துளிகள் ஒவ்வொன்றையும் நாட்டிற்காய் அர்ப்பணித்து உழைக்கின்றனர். நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் சங்கங்களின் வரிசையில் இளைஞர் சங்கமே முதலிடம் வகிக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் நாகரீகம் என்ற போர்வையில் மதுபோதைக்கும் ஹெரோயினுக்கும் அடிமையாகினாலும் நாட்டைக் காக்கவும் முன்னேற்றவும் பல இளைஞர்கள் தவறவில்லை. அந்த ரீதியில் அவர்களின் பங்களிப்பு பற்றி நோக்குவோம்.

ஒரு நாட்டில் உள்நாட்டு பிரச்சனைகள் என்றாலும் சரி வெளிநாட்டிலிருந்து தங்கள் நாட்டிற்கு வரும் பிரச்சனைகள் என்றாலும் சரி அந்தப் பிரச்சினைகளை தடுப்பதற்காக களத்தில் இறங்குவது இளைஞர்கள்தான். உதாரணமாக நாட்டில் போர் வந்தால் இராணுவப்படை, கடற்படை, விமானப்படை என்பவைதான் முதலில் இறங்குகின்றது.

இடர் காலங்களை நாம் நோக்கும் போது நாட்டில் இடர் காலங்களில் களத்தில் நின்று பணியாற்றுவது இளைஞர்களாகக் காணப்படுகின்றனர். உதாரணமாக ஓரிடத்தில் வெள்ளப்பெருக்கு அல்லது மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் எற்பட்டால் அங்கே மக்களுக்கு உதவ முதலில் நிற்பது இளைஞர்கள் ஆகும். அவ்விடத்திலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதில், நிவாரணங்கள் அளிப்பதில், முதலுதவி அளிப்பதில் இளைஞர்களே முன்னின்று உதவுகின்றனர். ஒரு நாட்டின் புரட்சி இளைஞர்கள் தான். தீர்க்க முடியாத பிரச்சினைகளைக் கூட இளைஞர்கள் ஒன்றிணையும் போது முடிவுகள் கிட்டுகின்றன. அதாவது கலாசாரத்தை காத்தல், பண்பாடுகளை காத்தல் என்பதில் கூட இளைஞர்கள் முன்னிலையில் நிற்கின்றனர். எங்கே இளைஞர்கள் போட்டியில் ஈடுபடுகின்றார்களோ அங்கே வெற்றிகள் குவிகின்றது அண்மைக் காலங்களில் பாரம்பரிய ஜல்லிக்கட்டுக்கு இந்தியாவில் தடை விதித்த போதும் இளைஞர்கள் கூடி தமது பாரம்பரியத்துக்காக போராடி வெற்றியும் கண்டார்கள். அண்மைக்காலத்தில் கூட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உள்ள நினைவுத் தூபியை உடைத்தபோது இளைஞர்கள் தான் போராட்டங்கள் செய்து மீண்டும் அந்தத் தூபியை கட்ட வைத்து வெற்றியும் கண்டார்கள். தற்போதைய கொவிட் காலநிலையில் கூட மக்களுக்கு முகக் கவசங்கள் மற்றும் தொற்று நீக்கிகள் என்பவற்றை வழங்குகின்றார்கள். ஊரடங்குகள் தளர்த்தப்படும் வேளைகளில் மக்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் நீர் தேவைகளை பூர்த்தி செய்தல் அது மட்டுமல்ல தமது கழகங்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றை அமைத்து வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழுகின்ற முதியோர்க்கும், சிறுவர்க்கும் அன்பையும் பாதுகாப்பையும் திறம்பட வழங்குவது மற்றும் அவர்களது உரிமைகளை அவர்களுக்கென நிர்ணயிப்பதற்காக கண்டனம் தெரிவித்தல், போரட்டம் நடத்துதல் போன்றவற்றிலும் இளைஞர்களே கூடிய பங்காற்றுகின்றனர்.

இவர்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதாரம் நாட்டின் கல்விசார் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு செய்து சிறந்த எதிர்கால சந்ததியையும் இனிமை மிக்க வாழ்விற்கு வழி வகுத்து கொடுத்தும் மரங்கள் அடர்ந்த வளம் மிக்க சுற்றுச் சூழலில் கால்தடம் பதித்து பகுத்தறிவு உடைய மனிதனாக பல்லாண்டு வாழ இப்போதே வழிவகுத்துக் கொடுக்கும் இளைஞர்களுக்கு நாட்டின் விடிவெள்ளிகள் என பட்டம்சூட்டி இளைஞர் சமூகத்திற்கு வாழ்த்துக்கள் தெரிவிப்போம்.

**தேவிகா உதயகுமார்,**
தரம் - 10.

**(அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் அறிவியலும்

நாம் இன்று அறிவியல் விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறிவியலால் ஆயிரம் ஆயிரம் விளைவுகளும் வியப்புகளும் நாளாந்தம் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அறிவியல் பல்லாயிரக்கணக்கான அதிசயங்களை தினந்தோறும் படைத்துக் கொண்டு இருக்கின்றது. அவற்றில் சில நாம் வாழ்நாளில் காணாதவையாகவும் ஆச்சரியம் மிக்கதாகவும் காணப்படுகின்றன. அவை மனித சமூதாயத்திற்கு பயன் தர வேண்டும் என்னும் நன் நோக்குடன் அறிவியல் விஞ்ஞான அறிஞர்களால் கண்டுப்பிடிக்கப்பட்டமையாக இருந்தாலும் அவற்றுள் ஒரு சில தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றது. மனித சமுதாயம் அறிவியல் விந்தைகளை ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

அறிவியல் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பற்பலவாயினும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளுள் முதல் நிலை பெறுவது மின்சார கண்டுபிடிப்பாகும். தோமஸ் அல்வா எடிசனின் அயராத உழைப்பின் பேறாக கண்டுபிடிக்கப்பட்ட மின்குமிழ் இன்று முழு உலகுக்கும் நன்மை அளிக்கின்றது. இவர் ஆயிரம் முறை தோற்ற பின்னர் மின்குமிழை கண்டுபிடித்தார். இவ்வுலகிற்கு வெளிச்சத்தை வழங்குவதில் மின்சாரத்தின் பங்கு அளப்பரியதாகும். மருத்துவத் துறையில் அறிவியலும் விஞ்ஞானமும் அரிய சாதனைகளை படைத்துள்ளது. அவற்றுள் நனோ தொழில்நுட்பங்கள், புற்றுநோய் சிகிச்சை, இதய சிகிச்சை போன்ற தொழில்நுட்பங்கள் மருத்துவத்துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையில் மட்டுமல்ல விவசாயத்துறை, கைத்தொழில் துறை போன்ற துறைகளிலும் அறிவியல் விஞ்ஞான தொழில்நுட்பங்கள் உருவாகி உள்ளது.

இவற்றின் மூலம் மனித சமுதாயத்திற்கு பல நன்மைகள் கிடைத்தாலும் சில தீமைகளை ஏற்படுத்தி விடுகின்றது. உதாரணமாக இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டு அந்நாட்டு மக்களுக்கு பெருமளவு சேதத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இன்றும் பரம்பரை அலகுகள் பாதிக்கப்பட்ட குறைபாடுள்ள குழந்தைகள் பிறந்து கொண்டு இருக்கிறார்கள். இதைப்போன்று நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் தீமையாகாத வகையில் அறிவியல் தொழில்நுட்ப சாதனங்களை உருவாக்குதல் வேண்டும்.

இவற்றை விடப் பல்வேறு தீமையளிக்கும் கருவிகள் உலகை அச்சுறுத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றது. இன்று நோய்களை உண்டாக்கும் கிருமிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. அரிய உயிர்களைப் பறிக்க உதவிடும் அழிவு சாதனங்களை உருவாக்குகின்றது இத்தகைய அபாயமான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலை நீங்கவேண்டும். அறிவியலை ஆக்க வழிகளில் பயன்படுத்த முன்வர வேண்டும்.

அறிவியல் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அவற்றின் பயன்கள் அளவிடற்கரியன. அவற்றை மனித சமுதாயம் பயன்பெறும் வகையில் பயன்படுத்த வேண்டும். இவற்றினை அழிவு வேலைகளுக்கு பயன்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும். ஆக்கப்பாதையில் அறிவியல் வளர்க்கப்படவேண்டும். இதன்மூலம் உலக சமுதாயம் ஒன்றுபட்டு முன்னேறிட வழி பிறக்கும். உலகை நேசித்து அறிவியலை வளர்ப்போம். விந்தை உலகில் விஞ்ஞானிகள் பலர் வளர்ந்திட அறிவியலை வளர்த்திடுவோம் வாருங்கள்.

**சிவயோகநாதன் விதுஜா,**
*தரம் - 10,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இல்லப் பிள்ளைகளின் யோகாசனப் பயிற்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிஷ்ட சிறுவர் இல்லம்













கனிஷ்ட இல்ல பிள்ளைகள் ஆலயத்திற்கு செல்லத் தயாராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் இளைஞர்களின் வகிபங்கு

எம் நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் சமூகத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமான ஒன்று ஆகும். இன்றைய உலகில் எத்தனையோ இளைஞர்கள் எம் சமுதாயத்தில் பல அரிய சாதனைகளையெல்லாம் செய்துள்ளனர். இளைஞர் செய்யும் சாதனை என்பது அளப்பரியது. ஏன் என்றால் எம் உலகமே இளைஞர் சமுதாயத்தால் தான் முன்னேறிக் கொண்டு இருக்கின்றது.

இளைஞர்கள் எமக்கென்று கடவுள் கொடுத்த ஒரு பெரிய பொக்கிசம் என்றே கூறலாம். ஏன் என்றால் எம் உலகில் இன்றைய இந்த காலகட்டத்தில் இளைஞர் சமூகம் மக்களிடம் எந்தவொரு எதிர்பார்ப்பும் இன்றி

**"கைமாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**

**என் ஆற்றுங் கொல்லோ உலகு"**

எம் பூமியில் பெய்யும் மழை எப்படி மக்களிடம் மறுவுதவி பெறுவதில்லையோ அதுபோல் தான் தன் கடமையை என்று நினைத்த உதவியைச் செய்யும் எம் இளைஞர் சமுதாயம் தங்களுக்கு கைமாறாக மக்களிடம் எதையும் பெறாமல் எதையும் பெறும் நோக்கம் இல்லாமல் தம் கடமையைச் செய்து கொண்டிருக்கின்றது.

எம் இளைஞர் சமூகத்தின் கடமைகளை எடுத்துக் கூறுவதாயின் பொலிஸ்படை, இராணுவப்படை, விமானப்படை, கடற்படை என்று பல படை படைகளாக திரண்டு எம் இளைஞர்கள் நாட்டின் நன்மையை மிகுப்படுத்திக் கொள்கின்றார்கள்.

இன்றும் எம் சமகாலத்தில் நிலவும் கொரோனா எனும் கொடிய நோயின் பரவலால் துன்பப்படும் மக்களுக்குஎம் இளைஞர்கள் உண்ணாமல் உறங்காமல் தம் ஓய்வைகூட ஒரு துளியும் சிந்திக்காமல் நாட்டின் நன்மைக்காகப் பல நன்மைகளை செய்து கொண்டு இருக்கின்றனர். அதுமட்டுமின்றி காவற்துறையில் வேலை செய்யும் இளைஞர்கள் தாம் இன்று நாளை உயிருடன் இருப்போமா என்று கூட சிந்திக்காது தம்காவல் செய்யும் கடமையினை உலகில் உள்ள ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் செய்து கொண்டிருக்கின்றார்கள். இன்னும் வெவ்வேறு வகையில் எம்இளைஞர்கள்நாட்டின்வளர்ச்சிக்காக போராடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இப்படி எல்லாம் நாட்டின் வளர்ச்சிக்காக பல இளைஞர் சமூகம் போராடிக் கொண்டு இருக்க ஒரு சில இளைஞர்கள் நாட்டிற்கும் வீட்டிற்கும் தீயவர்களாகவும் தீமையையும் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தீய பழக்கங்களான மது அருந்துதல், போதைப் பொருள்பயன்படுத்துதல், புகைப்பிடித்தல்போன்ற தீய பழக்கங்கள் எத்தனையே அறிஞர்களின் சிந்தனையையும் மீறி தீய செயல்கலாகக் தொடர்கின்றது.

போதை என்பது மனிதர்களின் உடலில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் புகுந்து அங்கத்தைத் தன்வசப்படுத்தி பின்னர் அழிக்கின்றது. இது ஒரு தீய பழக்கவழக்கமாகவே கொள்ளப்படுகின்றது.

பொதுவாகவே நம் ஊர்கடையில் மிககுறைந்தவிலை கொடுத்து வாங்கும் பாக்கு, சுண்ணாம்பு முதல் பலகோடி விலை கொடுத்து வாங்கும் ஹெரோயின் - அபின் ஆகிய அனைத்தும் போதையே, போதையை கண்டுபிடிப்பதும் எம் இளைஞர் சமூகமே. போதையைப் பயன்படுத்துபவனும் இளைஞர் சமூகமே. பின் போதையால அழிபவனும் அதே இளைஞன் சமூகமே. இது ஒருபுறம் இருக்க நம் தாய்த்திருநாடான இலங்கையைப் பார்க்கும் போது தீவிரமாக எம் இளைஞர்கள் போதைக்கு அடிமையாகிக் கொண்டு இருக்கின்றார்கள். சிகரட் பெட்டியில் புகைத்தல் கேடு என்று எழுதியே விநியோகிக்கின்றனர். அவர்களுக்குத் தெரியும் புகைத்தல் சுவாசப் புற்றுநோயை உண்டாக்கும். புகைத்தலால் உடனடி மரணம் கூட உண்டாகும் என்று எழுதி விற்றாலும் சில இளைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கிப் பயன் படுத்துவார்கள். சிகரட் புகையானது மாரடைப்பு, பாரிச வாதம் போன்ற நோய்களுக்கு மிகவும் முக்கிய காரணியாக விளங்குகின்றது. சிகரட் புகை தீங்கு விளைவிக்கும் 250 நச்சுப் பொருட்களை அடங்கியுள்ளதோடு அவற்றில் 50 இற்கு மேற்பட்டவை புற்று நோயை உண்டாக்கவல்லவை. அடுத்து இன்றைய இளைஞர் சமூக மத்தியில் மதுபாவனையானது அதிகரித்துவருகின்றது. இதையேல்லாம் அறிந்தும் ஒரு சில இளைஞர் சமூத்தில் தீயபழக்கங்களுக்கு ஆளாகிக்கொண்டு இருக்கின்றனர். எம் இளைஞர் சமூகம் இவ் தீயபழக்கங்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். இவர்களும் மற்றைய இளைஞர்கள் போன்று நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.

**மதுஷா சசிக்குமார்.**
*தரம் - 10,*

**(அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது)**

# கிருமிகளின் உச்சம் கொரோனா

2020ஆம் ஆண்டுமுதல் முழு உலகிற்குமே கண்டம் எனலாம். அதுதான் கொரோனா. இது ஒரு ஊகிக்க முடியாத வீரியமுடைய வைரஸ் ஆகும். இது எல்லையற்ற அழிவை மொத்த உலகுக்கும் வழங்கிதற்போது 2021 ஆம் ஆண்டிலும் கால்பதித்து விட்டது. அதைப் பற்றி நோக்குவோம். 1ஆம் அலை பரவியபோதே மக்கள் உயிரை இழந்து உறவுகளை இழந்து தவித்தனர். இப்போது 2ம், 3ம், 4ம் அலைகளும் சேர்த்து உலகை தாக்கி வருகின்றது. இந்நிலையில் நாட்டின் நிலைமை தலைகீழாகச் சென்று கொண்டிருக்கின்றது. சிறு குழந்தைகள் கூட இதற்குப் பலியாக வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வைத்தியர்கள் தமது உயிரை பணயம் வைத்து நோயாளிகளை மீட்டு எடுக்கின்றனர் . சேவல் கூவியதும் வேலை என்று சென்று ராத்திரி நேரம் வீடு திரும்பும் குடும்பத் தலைவனுக்கு இப்பொழுது பணக்காரன் வீட்டில் பாதணி துடைக்கும் வேலை கூட கிடைப்பதில்லை. வீட்டு அடுப்பில் பூனை தூங்குகின்றது. தாயின் முலைப்பாலை ஏங்கிக் குழந்தை தாய் முகம் பார்க்க அவள் தன் கணவன் முகம் பார்க்கின்றாள். அவனோ ஏழ்மை நிலையை எதிர்த்து நிற்கமுடியாமல் கிணற்றில் விழுந்து மாண்டு விட அவளும் தன் குழந்தையுடன் மாண்டு விடுகின்றாள்.ஆனால் அவ்வுடலை தூக்கி காரியம் செய்ய ஒரு மாந்தரில்லை.

மனிதத்துடன் வாழ்ந்த மானிடவம்சமது மயிரிழையில் கொவிட் வைரஸால் மரணமாகின்றதே. கர்ப்பிணி தாய்மார்கள் தம் கண்ணீரால் காவியம் எழுதுகின்றனர். வைரசசோதன் உரு மாற்றங்களான டெல்டா, லம்ப்டா, அல்பா, கொலம்பியா, டி 11 போன்றவற்றை அலங்கார மாற்றம் போல திரிபாக்கிக் கொண்டிருக்கின்றது. இக்காலகட்டத்தில் சிறுவர் முன்பள்ளிகள், பாடசாலைகள் வரை அனைத்தும் கொவிட் சிகிச்சை மையங்களாகவே தென்படுகின்றன. இவ் வைரசு ஆனது குழந்தைகளைக் கொன்று புதைக்கின்றது. ஊஞ்சலை ஆட்டுவது போல் நம் உலகை எளிதாக ஆட்டிப் படைக்கின்றது. கடதாசியை கிழித்து குப்பைக் குழியில் எறிவது போல் கொவிட் நோயால் மரணித்தவரை பிணவறையில் தூக்கி எறிகின்றனர். இப்படிப்பட்ட அவல நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோமே நாம். கொரோனா என்னும் கொள்ளை நோயானது உயிரை தன்வசம் எடுத்துவிடும் மர்ம பலம் வாய்ந்தது.

அதன் வஞ்சனையால் எமனுக்கு வேலை இல்லை. ஆயினும் இதை எம்மால் அழிக்க முடியவில்லை. இன்னும் நாம் இதன் தொற்றை அழிக்கக்கூடிய மருந்தைகண்டுபிடிக்கவில்லை ஆனால் தடுப்பூசிகள் மட்டும் அட்ரா செனகா,ஒக்ஸ்போர்ட் சினோபாம், ஸ்புனிக் பைசர் என பல்வகை பெயர்களுடன் மக்களுக்கு எதிர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகவழங்கப்படுகின்றன. ஆயினும் அது முற்றாக பலனளிக்கவில்லை. மக்கள் வாழவும் முடியாது சாகவும் முடியாது தவிக்கின்றனர். இச்சூழ்நிலையில் தொற்றாளர் எண்ணிக்கை கோடிக்கணக்கில் செல்ல உயிரிழந்தோர் தொகை பில்லியனை தாண்டி சென்கின்றது. மானிட வம்சம் மருந்து மூலிகைகளும், மாத்திரைகளும் பயனற்று போக கொரோனா வைரசு உயிரைக் கொள்ளையடித்திட மக்கள் கூட்டம் மாண்டு மடிந்ததே. உறவை உயிராய் நினைத்த ஏழை குடும்பம் அநாதையாகி நடுத்தெருவில் நிற்கின்றது. தான் பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல் திணறுகிறாள் தாய்.

இப்படிப்பட்ட ஓர் அவல நிலை எமக்கு. இந்த வைரசிற்கு இன்னும் மருந்துகளே இல்லை. தடுப்பூசி உண்டு. ஆனால் கொரோனா வைரசுகளின் திரிபிற்கே மருந்துகளோ போதாது தடுப்பூசிகளும் இல்லை. இதை நாம் வெற்றிகொள்ள முடியாது. ஆயினும் தொற்றிலிருந்து ஒரு சிலராவது உயிருடன் வாழ முடியும். உலகிற்கு அழிவு நிச்சயமே. எம்மில் அனைவரும் அதிலிருந்து தப்பி வாழவேண்டுமென துர்க்கை அம்மனை மனதார பிரார்த்திப் போமாக.

**செல்வி. குணம் தனுசா**
தரம் - 11

# சமூகத்துக்காக தனியொருவன்

இளைஞர்கள் சமுதாய வளர்ச்சிக்கு மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றார்கள். ஒரு நாடு சிறப்பாக வளர்ச்சியுற வேண்டுமெனின் கட்டாயம் அதில் இளைஞர்களின் ஒத்துழைப்பு இருக்கவேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு, உயர்வுக்கு உழைப்பது நாட்டு இளைஞர்கள் அனைவரதும் கடமையாகும். அது மற்றுமின்றி பொறுப்புமாகும். அந்த வகையில் தன்னாலான பங்களிப்பினைச் செய்ய இளைஞர்கள் முன் வருகின்றார்கள். நாம் பொதுவாக இளைஞர்கள் என பதினாறு வயது தொடக்கம் இருபத்தொன்பது வயது வரையானவர்களை வரையறுத்துள்ளோம்.

எந்தச் சந்தர்பத்திலும் பிறருக்கு உதவி மனப்பாங்கோடு நேசக்கரம் நீட்டி உதவும் இளைஞர்கள் சமூக இயக்கங்களில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். "எப்போதும் தாயாராகயிரு" என்ற தாரக மந்திரத்தை நோக்காகக் கொள்பவர்கள் இளைஞர்கள். இளைஞர்கள் நாட்டின் வழிகாட்டிகள் எனப்படுவார்கள். உடலாலும் உள்ளத்தாலும் செயலாலும் எப்பொழுதும் மற்றவர்களுக்குத் தொண்டு செய்யக்காத்திருக்கும் உயரிய பண்பு இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இவர்கள் சமூகத்தை வழிப்படுத்தி அதனூடாக நாட்டை சிறப்புற வழிப்படுத்த உதவுகின்றார்கள்.

தனியொருவனுக்காகச் சமூகம், சமூகத்துக்காகத் தனியொருவன் என்ற கோட்பாடுக்கமைய ஒவ்வொரு இளைஞர்களும் தம் சமூகத்தின் வெற்றிக்காகப்பாடுபடுபவர்கள். அதன் விளைவாக வீடும், நாடும் நன்மை அடைய இளைஞர் இலாபம் ஈட்டுவதோடு நன்மை பயக்கும் நடவடிக் கைகளையும் மேற்கொள்கின்றார்கள். இளைஞர்கள் நாட்டின் பாதுகாப்பு வேலிகளாகத் திகழ்கின்றார்கள். நாட்டின் எதிர்காலத்துக்காக உழைத்து நாட்டை செழிப்புற வைக்கின்றார்கள். தமது அறிவு, ஆற்றல், வயது என்பவற்றினூடாக சமூகத்தைப் பேணுகின்றார்கள். மனிதனுடைய ஏனைய பருவங்களை விட இளமைப்பருவமானது துடிப்புடைய பருவமாகும். 1642 ஆம் ஆண்டு பிறந்த ஐசாக் நியூட்டன் என்பவர் 84 ஆண்டுகள் வாழ்ந்தப் போதிலும் 23 வயதிலேயே தனது கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு வெற்றிக் கண்டார். இதனூடாக இளமைப் பருவம் துடிப்புடையாதாக விளங்குகின்றதை அறியலாம்.

உலகம் சரியாக இயங்குவதற்கு அதன் ஒழுங்கு எப்படி முக்கியமானதாக அமைகிறதோ அப்படியே ஒரு நாடு மற்றும் சமுதாயம் சீராக வாழ்வதற்கு இளைஞர்கள் அவசியம். இந்த இளைஞர்கள் தொண்டு செய்யும் மனப்பாங்குடையவர்கள். ஒரு நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அது பொருளாதாரத்திலோ/சேவைகளிலோ ஏற்படலாம். ஆனால் எவ்வாறான பிரச்சனைகள் இருந்தாலும் நாட்டின் முன்னேற்றத்திற்காக இளைஞர்கள் முன்வருகின்றார்கள். உதாரணமாக எடுத்துக் கொண்டால் சேவைத்துறையான மருத்துவத்துறையில் அறிவியல் அரிய சாதனைகளை இளைஞர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பிற்காக இளைஞர்கள் பல்வேறு வழிகளில் உதவுகின்றார்கள். உதாரணமாக இராணுவப் படையாகவும், விமானப்படையாகவும், கடற்படையாகவும் திகழ்ந்து போர் நிலைமைகளிலும் அனர்த்தங்களின் போதும் சட்டரீதியாக இடப்பெயர்வுகள், போக்குவரத்து வசதிகள் வழங்குதல், உயிர் பாதுகாப்பு வழங்குதல் தரை, கடல், ஆகாயப் பிரதேசங்களை பாதுகாப்பதுடன் மக்களுக்கு ஏற்படக் கூடிய பல்வேறு விபத்துக்கள், அனர்த்தங்களின் போது உதவி செய்வதற்கும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்து முப்படைகளாகத் திகழ்ந்து தாய் நாட்டிற்காகச் சிறப்பான சேவைகளை வழங்குகின்றார்கள். அதுமட்டுமன்றி விளையாட்டு துறையிலும் இளைஞர்களே பங்காற்றுகின்றானர். சொல்லப்போனால் துடுப்பாட்டம், காற்பந்து, கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் அதிகளவான இளைஞர்களே பங்குபற்றி நாட்டிற்குச் சிறப்பை வழங்குகின்றனர்.

நாட்டின் இரும்புத்தூண் போன்றவர்கள் அவர்கள். சக்தி மகத்தானது. நாட்டின் வளர்ச்சிக்கு அவர்கள் தம் சக்தியைப் பயன்படுத்துகின்றனர். "என்னிடம் நூறு இளைஞர்களைக் கொடுங்கள் நான் வலிமையான பாரதத்தை உருவாக்கிக் காட்டுகிறேன்." என்றார் சுவாமி விவேகானந்தர். இக் கூற்று இளைஞர் மீது அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை உணர்த்துகின்றது. இளைஞர்கள் நாட்டின் ஒற்றுமையைப் பேணவும் வேற்றுமைகளைக் களையவும் தங்களைத் தியாகம் செய்யவும் தயராக இருக்கின்றார்கள். இன்றைய இளைஞர் சமுதாயம் இவற்றை நன்குணர்ந்து அன்பும் அறமும் அமைதியும் கொண்ட தார்மிக சமுதாயத்தை உருவாக்கிடத் தயங்காது உழைக்கின்றனர். இந்த நாட்டை இச் சமயத்திலே காப்போம் இதுவே எமது இலட்சியம் என்று இளைஞர்கள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் மகத்தான செயல்களைச் செய்த இளைஞர்களை எவ்வாறு போற்றுவது. அன்றோ, இன்றோ என்றும் எக்காலகட்டத்திலும் உறுதுணையாக நிற்கும் இந்த இளைஞர்களுக்கு எம்மால் ஆன உதவிகளையும் நன்றியையும் தெரிவத்துக் கொள்ளவேண்டும். நாட்டின் கோலாக விளங்கும் இளைஞர்களே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றார்கள். எனவே இளைஞர்களை வழி தடுமாறாது தட்டிக் கொடுத்தது மதிப்பளித்து நல்வழிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு நாட்டு அரசினதும் கடமையாகும். நாளைய உலகை சிறப்புடன் வடிவமைக்க இளைஞர்கள் பணி இன்றியமையாதது ஆகும்.

**செல்வி. ஜெ. தமிழ்ச்செல்வி,**
*தரம் -10*


**(அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாத போட்டி நவீன உலகில் பன்மைத்துவம் சார்ந்த பிரச்சனைகளில் பிரதான தாக்கம் செலுத்துவது அரச கொள்கைகளே/இல்லை








T. Subashiny
3rd Year

R. Aiswarya
2nd Year

Faculty of Social Science and Languages

Two of our Home students participated and won 1st place.(Certificate + 50,000/= Cash prize)

## கவிதைப்போட்டி



Niruththika Jeevarasa.
Arts and Culture (3rd year)
Facultyg Special in Comparative Religion.
Eastern University



**திருகோணமலை மட்டக்களப்பு கிளை தமிழ்ச்சங்கம் நடாத்திய இணையவழிக் கவிதைப் போட்டியில் 'தமிழின் தனித் தன்மை" தலைப்பின் கீழ் முதலாம் இடம். துணிந்தெழு சஞ்சிகையின் கவிதைப் போட்டியித் பங்குபற்றியமை - தலைப்பு 'கொரோனாவும் சமூகமும்."**







**திரு. ந. காளிதாஸன் ஆசிரியரினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான கண்காட்சியும் பரிசளிப்பும் (நன்றி கொவிட் - 19)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை ரீதியில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகள்

## (கட்டுரை, சித்திரம், பேச்சு) 10.09.2021

(National Level Career week competition by Department of ManPower Employment




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிற்கு தொழில் வழிகாட்டல் சேவையின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்நாட்டிலுள்ளவர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். அந்தவகையில் ஒரு நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கு நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் தொழில் வழிகாட்டுதல் பற்றிய அறிவு அத்தியாவசியமாகிறது. எனவே தொழில் வழிகாட்டுதல் என்பது எல்லா பகுதியினருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வழங்கப்படும் உதவிச் சேவையாகும். நமது நாட்டிலோ அல்லது இந்த உலகத்திலோ சரி மனிதனின் வேலைகளையும் அடிப்படை வசதிகளையும் மிக விரைவாகவும் மிக இலகுவாகவும் செய்வதற்கு இந்த உலகம் நவீனமயமாகி உள்ளது. எமது நாட்டில் மக்களின் கஷ்டங்களை புரிந்து அரசாங்கத்தால் இலகுவான முறையில் இலவசமாகவும் குறைந்த செலவிலும் சேவைகள் சில வழங்கப்படுகின்றன. உதாரணமாக கல்விச் சேவை, வைத்தியசேவை போன்ற சேவைகளும் குறைந்த செலவில் போக்குவரத்து சேவை, வங்கிசேவை போன்றசேவைகளும் ஆகும்.

**'கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க கற்கத் தகுந்த நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும் என்ற பொருளின் மூலம் கல்வி கற்கும் ஒவ்வொரு மனிதரும் தங்களுக்குள் தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்தல் வேண்டும். இலவசமாக மக்களுக்கு வழங்கும் இந்த சேவைகளை கொண்டு வாழப் பழகுவதுடன் பல்வேறு இன்னல்களை கடந்தும் தாண்டியும் வாழ பழகுதல் வேண்டும். இவ்வாறு ஒரு மனிதன் முன்னேற்றம் அடைகின்றான். இதற்கு ஊன்றுகோலாய் நிற்பது கல்வி ஆகும். இந்தக் கல்வியை வழங்குவது கல்வி சேவையின் முக்கியமாகும்.

தொழில் வழிகாட்டுதலை நோக்கும் போது அறிவான பலர் ஆற்றல்மிக்க பலர் ஏதோ ஒரு காரணத்தினால் தமது திறமைகளை சமூகத்திலோ அல்லது நாட்டிலோ முன்வைக்க முடியாமல் உள்ளனர். உதாரணமாக சில சாதனைகளை படைக்க மூலதனம், நிதி, எனப்பல பிரச்சனைகளை எதிர்கொள்வதை நோக்கத்தக்கதாகும். இதனை விட சிலர் பயம், வெட்கம், அனுபவமின்மை, துறை சார்ந்த போதிய அறிவின்மை போன்றவற்றினால் தடம் மாறுகின்றார்கள். இவர்களுக்கே தொழில் வழிகாட்டுதல் என்பது முக்கியமானதாக காணப்படுகின்றது. மக்களுக்கு தொழில் வழிகாட்டலை மேற்கொள்ள அரசாங்கம் பல வழிகளில் நாட்டு மக்களுக்கு உதவுகின்றது. சுய தொழில்களுக்கு கடன் வழங்குதல், வசதி குறைந்தவர்களுக்கு சுய தொழில் வழிகாட்டல், பயிற்சிகள் அளித்தல், பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பல துறைகள் சார்ந்த அறிவு வழங்குதல், கருத்தரங்குகள் வைத்தல் என்பன மேற்கொண்டு வருகின்றது.

ஒரு நாடு முன்னேற்ற பாதையில் செல்ல வேண்டுமாயின் அங்குள்ள ஒவ்வொருவரும் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பாங்குடனும் செய்தலும் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் நாட்டில் உள்ள அடிப்படை சேவைகள் மற்றும் வளங்கள் பற்றிய பூரண அறிவுடன் இருத்தல் அவசியமாகின்றது.

**செல்வி. திவ்னிஜா சிவயோகநாதன்,**
தரம் - 11.

**[அகில இலங்கை ரீதியில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பாராட்டு பத்திரம் பெறப்பட்டது].**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் வாழ்வே மாயம்

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்பது ஆன்றோர் வாக்கு. அதாவது நோயில்லாமல் வாழ்வதே உலகில் மிகப் பெரிய செல்வம். ஆனால் இந்த உலகம் கொரோனா என்னும் கொடிய உயிர் கொல்லி நோயால் ஆட்டிப்படைக்கப்படுகின்றது. உலகில் எத்தனை நோய் வந்தாலும் அது சீக்கிரம். மாறிவிடும். இந்த கொரோனா மனித வாழ்வையே புரட்டிப் போடுகிறது. இந்த கொரோனா உயிரை காவு கொள்கின்றது. நமது செல்வத்தை நம்மிடம் இருந்து பறிக்கின்றது.

'உலகம் உள்ளங்கையில்' என்று கூறிய காலம் சென்று 'உலகம் கொரோனாவின் பிடியில்' என்றாகிவிட்டது. இந்தக் கொரோனா 2019 டிசம்பர் மாதம் சீனாவிலுள்ள வுஹான் எனும் நகரில் உள்ள சந்தையில் ஒரு பெண்மணிக்கே பரவியது. முதலில் சீனாவால் தான் பரப்பப்பட்ட வைரசு என்றும் கூறப்பட்டது. பிறகு ஒரு பெண் விஞ்ஞானி ஆய்வுகளுக்குப் பின் பாம்பை வௌவாலை உண்டதால் அந்த வௌவாலை மனிதன் உண்டதால் இது பரவியது எனறும் இது இயற்கையாக பரவிய வைரசு என்றும் கூறப்பட்டது. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் தற்போது பாம்பின் விஷமே கொரோனா தடுப்பூசிக்கு மருந்து என கூறப்படுகின்றது. இந்தக் கொடிய ஆட்கொல்லி வைரசுக்கு விஞ்ஞானிகளால் (Covid-19 Corona virus) என அழைக்கப்படுகின்றது.

பச்சிளம் குழந்தை முதல் பல்லு போன பாட்டி வரை அனைவரும் வீட்டின் உள்ளே அடைபட்டுக் கொண்டு தவிக்கின்றனர். அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்கள் தவறாமல் சம்பளம் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் தினம் தினம் கூலி வேலை செய்பவர்கள் வீட்டில் உணவிற்காக மிகவும் கஷ்டப்படுகின்றனர். இது மட்டும் பிரச்சனை இல்லை. அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவைப் பெற முடியாமல் உலகில் பலர் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு உட்கொள்கின்றனர்.

ஒரு மனிதன் சுயமரியாதையுடன் சமூகத்தில் வாழ வேண்டுமானால் தொழில் வேண்டும். தொழில் பெற கல்வி அவசியம். ஊரடங்கு அமுல் படுத்தப்பட்ட காரணத்தினால் வெளி இடங்களுக்கு செல்ல முடியாத மக்கள் கணினி, தொலைபேசி மூலம் கல்வி கற்கின்றனர். ஆனால் என்ன பயன்? சிலருக்கு நேரடி கல்வியை படிப்பதற்கே ஐயோ என்றாகின்றது. இந்த முறையில் கல்வியை எப்படி கற்பார்கள் இதனால் கண் பார்வை குறைபாடு, முன் பாதிப்பு என்பன ஏற்படுகின்றது. சாதனை படைக்க வேண்டியவர்கள் வேதனையோடு வீட்டில் நான்கு சுவரையும் பார்த்து மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

"வந்தது கொரோனா என்ற கொடிய நோய் அழித்தது மானிடம் என்னும் உறவை"

சொந்த பந்தம் இருந்தும் கதியின்றி அனாதைப்பிணமாக இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்கின்றார்கள். கோடிக்கணக்கான மக்களுக்கு இந்த நோய் எல்லையின்றி பரவி வருகின்றது. இந்த வைரசு பரவி தனிமை என்னும் வலியை அனுபவிப்பதை விட ஒரு நொடியில் இறந்து விடக்கூடாதா என்று சிந்திக்கின்றனர். கொரோனாவுடன் வாழப் பழகிக் கொண்டு இருக்கின்றனர்.

"உணவே மருந்து மருந்தே உணவு" கொரோனா வைரசை கட்டுப்படுத்த தடுப்பூசி திட்டம் உலகளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பைசர், அஸ்ட்ராஜெனிகா, மொடெர்னா, சினோபாம் போன்ற தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றது. இந்தத் தடுப்பூசிகள் போட்டால் கொரோனா பரவாமல் தடுக்கலாம். ஆனால் முற்றாக அழிக்க முடியாது. கொரோனா அழிய வேண்டுமானால் மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். இதற்கு முக கவசம் அணிதல், கண் மூக்கு போன்றவற்றை தொடுவதை தவிர்த்தல், கைதுப்பரவாக்கி மூலம் கைகளை அடிக்கடி கழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல், கை குலுக்குதல், கட்டி அணைத்தல் போன்றவற்றை தவிர்த்தல், வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கு சென்று வீட்டிற்கு வரும்போது நாம் கொண்டு சென்ற பொருட்களை கழுவிய பிறகு வீட்டினுள் எடுத்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றல் அவசியம்.

ஊரடங்கு அமுல்படுத்திய நிலையில் நாடு முடக்கப்பட்டுள்ளது. கடைகள் திறக்கப்பட வில்லை. இதனால் கடையில் உள்ள பொருட்கள் காலாவதி ஆகின்றது. வெளிநாட்டு உள்நாட்டு வியாபாரம் தடைப்படுகிறது. பொருளாதாரப் பற்றாக்குறை, வருமானக் குறைவு என்பன ஏற்படுகின்றது. எத்தனையோ நல் உள்ளம் கொண்ட மனிதர்கள் தம்மால் இயன்ற சில உணவுப் பொருட்கள், வீட்டுப் பொருட்களை வழங்கி பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர். இருப்பதைக் கொடுத்து உண்டார். எமக்கு இல்லாதபோது நிச்சயம் அந்தக் கடவுள் அள்ளிக் கொடுப்பான்.

தற்போது சினிமாப் பாடலைக் கூட கொரோனா பாடலாக மாற்றியுள்ளனர். உதாரணமாக நடிகர் ரஜினிகாந்த் நடித்த படம் ஒன்றின் பாடல் தில்லானா தில்லானா என்ற பாடலை "கொரோனா கொரோனா என்ன கொண்டுடாதே வீணா" என்று கேலியாக பாடப்பட்டுள்ளது. தற்போது வெளியான நெற்றிக்கண் திரைப்படத்தில் இதுவும் கடந்து போகும் என்ற பாடலில் கொரோனாவுக்கு பாடப்பட்டது போல் விளங்குகின்றது. இதுவும் கடந்து போகும் என்று சொல்லி சொல்லி மூன்று வருடங்கள் ஆகின்றது.

சிறிதாகபரவியவைரசு மனித குலத்தையே அழித்து வருகின்றது. நம் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்களை தருகின்றது. கொரோனா என்னும் ஆட்கொல்லி வைரசு நம் வாழ்வை ஒரு மாயமாக்கி விடுகின்றது. இந்த அவல நிலைக்கு எப்போது தான் விடிவு கிடைக்குமோ?

**செல்வி. செ. மீனலோஜினி,**
A/L 2023,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு காண்போம் திட்டமிடுவோம் வேலை உலகை வடிவமைப்போம்

"கனவு காணுங்கள்
ஆனால் கனவு என்பது
நீ தூக்கத்தில் காண்பது அல்ல
உன்னைத் தூங்கவிடாமல்
பண்ணுவது எதுவோ
அதுவே (இலட்சிய) கனவு"

என்கிறார் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர் கனவு என்பது ஒரு மனிதன் தூக்கத்தில் காண்பதல்ல; அவனைத் தூங்க விடாமல் எக் கனவு துரத்துகின்றதோ அதுவே இலட்சியக் கனவு. என்றார். இதனையே கனவு காணுங்கள் என உலகிற்குக் எடுத்துரைத்தார். ஆகவே நாம் எச் செயல் செய்யும் போதும் அது பற்றிய ஓர் சிறந்த கனவு கொண்டிருத்தல் வேண்டும். எண்ணங்கள் சிறக்கும் போதும், சிந்தனைகள் அழகாகும் போதும் முடிவும் நேர்த்தியாகவும் நல்லதாகவும் அமையும். காணும் கனவிற்கு செயல் துடிப்புக்கொடுக்கும் போது திட்டமிடல் மிக முக்கியமானதாக மாறி விடுகின்றது.

திட்டமிடல் என்பது ஒரு நேரத்திலும் இடத்திலும் அமைக்கப்பட்ட குறிக்கோள்களை முறை மற்றும் கட்டமைப்போடு ஒழுங்கமைப்பதன் செயல்முறை மற்றும் விளைவு ஆகும். திட்டமிடலின் படிமுறைகளாக ஓர் கொள்கையோ அல்லது செயலையோ முதலில் முடிவு செய்தல் வேண்டும். அக் கொள்கைகள் குறித்து தகவல்களை திரட்டி ஆய்வு செய்து அது தொடர்பாக எழும் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். அப் பிரச்சினைகள் குறித்து எழும் மாற்று விளக்கங்களைத் தெளிவுபடுத்தி அவ் விளக்கங்களில் சிறப்பானதாகத் தோன்றுவதை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டும். இவ்வாறு எந்தச் செயலையும் பற்றி ஓர் சிறப்பான கனவைக் கொண்டிருப்பதோடு அதனைத் திட்டமிடும் போது அச் செயல் தரமானதாகவும் முழுமையானதாகவும் நிறைவு பெறுகின்றது.

காலையில் எழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அன்று பல்வேறு கடமைகள் காத்திருக்கும். ஒவ்வோர் மனிதனுக்கும் அன்று முடிக்க வேண்டிய வேலைகள் நிறைந்து கிடக்கும் அதிகாலை வேளையிலே அவன் தனக்குத் தானே ஓர் திட்டமிடலை அமைப்பதன் மூலம் அன்றைய நாளினைச் சிறந்த நாளாக மாற்ற முடிகின்றது. பின்பு இரவுப் படுக்கைக்கு தூங்கப் போவதற்கு முன் அன்றைய தனது திட்டமிடல் பற்றி சில நிமிடங்கள் யோசிக்கும் போது தன்னால் நிறைவாக முடித்த காரியங்கள் பற்றியும் தனது திட்டமிடலில் தவறவிட்ட விடயங்கள், ஏற்பட்ட பிழைகளையும் அவனால் அறிய முடிகின்றது. இதனூடாக அன்றைய நாளை விட அடுத்த நாளினை அவனால் சிறப்பாக வடிவமைக்க முடிகின்றது.

சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் பல்வேறுபட்ட வகிபாகங்களினை வகிக்கின்றான். அவ்வாறு தனது வகிபாகங்களிற்கு ஏற்ப திட்டமிடலினை அமைக்க வேண்டிய தேவைப்பாடு மனிதனுக்கு உள்ளதாகும். உதாரணமாக ஓர் அன்னையை எடுத்துக் கொண்டால் அவள் வீட்டில் பிள்ளைகளுக்கு தாயாக, கணவனுக்கு மனைவியாக, அவளது தாய் தந்தைக்கு மகளாக, மாமன் மாமியாருக்கு மருமகளாக வேலைத்தளத்தில் உயர் அதிகாரியின் கீழ் ஒரு ஊழியராக இவ்வாறு ஒரு வேலைக்குச் செல்லும் சாதாரண பெண் பல்வேறு வகிபாகத்தினை வகிப்பதை காணமுடிகின்றது. ஆகவே அன்னையானவள் அதிகாலை எழுந்து திட்டமிடும் போது தனது இடங்களிற்கும் வகிபாகவகிபாகத்தினை ஏற்ப தனது செயலினை திட்டமிடலுடன் வடிவமைக்க வேண்டும். இது போலவே தான் ஒவ்வொரு மனிதனும் தனது வகிபாகங்களிற்கு ஏற்ப திட்டமிடலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

திட்டமிடலின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நாம் பௌதீகத் திட்டமிடல், சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபாட விதான பயிற்சிகளின் போது எமது இல்லப் பிள்ளைகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகத்தில் கடமையாற்றும் எமது பிள்ளைகள்

Thirumakal Press Sri Durgadevi Devasthanam.







அன்றாட கடமையின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டில் பொதுமுடக்க காலத்தில் (During the lock down, August, September- 2021) சிறுவர் இல்லப்பிள்ளைகள் உள ஆசுவாசப்படுதலுக்காக (Mental relaxation) தலைவரின் ஆலோசனைப்படி பூந்தோட்டம் அமைத்தலும் பராமரித்தலும்**





பூந்தோட்டம் அமைத்து இரண்டு மாதங்களுக்கு பிறகு

## During the lock lown Students are participating in Cooking and Enjoy by themselves



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# General Convocation - 2021



**செல்வி. தேவதர்சினி தர்மகுலராசா** (B.Eng. Software Engineering)
Now working as Associate Process at Informatics Holdings Ltd.



**செல்வி. பிரசா விஜயகுமார்** B.A (Hons) History
Sp.Degree. (2nd upper)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார திட்டமிடல், நிர்வாகத் திட்டமிடல் என பிரிவுகளாக வகைப்படுத்துகின்றோம். இவ்வாறாக எந்த ஒரு வேலையையும் திறம்பட செய்ய வேண்டுமாயின் திட்டமிடல் இன்றியமையாதது ஆகின்றது. இவ்வாறாக நாம் ஒவ்வொரு செயலினை மேற்கொள்ளும் போது கொள்கைத் திட்டமிடல், நிர்வாகத் திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டமிடல், செயற்பாட்டுத் திட்டமிடல், மையப் பரவலாக்கத் திட்டமிடல் என மேலும் திட்டமிடல்களை வகுக்க வேண்டும்.

இலக்கு இல்லாதவனின் வாழ்க்கை காற்றில் அடித்துச் செல்லப்படும் படகு போன்றது என்கிறார்கள் அறிஞர்கள். வாழ்கைக்கு ஓர் இலக்கினை முன் வைத்தே திட்டங்களை தீட்டி அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

ஓர் கட்டடம் கட்டுகின்ற போது அதன் அத்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும் அத்திவாரம் தான் அடிப்படை. அத்திவாரம் உறுதியற்றதானால் கட்டடம் எந்த நேரத்திலும் எப்போதும் இடிந்து விழலாம். அது போல தான் வேலைச் சுமையைப் பார்த்து தற்கொலைகள் செய்தவர்கள் உண்டு எனின் அது பொய்யான கருத்து.

பார்க்கின்ற வேலையில் அதிகப்படியான குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு அதனால் வந்த சிக்கல்களை சமாளிக்க முடியாமல் உயிர் விட்டவர்கள் வேண்டுமானால் இருக்கலாம். இதற்கு முதற் காரணம் சுய திட்டமிடல் இன்மையாகும். அதாவது இவர்கள் தமக்கு நிறைந்து காணப்பட்ட வேலைகளில் எந்த வேலை உடனடியாக செய்யப்பட வேண்டும்; வேலைகளை எப்படி திட்டமிட்டு; எந்த ஒழுங்கில் நிறைவு பெற வைக்க வேண்டும் என தெரியாதவர்களாகும். திட்டமிடல் என்பது ஒரு மனிதனுக்கு வேலையை சுலபமாக்குவதுடன் மன நெருக்கடியையும் விரைவாகக் குறைத்துவிடும் திட்டமிடல் அற்றவர்களே வேலைகளை சுமையாகப் பார்ப்பத்துடன் அவற்றால் மன நெருக்கடிக்கும் சலனத்துக்கும் ஆளாகின்றனர்.

நவீன 21ம் நூற்றாண்டில் வீடு, வேலைத்தளம், சமூகம் என மனிதன் தன் இருப்பினை உறுதி செய்வதற்காக ஓடிக் கொண்டிருக்கும் இத் தொழில் நுட்ப உலகில் பல வேலைகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றான். ஆகவே வேலை எவ்விடத்தில்செய்ய வேண்டினாலும் சரி; எந்த ஒரு இலக்கை அடைய வேண்டும் என்றாலும் சரி; ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் வேலை பற்றியோ தன் இலக்குப் பற்றியோ சிறந்ததொரு கனவினைக் காண்பதோடு மட்டுமல்லாமல் அதற்கான திட்டமிடலையும் மேற்கொள்வதன் ஊடாக ஒவ்வொரு மனிதனும் வேலை உலகை சிறப்பானதாக வடிவமைக்க முடியும் ஆகவே கனவு காண்போம். திட்டமிடுவோம். வேலை உலகை வடிவமைப்போம்.

**செல்வி. ப. திருமகள்**
A/L (2022),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புலகில் மதம்

மண்ணோடு போகும் மாந்தரெல்லாம்
மதிப்பிழந்து ஒற்றுமையை எதிர்ப்பது ஏனோ!
வீழ்கின்ற வரைக்கும் மாறாத குணங்களும்
பூவுலகமதில் இருக்கின்றதை மறந்துவிட்டீர்களா?

மதம் மனிதனை மாண்புறச் செய்கின்றது
மனிதநேயம் நம்பிக்கையை உதிக்க வைக்கிறது
பொதுமன்னிப்பு மாபெரும் அதிசயமாகிறது
சாந்தி நிலையே நிலையான சக்தியாகின்றது

உரக்க கூறுங்கள்! மதங்கள் நெறிகளாயின!
உன்னதப் படைப்பாய் மக்கள் பின்பற்ற
நல்வழிப்படுத்தும் நம்பிக்கையாய் சமயங்களும் மாறின!
அதனை ஏற்றுக் கொள்வதே சாத்தியமானது

ஒவ்வொரு மதப்பிரிவும் வெவ்வேறானவை அல்ல,
ஒரு பொருளைக் குறிப்பிடும் பாகங்களாயின!
விளங்க முடியாதவற்றை விளங்க வைத்தன
ஒற்றுமையை உரிமையாக்க உன்னதங்களாகமாறின,
மதங்கள் எனும் பிரிவுகள் சமூக நம்பிக்கையை
ஏற்றுக்கொண்டன.

**செல்வி. நிவேனிகா ஜீவராசா,**
தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம். சீதுவ.
Notional Institute of Social Development.
Seeduwa,

## எங்கே போகிறது எதிர் காலம்

ஆடையில்லாமல் வாழ்ந்த
ஆதி மனித காலமுதல்
அறிவியல் கல்வியில் வாழும்
விஞ்ஞான காலம்வரை
மனிதன் அலைவது
உணவைத் தேடியே!

நவீன எந்திரங்களை
கண்டுபிடித்த மனிதனும்
மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட
நவீன எந்திரங்களும்
விதைக்காமல் உணவை
இன்றும் கண்டறியவில்லை!

அறச்சோறு என்று தொடங்கி
அன்னதானமும் நிகழ்கின்றது
வறுமையில் வாழ்ந்தாலும்
விருந்தோம்பலை விடவில்லை
பழந்தமிழர் வாழ்ந்த சீரான
சிறப்பான வாழ்வை

நாகரீக மோகத்தில் மயங்கி
நல்லவற்றை நசுக்கி எறிந்து
நாடகமாடிய நடிப்போடு
நடமாடும் மக்களை
நானும் பார்க்கையில் நரகமென்றே
தோன்றுகின்றது

பணம் படைத்தவன் ருசிக்காக அரைபிடி
வாங்குவான் ஆயிரம் கொடுத்து
பாவம் ஏழை எங்கே போவான்
அடிவயிற்றில் கிள்ளும் பசிக்கு
இன்று அழிக்கப்படும் விவசாயம்
நாளைய மக்களின் அழிவிற்கே

செல்வந்தரானாலும் மனிதம் கொண்டு
ஊருக்கே உலை வைத்தனர் - அன்று
செழிப்பவரானாலும் மனிதம் கெட்டு
ஊருக்கே உலை வைக்கின்றனர் - இன்று
எங்கே போகின்றோம் நாம்
எதை நோக்கி போகின்றோம்.

**செல்வி. யான்சிகா ஆனந்தராசா,**
*கிழக்குப் பல்கலைக்கழகம்,*
*1ம் வருடம் (2021).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற மனித வாழ்வின் பண்பியல்

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"**

என்பது உலகத்தில் வாழுகின்ற மனிதர்களால் போற்றப்படுகின்ற வள்ளுவப் பெருமானின் கருத்து ஆகும். நாம் பிறந்திருக்கின்ற பூமியிலே உறக்கம் என்பது இறப்பு போன்றதாகும். பிறப்பு என்பது உறங்கி விழிப்பதை போன்றதாகும். உறங்கி விழிப்பது போன்று காணப்படுகின்ற பிறவி என்பது எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட பெரிய வரமே. இப்பிறவியின் பயனை மனிதராகிய நாம் உணர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். பிறவியின் இரகசியத்தை உணர்கின்றவன் தனது பிறவியின் பலனை முழுமையாக அடைந்து விடுகிறான். பிறவியின் பயனை உணர முடியாதவன் தனது வாழ்க்கையினை அர்த்தமற்றதாகவே மாற்றி விடுகின்றான்.

மனிதன் என்பவன் யார் என்ற வினாவை வினாவுகின்ற போது பல்வேறு ஆசைகளையும், விருப்பங்களையும், வெறுப்புக்களையும் மனதில் வளர்த்துக் கொள்ளும் ஒருவனாகவே காணப்படுகின்றான். அவன் இவ்வாறு தன் மனதில் வளர்த்துக் கொள்ளும் ஆசை, மோகம், விருப்பு, வெறுப்பு என்பவற்றால் தனக்கு ஏற்பட்டுக் கொள்ளும் விளைவுகளை உணர்வதற்கு முன்வருவதில்லை "மனித மனம் என்பது ஒரு குரங்கு" என நாம் அனைவரும் அறிந்ததே. மனித மனம் ஒரு குரங்கைப்போன்று ஒரு நிலையில்லாதது தான் என்பதே உண்மை.

**"ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல"**

என்பது வள்ளுவப் பெருந்தகையின் குறட்பாவே ஆகும். நிலையற்ற இந்த வாழ்க்கையிலே வாழ்க்கையின் மகத்துவத்தை முழுமையாக அறிந்து வாழ தெரியாதவனுக்கு ஆசைகள் பல. ஆசை என்பது எந்த மனிதனை தான் விட்டு வைக்கிறது. ஆனால் இவ் ஆசைகளை அடக்கி வாழ்பவனே மனிதன் எனும் நிலையை அடைகின்றான். மனிதனானவன் நிலையான வாழ்வில் நிலை இல்லாதவற்றை நிலையானவை என்று நினைப்பது அறிவற்ற தன்மையை பறைசாற்றி நிற்கிறது.

மனிதனுடைய வாழ்வானது கற்காலம் தொடக்கம் இன்றைய கணணி தொழில்நுட்ப யுகம் வரை மாற்றங்களும் போராட்டங்களும் நிறைந்ததாக இருக்கிறது.காரணங்களைத் இதன் தேடியதால் விஞ்ஞான வளர்ச்சியின் பாதையில் எத்தனையோ சாதனைகளும் பரிணாமங்களும் ஏற்பட்டு வருகின்றது. சூழ்நிலை மாற்றம் என்பது மனித வாழ்வின் உயர்ச்சிக்கு தேவையான ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும் மனித வாழ்வின் அர்த்தங்கள் என்பது என்றும் மாற்றம் அடையக் கூடாது.

மனித மனங்கள் இடையே ஏமாற்று வித்தைகள் ஏராளம் உண்டு. எமது இளைய சமுதாயம் வன்முறைகளை நாடி செல்கின்றது. எம் இனத்திற்கே ஆறாத வடுக்களை தோற்றுவிக்கின்றது. உலகின் எந்த மூலையில் பார்த்தாலும் பஞ்சமாபாதகங்கள் மலிந்து கொண்டே செல்வதைக் காண்கின்றோம். எறும்பைக் கொல்லப்பயந்த மனிதன் இன்று மனிதனையே கொன்று விட்டு அவ்விடத்திலேயே குழிதோண்டிப் புதைத்து விட்டு ஏதும் அறியாதவன் போல் இருக்கும் மாபெரும் கொடுமையை காணும் அதிர்ஷ்டசாலிகளாக நாம் வாழ்கின்றோம். மனிதாபிமானத்தை மறந்துவிட்டு ஆணவச்செருக்கோடு அழிவுப்பாதையை நோக்கி ஓடுவதால் விளையும் பேரபாயத்தை மனித இனம் சந்திக்க வேண்டி இருக்கின்றதே. இத்தனை அவலங்களுக்கும் காரணம் தான் என்ன?

வசதிகளைத் தேடி, வாழ்வை தேடி, தாய் நாட்டை விட்டே ஓடிச் செல்பவர்கள் தம் வாழ்வையே மறுகணம் தொலைத்துவிட்டு நிற்கின்ற அவலத்தை காண்கின்றோம். பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடும் பேராசையால் போட்டி, பொறாமை வயப்பட்டு உண்மைப் பொருளை தேட மறந்து பிறவியின் பயனை பெற மறந்து துரோகங்களும், மனவிரக்தியும் அதனால் நோய்களும் நிறைந்த வாழ்வையே நாம் கண்கூடாக காண்கின்றோம். ஆசை மோகத்தில் வெளிநாடுகளுக்கென தம் பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர்கள் அவர்களை நினைத்து உண்ணாமல் உறங்காமல் தம் வாழ்வையே மறந்து இறந்து போகின்றனர்.

அறியாப்பருவத்தில்பெற்றோரை,உற்றாரை இழந்து அநாதைகளாய் அலைந்து பசிக்கொடுமையாலும் அரவணைக்க யாருமின்றி இரத்த கண்ணீர் விடும் நேரத்தில் பரிதாபம் கண்டு இரங்காத மனம் கூட ஒரு மனித மனம் தான். இம்மனிதனிடையே மனிதம் என்பதே இருப்பதற்கு பயந்து தலைதெறித்து ஓடி விட்டது எனலாம். மனித மனங்களில் அன்பு, இரக்கம், மனித நேயம், நேர்மை, உண்மை, நீதி, நியாயம் அற்றுப் போனது தான் காரணம். மனிதனிடத்தில் மனிதம் என்பது அற்றுப் போனதால் வாழ்க்கையின் அர்த்தமே மாறிவிட்டது.

**"அன்போடு இயைந்த வழக்கென்ப**
**ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு"**

என்பது வள்ளுவப் பெருந்தகையின் கூற்று. உடலும் உயிரும் பொருந்தியிருக்கும் உயிர் வாழ்வானது நாம் பிறரிடத்தில் அன்பு காட்டி வாழத்தான் என்பதை உணரவேண்டும்.எமது வாழ்நாளை வீணாக்காமல் அறம் செய்து வாழ்கின்ற போது அது மறுபிறப்பை தடுக்கும் தடைக் கல்லாக அமையும் என்பது நிஜமே. இனிய சொற்கள் நன்மை தருவதை அறிந்திருந்தும் ஏன் தான் கடுஞ்சொற்களை மனிதர்கள் பேசுகிறார்களோ தெரியவில்லை நமக்கு எந்த உதவியும் செய்யாத ஒருவருக்கு நாம் உதவி செய்கின்ற போது அவ்வுதவிக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் கூட ஈடாகாது என்பது உண்மை.

மனித மனத்திடையே பொறாமை குடிகொண்டு தான் இருக்கிறது. பொறாமை கொண்டவனுக்கு வேறு கெடுதலே இல்லை. அவனது பகைவர்கள் தவறினாலும் அவனது பொறாமையே அவனை அழித்துவிடும். பொறாமை கொண்டவனை "திருமகள் தன் மூத்தவள் மூதேவிக்கு அடையாளம் காட்டிவிட்டு போய் விடுவாள்" என்பது ஒர் கருத்து. நல்லவர்களை சுமக்கும் பூமி கோள் சொல்லுபவர்களையும் சுமக்கிறது. நிலையற்ற இவ்வாழ்விலே மனிதனால் இலகுவாக அடையக்கூடியது புகழ் மட்டுமே இதனை மனிதன் உணர வேண்டும்.

மனித மனத்திடையே தனது உடலை வளர்ப்பதற்காக இன்னொரு உயிரின் உடலினை உண்பவனிடம் எப்படி இரக்கம் இருக்கும்? இவ்வாறு இன்னோர் உயிரினை உண்பவன் பிணத்தினை உண்பவனாகின்றான். என்பதனை மனிதர்கள் உணர மறுக்கின்றனர். மனதார ஆசைகளைத் துறக்காமல் உலகை ஏமாற்றி பொய் வேடம் பூண்பவர்களை விட கொடியவர்கள் இவ்வுலகில் யாருமில்லை என்று தான் கூறவேண்டும் தனது மனசாட்சியோடு முரண்படாமல் உண்மை பேசுகிறவன் தானம், தவம் செய்பவர்களை விட மேன்மை உடையவனாவான்.

முதலில் எம்மை நாம் உணர வேண்டும் நமக்குள் எத்தகைய மனிதன் எத்தகைய மனம் ஒளிந்து கொண்டிருக்கிறது என்று தேட வேண்டும். எமது தவறுகளை உணரும் போது எம்மையே நாம் தண்டித்துக் கொள்கின்றோம். நமது உணர்வுகள் நம்மை பாதிக்கின்றன. எமது உணர்வுகள் எமது உடல் நிலையையும் மன நிலையையும் மாற்றி வேறு மனிதனாக நிறுத்தி விடுகிறது. கெட்ட உணர்வுகள் மனதில் தேங்கும் போது மனமும் கெட்டுக் கொண்டே போகிறது. நல்ல சிந்தனைகளும் இனிய செய்திகளும் மனதில் இருக்கும் போது நமது உடல் நிலையும் மன நிலையும் நல்ல நிலைக்கு மாறி விடுகின்றது. நாம்படும் வேதனைகள் அனைத்திற்கும் காரணம் நமது மனதில் ஏற்படும் தீய உணர்வுகளே. ஆணவம், கவலை, கோபம், பயம் போன்ற உணர்வுகள் எமை வாட்டி வதைக்கிறது. ஆகவே நாம் கட்டாயம் நல்ல சிந்தனைகளை நாடி நல்ல உணர்வுகளை நம் மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலம் இன்று தேட வேண்டியது அன்பும், அறமும் அமைந்த அமைதியான வாழ்வினையே. அந்த அமைதியானது ஆன்மிகம் என்ற பெரும் ஆற்றில் தான் ஊற்றெடுக்கிறது. ஆடுவதும்,பாடுவதும்,என்று எமது வாழ்வையே முடித்துக் கொள்ளாமல் அன்புருவான ஆண்டவனை நாம் தேடவேண்டும். இறைவன் சந்நிதானத்தில் சிறந்த தொண்டுகள் செய்ய வேண்டும். அது ஊருக்காகவோ,பெயருக்காகவோ, பதவிக்காகவே, இல்லாமல் உள்ளம் உருகி உண்மையான பக்தியோடு உள்ளன்போடு செய்யப்படுமானால் அன்புக் கடலான அருள் கிடைக்கும். ஒவ்வொரு உயிரிலும் அன்பைத் தேட வேண்டும்.

உன் எண்ணங்களில் நீ துரோகியாக இராதே. நற்சிந்தனையுடன் இரு. மனச்சாட்சியுடன் செயற்படு. இறுதியில் நீ வெற்றி காண்பாய். "உண்மையாகவும் எளிய மனதுடனும் பிரார்த்தனை செய்தால் உன் பிரார்த்தனை கேட்கப்படும்" பிரார்த்தனை செய்வோம்.

**செல்வி. க. மதனப்பிரியா,**
கலை பீடம்
1ம் வருடம் (2021).
கிழக்குப் பல்கலைக்கழகம்,

# மனிதத்துவத்துடன் வாழ்க

சாதிக்கப் பிறந்தவனுக்கு சாதி எதற்கு
மனிதன் எனின் மதச் சண்டைகள் எதற்கு
சாதி மதப் பிரிவுகள் சாக்கடைக்குள் தள்ளும்
மனிதனாய் வாழ பேதங்கள் வேண்டாம்

உன் மனதினை தெரிவு செய்யும் உரிமை
உனக்கு உண்டு உலகில்
அடுத்தவர் மதத்தை கேலி கூறிட
அனுமதியில்லை எவர்க்கும் இங்கு

மன்னிப்பு என்பது மனிதனின் பண்பு
மனதினில் கொள்ளாதே வஞ்சகம் என்றும்
மன்னிப்பதை விட மறப்பதே சிறப்பு
மனிதனாய் நடக்க வஞ்சகம் வேண்டாம்

பொறுமை என்பது போதனையில் பெரிது
பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது
அனுபவத்திலான ஆன்றோர் பழமொழி
பொறுமை கொள் செயலில் நன்மை பெற

ஒற்றுமையே பலம் என்றுணர்ந்து மனிதா
வையகத்தில் நீ வாழ் அறிவுள்ளவனாக
பிறப்பும் இறப்பும் நிலையற்ற உலகில்
உன் செயல்கள் மட்டும் சரித்திரம் கூறும்

**செல்வி. நிந்துஜா நவரத்தினம்,**
கலை பீடம்.
1ம் வருடம் (2021).
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் எமது வாழ்க்கை முறையும்

இயற்கையை இறைவனாகப் பாவித்து இயற்கையோடு மனிதனை வாழ வைத்த சமயம் இந்து சமயம் ஆகும். மனிதன் ஒவ்வொருவனும் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நெறிமுறைகளை வகுத்து அதன்படி இறைவனே மனிதனாகத் தோன்றி மக்கள் நன்றாக வாழ்வதற்கு வழிகாட்டிய சமயம் இந்து சமயமே. பிறப்பிலிருந்து இறப்புவரை ஒருவன் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்பதையும், அவன் செய்யும் நல்லது கெட்டதற்கு என்ன பலன் என்பதனையும் எடுத்துக் கூறுவதும் இச்சமயமே ஆகும்.

இந்து மதம் பழமையான ஒழுங்கு அமைக்கப்பட்ட மதங்களில் ஒன்றாகும். 330 மில்லியன் கடவுள்களை கொண்டுள்ளதாக கூறப்படும் இந்து மதம் பலதெய்வ நம்பிக்கை உள்ளதாக பெரும்பாலும் புரிந்து கொள்ளப்பட்டாலும், அதற்கு ஒரு "கடவுள்" உன்னதமான பிரம்மா உள்ளதாக கூறுகிறார்கள். பிரம்மா என்பது பிரபஞ்சம் முழுவதிலும் உள்ள யதார்த்தம் மற்றும் இருப்பு ஆகியவற்றின் ஒவ்வொரு பகுதியிலும் வசிப்பதாக நம்பப்படுகிறது. பிரம்மா ஆள்தன்மையற்றவர். மற்றும் அறியப்படாதவர். மற்றும் பெரும்பாலும் மூன்று தனித்தனி வடிவங்களில் இருப்பதாக நம்பப்படுகிறது. பிரம்மா படைப்பாளர், விஷ்ணு பாதுகாப்பவர் மற்றும் சிவன் அழிப்பவர். பிரம்மாவின் இந்த "அம்சங்கள்" ஒவ்வொன்றின் பல அவதாரங்கள் மூலமாகவும் அறியப்படுகின்றன.

இச் சமயத்தினுடைய வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். இந்துசமயத்தின் வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை எனப் பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவற்றுடன் சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் என்பனவும் நமது சமய வாழ்க்கையில் பெரிதும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை அனைத்தும் நாம் மனிதத்தன்மை பெற்று மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உதவுகின்றன. ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் என இந்து சமயம் வலியுறுத்துகிறது.

பொதுவாக சமயத்தை எடுத்துக் கொண்டால் இறைவனை அடைவதற்கு பல வழிமுறைகளைக் கூறி நிற்கின்றது. இறை வழிபாட்டில் இயல்பான வழிபாட்டையும், அதற்கு உதவும் வகையில் எண் வகைக் குணங்களையும் கூறி நிற்கின்றது. அவையாவன, எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும், பொறுமை மற்றும் எதையும் சகிக்கும் தன்மை வேண்டும், மற்றவரை எண்ணிப் பொறாமைப்படக்கூடாது, செய்யும் செயலில் தூய்மை வேண்டும், முயற்சியின் காரணமாகவும் விருப்பு காரணமாகவும் உருவாகக் கூடிய வலிமை மிகுந்த உழைப்பு வேண்டும்; எப்போதும் சந்தோசமாக இருக்க வேண்டும், நல் நடத்தை வேண்டும்; மோகங்கள் எல்லாம் வலுவற்றவை, நிலையற்றவை என்பதை உணர வேண்டும்.

இத்தகைய எண் குணங்கள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற முடியும். இவை இறைவனை எளிதில் காண உதவும். அத்தோடு இறைவழிபாடு, சமய அனுட்டானம், தியானம், இறைதொண்டுகள், சமய நூல்களைக் கற்றல், மற்றும் பெரியோரைக் கனம் பண்ணுதல் என்பவற்றில் ஈடுபாடு செலுத்துவதன் மூலம் எம்மனதை தேவையில்லா விடயங்களில் செல்ல விடாது தடுக்கலாம். எந்த ஒரு செயலை செய்யத் தொடங்கும் முன்னும், செய்யும் போதும் இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கின்றான் என்ற சிந்தனை எமக்கு இருக்க வேண்டும். அப்போது தான் நாம் தீய செயல்களைச் செய்ய மாட்டோம். எமது மனமும், செய்யும் செயல்களும் நல்லவையாக இருக்கும். தீய செயல்களைச் செய்யும்போது துன்பங்களே எம்மை நாடி வரும். அதனால் நாம் நற்செயல்களிலேயே ஈடுபடல் வேண்டுமென்று இந்து சமயம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடைய வாழ்க்கை நடைமுறைகள் ஒவ்வொன்றும் இந்து மதத்தினுடைய இறைவழிபாட்டில் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். இந்து சமய வழிபாட்டிலும் சிவனுக்கும் சக்திக்கும் இடையே சண்டைகள் ஏற்படுகிறது. சிவம் பெரிதா? சக்தி பெரிதா? என்ற கேள்வி எழுகிறது. இறுதியில் சிவமின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவம் இல்லை என்ற தத்துவம் உணர்த்தப்படுகின்றது. ஆண், பெண் இருவரில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? என்ற பேச்சுக்கே இடமில்லை. இருவருமே சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆணும், பெண்ணும் சேர்ந்தது தான் வாழ்க்கை, இந்துமத தெய்வக்கோட்பாட்டில் அர்த்தநாரீஸ்வரரின் தத்துவமே இதுதான். இதைப்போல பற்பல எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம்.

அத்தோடு இறைவனுடைய அருளைப் பெறுவதற்கான வழிகளில் இன்னொன்று தொண்டுகள் செய்தலாகும். இத்தொண்டுகள் சரியை, கிரியை என இருவகைப்படும். இதில் கிரியைத் தொண்டுகளாவன தேவாரம் பாடுதல், வேதம் ஓதுதல், தோத்திரங்கள் சொல்லுதல், திருவிளக்கேற்றுதல் என்பனவாகும். மற்றையது எமது சரீரத்தினால் (உடம்பினால்) செய்யும் தொண்டுகளான ஆலயத்தைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், பூமாலை கட்டுதல், மற்றும் பிரகாரங்களைச் சுத்தம் செய்தல் போன்ற சரியைத் தொண்டுகளாகும்.

**"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்"** என்று நாவலர் பெருமான் கூறியுள்ளார். இத் தொண்டுகளைச் செய்வதன் மூலம் இறைவனது திருவருளைப் பெறுவது மட்டுமல்லாமல் எமது சுயநல மனப்பான்மையை நீக்கி பொதுநலத் தொண்டுகளில் நம்மை ஈடுபாடு கொள்ள வழிவகுக்கின்றது. பிறருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழவும் சரியைத் தொண்டுகள் வழிகாட்டுகின்றன. இந்துக் கோயில்களிலே நடைபெறும்திருவிழாக்களினால்மனிதசமூகமானது புனிதமடைகின்றது. இத்தகைய திருவிழாக்கள் சமூகத்தினை ஒருங்கிணைப்பதற்காகவே நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டது. முக்கிய திருவிழாவான தேர்த் திருவிழாவின் போது தேரினுடைய வடத்தினை ஏழை, பணக்காரர் என்ற பேதமின்றியும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றியும் இழுப்பார்கள். இறைவன் முன்பு நாம் அனைவரும் சமம் என்ற அசைக்க முடியாத வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது.

இந்து சமயப் பாரம்பரியங்களைப் பேணி, அதனை எமது வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு நாம் கொண்டாடும் விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் பற்றிய அடிப்படை அறிவை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் தைப்பொங்கல். புதுவருடப்பிறப்பு, தீபாவளி முதலியவை நாம் கொண்டாடும் பண்டிகைகளில் முக்கியமானவை ஆகும். இவற்றை விட மகாசிவராத்திரி, அமாவாசை, பூரணை, விநாயகசதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி மற்றும் கௌரிக்காப்பு என வரும் விரதங்களும் எமது வாழ்க்கை முறையோடு ஒன்றுபட்டு விளங்குகின்றன. இவற்றிலே நவராத்திரி விரதத்தை எடுத்தால் மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கா என்ற மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுவதே இவ்விரதத்தின் நோக்கமாகும். இவ் விரதமானது பெரியவர்களுடன், கல்வி கற்கும் பிள்ளைகளாலும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு விழாக்கள், பண்டிகைகள், விரதங்களைக் கொண்டாடும் போதும், அனுட்டிக்கும் போதும் வீடுகளையும், சுற்றுப்புறச் சூழலையும் தூய்மைப் படுத்துகின்றோம். அத்தோடு நாமும் நீராடி புதிய ஆடைகளையும் அணிகின்றோம். புதிய பாத்திரங்களில் சமைத்து இறைவனுக்குப் படைத்து, நமது உறவினர், நண்பர்களுக்கும் கொடுக்கின்றோம். இதனால் இந்து சமயப் பண்டிகைகளும் விழாக்கள் விரதங்களும் மக்களின் அகத் தூய்மையையும், புறத்தூய்மையையும் வளர்ப்பதோடு, மற்றவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் மனப்பான்மையையும், ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனையையும் வளர்க்கின்றன. அதனால் இவற்றை முறைப்படி அனுட்டிப்பது முக்கியமான விடயமாகும்.

இந்துமக்களின்முக்கியகுணாம்சங்களில் ஒன்று மற்றைய உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதாகும்.

**"அன்பின் வழியது உயிர்நிலை அ.்.திலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு"**

என்று திருவள்ளுவப் பெருந்தகையார் எடுத்தியம்பியுள்ளார். அதாவது பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துபவர்களது உடம்பில் உயிர் நிலைத்து வாழும். அன்பில்லாதவர்களது உடம்பானது வெறும் எலும்பைத் தோலினால் போர்த்த வெற்றுடம்பு என்றும் கூறியுள்ளார். இதனை எடுத்துக்காட்டும் விதமாக இந்து சமயத்தில் பல கதைகளும், இறைவனது திருவிளையாடல்களும் உள்ளன. அவற்றுள் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக சிபிச்சக்கரவர்த்தியின் கதையைக் கூறலாம். இவற்றோடு நின்று விடாது நம்நாட்டில் உள்ள பல திருக்கோயில்களுக்கும் சென்று அவற்றை மெய்யன்போடு தரிசிப்பதால் பல்வேறுபட்ட நன்மைகளை நமது வாழ்க்கையில் பெற முடியும். கலை, கலாச்சாரம், பண்பாடு மற்றும் தெய்வீகம் எனப் பல விடயங்களை எடுத்துக் காட்டும் இடங்களாக இந்துக் கோயில்கள் விளங்குகின்றன. கோயில்களில் காணப்படும் அழகான சிற்பங்கள், ஓவியங்கள் மக்களின் கலை ஆர்வத்தை வளர்ப்பனவாக அமையும். இதன் மூலம் எம் இளைய சமுதாயத்தினர் எமது பண்பாடு, கலாச்சாரம், கலை அம்சங்களை அழிய விடாது பின்பற்றவும், பாதுகாக்கவும் முடியும். இவ்வாறுபலகோயில்களுக்கும்சென்று அங்குள்ள மூல மூர்த்திகளைத் தரிசிப்பதால் எல்லாத் தெய்வங்களினதும் அருள் நமக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இறை நம்பிக்கையை வளர்த்து, மக்களின் மனநிறைவுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கின்றது.

எனவே இந்து சமயத்தையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுவதற்குப் பல விடயங்களைக் கூறிக் கொண்டே போகலாம். இந்துக்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் இந்து சமயத்தோடு இரண்டறக் கலந்திருப்பதை நாம் கண் முன்னே காணக்கூடியதாக உள்ளது. எனவே இந்து சமயம் இன்றி இந்து மக்கள் இல்லை. இந்து மக்கள் இன்றி இந்து சமயம் இல்லை என்னும் அளவிற்கு எமது வாழ்க்கை முறையில் இந்து சமயத்தின் ஒவ்வொரு அம்சங்களும் வியாபித்திருப்பதைக் காண முடிகின்றது.

**செல்வி. வீ. வீதுஜா,**
3 ம் வருடம்,
முகாமைத்துவ பீடம்,
பேராதனைப்பல்கலைக்கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E A/L Results in 2018, 2020



**இடமிருந்து வலம் நிற்போர்.** ( L - R)

**மதனப்பிரியா காந்தரூபன்** - ABC
**ஜான்சிகா ஆனந்தராசா** - A2C
**நிந்துஜா நவரத்தினம்** - 2AB



**இடமிருந்து வலம் நிற்போர்.** ( L - R)

**செல்வநாதன் றஜிதா** - 2AB
**ஜீவராஜா நிவேனிகா** - 2BC
**கருணாகரன் கரிசாளினி** - A2C

## G.C.E A/L Result in 2021. (old syllabus), (New syllabus)



**இடமிருந்து வலம் நிற்போர்.** (L -R)

**தயாளினி கருணாகரன்** - A2B
**சங்கவி இந்திரகுமார்** - 2BC
**டிஷானி ரகுவரன்** - 2AB



**இடமிருந்து வலம் நிற்போர்.** (L - R)

**கௌசிகா தர்மநாயகம்** - BCS
**சோபிகா சசிகரன்** - 3B
**றஞ்சிதமலர் நாகையா** - 2AC
**டிலக்சனா புலேந்திரன்** - A2B
**சாளினி ஞானச்சந்திரன்** - 2AB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Graduates of 2020 & 2021 from Our Home



இடமிருந்து வலம் நிற்போர். (L-R)

செல்வி. ர. விதுரா - Eastern University of Sri Lanka, B.A
செல்வி. பா. விதுஷாயினி - University Of Jaffna, B.A(Hons) Special in Philosophy
செல்வி. வி. பிரசா - University of Jaffna, B.A(Hons) Special in History
செல்வி. பு. செல்வதியம்மா - University of Jaffna, B.A(Hons) Special in Tamil 1st class

படத்தில் இல்லாதோர்:
செல்வி. க. கஜனிகா,
செல்வி. த. தேவதர்ஷினி

# Undergraduates of 2021 from Our Home



இடமிருந்து வலம் நிற்போர். (L-R)

| | |
|---|---|
| செல்வி. வி. விதுஜா | University of Peradeniya, B.Com special,3rd Year |
| செல்வி. கா. மதனப்பிரியா | Eastern University of Sri Lanka. Arts, 1st Year |
| செல்வி. த. தர்மினி | University of Jaffna, Financial Manegement, 3rd Year |
| செல்வி. இ. ஐஸ்வர்யா | Sabragamuwa University of Sri Lanka, Social Sc. & Lan., 2rd Year |
| செல்வி. து. சுபாஷினி | Sabragamuwa University of Sri Lanka, Social Sc. & Lan., 3rd Year |
| செல்வி. ஜீவராசா நிருத்திகா | Eastern University of Sri Lanka. Arts, 3rd Year |
| செல்வி. ஆ. ஜான்சிகா | Eastern University of Sri Lanka. Arts, 1st Year |
| செல்வி. தேனிலா | Eastern University of Sri Lanka. Arts, 2nd Year |
| செல்வி. ந. நிந்துஜா | University of Jaffna. Arts, 1st Year |
| செல்வி. யோ. வினுயா | Eastern University of Sri Lanka. Arts, 3rd Year |
| செல்வி. இ. சர்மிளா | Eastern University of Sri Lanka. Arts, 4th Year |
| செல்வி. செ. நிஷாந்தினி | Advance Tecchnical Institude, Jaffna HNDA, 3rd Year) |
| படத்தில் இல்லாதோர்: | |
| செல்வி. கி. ருபிகா | Colombo Horizon Campus, 4th Year |
| செல்வி. ஸ்ரீபிரியா | University of Jaffna. Arts, 2nd Year |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போனது மனிதம்

ஆள பிறந்த உலகமதில்
தினமும் அடித்து சாகும் மனித இனம்
மனிதம் எங்கே போனது மானிடா!
மறந்ததோ இச்சொல்லும்
மனதிலே இன்று

பொறுமையின் சிகரமாய்
பூமித்தாயும் வீற்றிருக்க
பொறுமை கொண்டவர் எவருமில்லை
உறக்கம் கொண்டதோ மனித மனம்
சுழல்கின்ற பூமியும் சுயநலமானதே!

ஆத்திரங்கள் கொண்டு நிகழ்ந்த யுத்தத்தால்
பிண மலைகள் பல இங்கு
நம்பிக்கை மறந்த மானிடராய்
இன்ப வாழ்வை தொலைத்துவிட்டு
பித்தனாய் அலைகின்றான் இன்று

எங்கே போகுது மனித வாழ்வு
எங்கு காணினும் சுயநல மனிதர்கள்
பொறுமை இழந்த உலகம் இதிலே
உணர்ந்திடுவீர் பொறுமையை
மாற்றிடுவீர் உலகத்தை தன்னம்பிக்கையுடனே.

**செல்வி. இராஜராஜேஸ்வரன் ஐஸ்வர்யா**
2ம் வருடம்
சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

# தொழில் முயற்சியாண்மை மூலம் பொருளாதாரத்தை வெல்லுங்கள்

**"ஒத்த பிறப்பில் உதித்தும் பலரிழந்தும்
செத்த சவமாய்த் திரிகின்றார் தத்தம்
இயல்பின் அளவே எவர்க்கும் உலகில்
உயர்வும் இழிவும் உணர்"**

என்ற கவிராஜ பண்டிதர் அவர்களினுடைய நேரிசை வெண்பா பாடலுக்கமைய மனித மரபில் ஒரு நிகராய் உருவம் பிறந்திருந்தும் ஒத்த உரிமைகளை உணராமல் பலர் செத்தசவங்களாகவே திரிகின்றார்கள். அவரவருடைய செயல் இயல்புகளின் அளவே உயர்வும் தாழ்வும் உள்ளன. உடல் உறுப்புக்களாலும் நடை உடை பாவனைகளாலும் பேச்சு வழக்காலும் குண வகைகளாலும் வேறுபட்டு பிரிந்து திரிகின்றனர் என்பதே அவருடைய கருத்தாகும். அந்த வகையிலே இன்றைய நவீன காலகட்டத்திலே பொருளாதாரம் என்பது சமூகத்தில் ஒரு மனிதனுடைய அந்தஸ்தை குறித்து நிற்பதை நாம் காணமுடிகின்றது. பிறக்கும் போது மனிதர்கள் அனைவருமே சமமாக எதுவும் இன்றியே பிறக்கின்றார்கள். பின் தத்தம் பொருளாதாரத்தை தாமே ஈட்டுகின்றனர். அவ்வாறு பொருளீட்டும் வழியினையே நாம் பொருளாதாரத்தை ஈட்டுதல் என்கின்றோம்.

முயற்சியாண்மை என்பது வியாபார மொன்றை உருவாக்கி இலாபமீட்டும் விதத்தில் அதனை முகாமை செய்வதற்கான ஆற்றலையும் விருப்பத்தினையும் குறிக்கின்ற ஒரு கூட்டு எண்ணக்கருவாகும். இதனையே நாம் தொழில்முனைவு எனவும் கருதுகின்றோம்.

அந்த வகையில் அபாயத்தை எதிர் பார்த்து பொருட்கள், சேவைகள் உற்பத்தி தொடர்பில் தீர்மானம் எடுப்பதும் உற்பத்திக் கருமங்களை ஒழுங்கமைப்பதும் அவற்றைச் செயற்படுத்துவதையும் முயற்சியாண்மை என நாம் வரையறுக்கின்றோம். முயற்சியாண்மை பற்றி இவ்வாறாக பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களினைக் கூறியிருந்தாலும் காலம், செல்வம், திறமை போன்றவற்றினை ஈடுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியான உலகில் புதியன படைத்து நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெறுமதியினை சேர்த்தாலும், நிலவுகின்ற பொருளாதார முறையினுள் மாற்றங்களினை கொண்டு வருவதற்கும் பங்களிப்பு செய்தல் என்பதே இதன் பொருளாகும்.

முயற்சியாளர்களாக நாம் கருதுபவர்கள் மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற முகவர்களாவர் இவர்கள் பொருளாதார, சமூக அல்லது அரசியல் பெறுமானங்களை உருவாக்கி அவற்றினை உருவாக்குவதற்காக புதிய ·அமைப்பொன்றை உருவாக்கும் நோக்கத்திற்காக புதிய எண்ணக்கருக்களை அல்லது வாய்ப்புக்களை உருவாக்குபவராக கண்டுபிடிப்பவராக விளங்குகிறார்கள். அந்த வகையில் முயற்சியாண்மை அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக நாம் தனிநபர் காரணிகள், சமூகக் காரணிகள், சூழல் காரணிகள் என்பவற்றினைக் கருதுகின்றோம். சமூகத்தில் தனக்கென ஓர் இடத்தினைத்தக்க வைக்கவோ அல்லது தமதுநாளாந்த தேவைகளை நிறைவேற்றவோ முயற்சியாண்மை தொழிலில் அனைவரும் ஈடுபடுகின்றனர். இது ஒரு தனிநபரால் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆரம்பிக்கப்படுகின்றது . அந்த வகையில் ஒரு முயற்சியாண்மைக் தொழிலில் ஈடுபடத் தொடங்கும் ஒருவர் தனது சூழலில் சமூகத்திற்கேற்ப பொருளாதாரத்தை ஈட்டக்கூடியவாறு தனது தொழிலினை ஆரம்பித்தல் வேண்டும்.

உதாரணமாக நாம் முயற்சியாண்மைக் தொழில்களில் இறங்கும் போது நாம் இருக்கின்ற சூழலில் உள்ளவர்களினதும் சமூகத்தவர்களினதும் தேவைகளை அறிந்து அச் சமூகத்தில் அத் தொழிலை நாம் ஆரம்பிப்பதன் ஊடாக பொருளாதாரத்தினை ஈட்ட முடியும் அத்தொழில் முயற்சியாண்மைக்கு நாம் எமது முதலீட்டையும் நேரத்தையும் செலவிடுவதன் ஊடாக அத் தொழிலிலே நாம் சிறந்த கொருளாதாரத்தினைஈட்ட முடிகின்றது. இவ்வாறாக நாம் முயற்சியாண்மையை சிறந்ததாகவே சிறிதாகவோ பெரிதாகவோ ஆரம்பிக்கின்ற போது புதிது புனைதல், நட்டப் பொறுப்பினை முகாமை செய்தல், ஆபத்துகளை எதிர் கொள்ளல் , தன்னம்பிக்கையினை வளர்த்தல், திடசங்கற்பம் பேணல், முன்னுணர்வு, கடின உழைப்பு, நெகிழ்வுத்தன்மை, ஊக்கமாகச் செயற்படல் பெறுபேற்றை இலக்காகக் கொண்டிருத்தல், ஆகிய பண்புகளையும் கொண்டு நமது முயற்சியாண்மைத் தொழில் ஈடுபடுவதன் ஊடாக அத்தொழிலில் நாம் வெற்றியீட்ட முடியும்.

இன்று எமது நாட்டில் தொழில் முயற்சியாளர்களும் முயற்சியாண்மையும் என நோக்கும் போது பல முதலாளிகள் தொழிலாளிகளை பால், வயது வேறுபாடுகள் இன்றி காணமுடிகின்றதாகும். அந்த வகையிலே இன்று ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் ஏதோ ஒரு தேவைக்காக தமது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பல முயற்சியாண்மைத் தொழில்களில் ஈடுபடுவதனை நாம் அவதானிக்க முடிகின்றது. எமது அரசாங்கத்தினை நோக்குகின்ற போது வாழ்வாதாரம் இழந்தவர்கள், மற்றும் விதவைகள், வறுமையில் உள்ளவர்கள் போன்றவர்களை சுய முயற்சியாண்மைத் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு உதவிகள் வழங்குவதனையும், கடன் திட்டங்களை வழங்குதல், தொழில் வழிகாட்டுதல் வழங்குதல் போன்றவற்றினையும் மேற்கொள்கின்றனர். இது போல இன்று பல சங்கங்கள், அமைப்புக்கள் என்பனவும் மக்களுக்கு முயற்சியாண்மை ஊடாக பொருளாதாரத்தினை ஈட்டுவதற்கு பல வழிகளில் உதவி வருகின்றது.

இவ்வாறாக ஒவ்வொரு தனிநபரும் முயற்சியாண்மைத் தொழில்களில் ஈடுபடுவதனால் சமூக பொருளாதார ரீதியில் நன்மைகள் பலவற்றை பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் சமூக அந்தஸ்து உருவாகுதல், தனிப்பட்டரீதியில் இலாபம் கிடைத்தல், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கல், வருமானத்திற்கான சந்தர்ப்பம் தோன்றுதல், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல், புதிய சந்தைகள் அபிவிருத்தியடைதல், நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றமடைதல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

முயற்சியாண்மையின்ஊடாகஒருதனிநபர் மட்டுமன்றி ஒரு நாடும் நன்மையடைகின்றதாகும். ஒரு நாட்டில் உள்ளவர்கள் அல்லது தனிநபர் தனக்கென சுயதொழில் முயற்சியாண்மை இல்லாத போது அவர்கள் மட்டுமன்றி அவர்களது நாடும்புதிய வணிக தன்மை வாய்ப்புக்கள்தோற்றம் பெறாமை, வரிப்பயன்படுகள் குறைவடைதல் வணிகவிருத்தி குறைவடைதல், பொருளாதார வீழ்ச்சி ஏற்படுதல், வருமான சமமின்மை, வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுதல் போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியதாகக் காணப்படுகின்றது.

**" பிறக்கும் போது ஏழையாய் பிறப்பது உன் தவறல்ல ஆனால் இறக்கும் போது ஏழையாக சாவது தான் உன் தவறு என்கின்றார்"** பில்கேட்ஸ் அவர்கள் அதற்கேற்ப நாம் அனைவரும் நமக்கென ஒரு தொழில் முயற்சியாண்மை ஏற்படுத்துவதன் மூலமாக பொருளாதார ரீதியில் வெற்றியடைந்து சமூகத்தில் எமக்கென ஒரு அந்தஸ்தினைத் தக்க வைப்பதன் ஊடாக நமக்கு மட்டுமன்றி நமது நாட்டினை பொருளாதார ரீதியில் வளப்படுத்த முடியுமாகும். எனவே கிடைக்கிற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தொழில் முயற்சியாண்மைகளில் ஈடுபட்டு பொருளாதாரத்தினை பெருக்குவோம்.

**செல்வி. துரைசிங்கம் சுபாஷினி**
3ம் வருடம்
சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

# யதார்த்தமான சில உண்மைகள் (புதுக் கவிதை)

ஆலயமணி ஓசையின்
சத்தங்களுடன் - எம்
காலைப்பொழுது
விடிந்துவிட்டது,
எம் வாழ்வும்
பல நாட்களில் சில
கனவுகளின் சாயலில்
இன்று படித்த
மாணிடராய்!
இவ்வுலகமதில்

பல ஆசைகள்
பல கனவுகள்
நிறைவேறின - எம்
இல்லமதில் ஆதரவாய்
எமக்கும் ஒரு சந்தர்ப்பம்
அமைந்தது.

இறைவனின் படைப்பில்
சில குறைகளாய்
எம் பெற்றோரை
விலக வேண்டிய
நிர்ப்பந்தம் - இருந்தாலும்
முன்னேறி விட்டோம்
சமூகத்தில்!
பல அடிப்படை வாதிகளை
எதிர்த்துக் கொண்டு
பெண்களாய்! நாமும் இங்கு

எம்மாலும் முடியும்
என நம்பிக்கையுடன்
கை தந்து உயர்த்தி விட்டீர்கள்
பலர் வியக்கும்
வகையில்..

மானிடர்களில் மிகச்சிறந்த
படைப்பாய் பெண்
என்ற பெருமையுடன்
நன்றி கூறுகின்றேன்
எம் இல்லத்துக்கு!

**செல்வி. நிருத்திகா ஜீவராசா,**
3ம் வருடம்
கிழக்கு பல்கலைக்கழகம் (2016).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர மதத்திற்கு வழிகோலும் மனித நேய குணங்கள்

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்த பின்
அன்பேயுசிவமாய் அமர்ந்து இருந்தாரே"

ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கு மனிதாபிமான குணங்களே அடிப்படையாக உள்ளது. ஆம் இந்த பிரபஞ்சத்தின் எல்லா உயிர்களிலும் அன்பு எனும் வடிவத்தில் இறைவன் இருக்கின்றான். மனிதர்கள் பிற மனிதர்கள் பால் செலுத்தும் அன்பில் தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உலகத்தில் தோன்றிய அனைத்து மதங்களும் கூட அன்பை பெரிதும் போற்றியே உரைக்கின்றன. அன்பின் மூலம் அன்பு வளரும். வெறுப்பு ஒரு குறுகிய கூட்டுக்குள் சதிராடுகின்றது. அன்பு வானைப்போல அறிவை வளர்க்க செய்கின்றது. கடவுளை அறிவதற்கான வழியில் மனித ஆன்மா கடந்து செல்லும் வெவ்வேறு படிகளாக ஒவ்வொரு மதமும் உள்ளன என்றும் எந்தப் படியும் அபாயகரமானதோ, தீமையானதோ அல்ல என்றும் வளர்வதற்கு மறுத்து முன்னேற்றாமல் கட்டுப்பெட்டியாக நின்றுவிடும் போதுதான் ஒரு மதம் அபாயகரமானதாகின்றது என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.

கடவுள் என்பவர் ஒருவரே. ஆனால் ஒவ்வொருவரது வழிபாட்டு முறைதான் வேறுபடுகின்றது. இதுவே மதத் தோற்றத்திற்கு காரணமாகின்றது. இந்த வழிபாட்டு முறையானது மக்களுடைய கலாசாரம், பண்பாடு, அவர்கள் வாழும் புவிப்பரப்பியல், சீதோட்சண நிலைகள் என்பன வாழ்வியலுக்கு அமைவாக மாறுபடுகின்றது. ஒரு மாடியின் உச்சிக்கு போக ஏணி, முங்கில், படி, கயிறு இவற்றில் ஏதேனும் ஒன்றின் உதவியை கொண்டு ஏறலாம். அது போல இறைவனை அடைவதற்கு ஒவ்வொரு மதமும் வித்தியாசமான மார்க்கங்களை காட்டுகின்றது. ஓர் ஏரியின் நீரைப்போல இறைவனும், அதில் இறங்கும் படித்துறைகள் போல தான் மதங்களும் காணப்படுகின்றன. மனிதன் கடவுளை அடைவதற்கான வழியினை யோகிகள், ஞானிகள், மகான்கள் வாழ்ந்து காட்டினார்கள். இவர்களை பின்பற்றி வாழ்ந்த மக்கள் காலம் செல்ல செல்ல அவர்கள் கூறியதை அனைவரும் ஒன்றே என்பதை மறந்து மற்றவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக்காட்டப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதனாலே தான் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றிருந்த மனித குலம் பல பிரிவாக பிரிந்துள்ளது. இதனால் பாரியன விலான பிரச்சினைகள் உலகலாவிய ரீதியில் ஏற்படுகின்றது.

தற்காலத்தின் உலகளாவிய பிரச்சனைகளுக்கான தீர்வு அனைத்து மனித இனத்திற்கும் பொதுவான காரணம் மத, அரசியல் மற்றும் பிற உலகப் பார்வை வேறுபாடுகளாக இருந்தபோதிலும், அதனை தீர்க்க வெவ்வேறு நாடுகள் ஒன்றாகச் செயல்பட, மக்கள் அடிப்படை மதிப்பு நோக்குநிலைகளை நம்பியிருக்க வேண்டும். பல நவீன தத்துவவாதிகள் மனிதநேயத்தின் மதிப்புகளாக இருக்கலாம் என்று நம்புகிறார்கள். உதாரணமாக, கிறிஸ்தவத்தில் இஸ்லாத்தில் சடங்குகள் வேறுபடுகிறது. மேலும் சட்டத்தின் ஒரே கொள்கையாக நடத்தை சில தார்மீக விதிகளுக்கு முக்கியத்துவம் மாற்றப்படுகிறது. ஆயினும்கூட, இரண்டு மதங்களும் ஏழைகளுக்கு நீதியையும் உதவியையும் போதிக்கின்றன. கடவுள் முன் அனைவரும் சமத்துவம் என்ற கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு நபர் அவருக்குக் கீழ்ப்படிகின்றார். புத்தமதத்தில் தன்னை மாற்றிக் கொள்பவர், அவரே புத்தராக முடியும், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாத்தில் கடவுளை நெருங்கி தனது செயல்களுக்கு வெகுமதியைப் பெறுவார்.

நவீன உலகில் மனிதநேயம், அகிம்சை நெறிமுறைகள் மற்றும் ஒரு புதிய வகை நாகரிகத்தை உருவாக்கும் பிரச்சனைகள் மனிதனும் அவனது மகிழ்ச்சியும் பூமியில் மிக உயர்ந்த மதிப்பு, ஆனால் விலங்கு உயிரின் மதிப்பு மற்றும் பூமியின் உயிருள்ள ஓட்டின் ஒருமைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் மறுக்க முடியாதது. மனிதநேயம் என்பது ஒரு கூட்டு உலகக் கண்ணோட்டம் மற்றும் கலாசார மற்றும் வரலாற்று பாரம்பரியம் ஆகும்.

இது பண்டைய கிரேக்க நாகரிகத்தில் தோன்றியது, அடுத்த நூற்றாண்டுகளில் வளர்ந்தது. மற்றும் நவீன கலாசாரத்தில் அதன் உலகளாவிய மனித அடிப்படையில் பாதுகாக்கப்படுகிறது. உலக மதங்களின் வேர் மனித விழுமியங்களாகும். மனித குணங்கள் ஆளுமையின் நிலையான மன அமைப்பினுடைய தொகுப்பாகும். ஒரு நபரை ஒரு நபராக விவரிப்பதற்கும் ஒருவர் தன்னுடைய செயல்களையும் செயல்களின் போது மற்றவர்களிடமும் வெளிப்படுத்துவதே குணமாகும். அனைத்து மனித குணங்களும் அடிப்படை தேவைகளிலிருந்து பெறப்படுகின்றது என்பதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய மனித குணங்களே ஒரு மதத்தின் நிலைபேற்றுக்கு உந்துசக்தியாகும் என்றால் அது மிகையாகாது. ஆம்! மனிதனது சிறந்த குணங்களனான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள் ஒரு மனிதன் ஒரு மதத்தை பின்பற்றுவதற்கான அல்லது அம்மதத்தில் நம்பிக்கை கொள்வதற்கான சுதந்திரத்திற்கு வழிகோலுகின்றது.

**'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்கு பொன்றும் துணையும் புகழ்"**

ஆம்! மனிதனது சிறந்த குணங்களில் ஒன்றாக கருதப்படும் பொறுமையானது தனக்கு துன்பம் ஏற்படும் போது உணர்ச்சி வசப்படாமலும், கோபம் கொள்ளாமலும் இருக்கும் மனநிலை ஆகும். மற்றவர் தம்மை இகழும் போதும், நீண்ட தாமதங்கள் ஏற்படும் போதும், பிரச்சனைகள் வரும் போதும், சில அசாதரண சூழ்நிலைகளிலும் அமைதியாக இருக்கும் குணமே பொறுமை ஆகும். கோபம் மனிதன் பெற்றுள்ள பண்புகளில் ஒன்றாகும். அக் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் என்னும் நோய்க்கான மருந்தே பொறுமையாகும். பணம், படிப்பு பதவி என அனைத்தும் இருந்தாலும் பொறுமை இல்லாவிட்டால் பலன் இல்லை. மிச்சம் மீதியிருக்கும் நிம்மதியும், அமைதியும் போய்விடும். இன்றைய தனிமனித உறவு நிலைகள், குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை போன்றவற்றில் ஏற்படும் பல சிக்கல்கள், வன்முறைகள், கலவரங்கள், உயிர்ப்பலிகள் போன்றவற்றிற்கான மூல காரணம் பழிவாங்கும் உணர்ச்சியாகும். தனக்கு தீமை செய்த ஒருவனை, தனக்கு அவமரியாதை ஏற்படக் காரணமான ஒரு மனிதனை, பாதிக்கப்பட்டவன் எவ்வாறேனும் பழிவாங்கத் துடிக்கிறான்.

இதன் விளைவு தான் சமூக தீமைகள் மற்றும் வன்முறைகளின் பெருக்கத்திற்கு காரணமாகும். இவற்றை தவிர்க்கவும் வாழ்வில் இன்பமும், அமைதியும் மலரவும் என்ன செய்ய வேண்டும்? தவறிழைத்தவரை மன்னிக்கும் மன நிலையை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ளவதே சமூக அமைதிக்கான மருந்தொன்றாகும். வாழ்வியல் அறங்களை சிறப்பாக எடுத்துரைத்த வள்ளுவர் மன்னிப்பின் மாண்பினைப் பல குறட்பாக்களில் விளக்குகின்றார். அதாவது 'பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்" என்று கூறப்படுகின்றது. அதாவது பொறுமை, மன்னித்தல் போன்ற பண்புகள் பண்புகளிலெல்லாம் மேம்பட்ட பண்பாகிறது என்றும் 'ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன் பொறுக்கும் பொறையே பொறை" என்று நாலடியாரில் கூறப்படுகின்றது. என்ற குறட்பாவின் மூலம் தீமை செய்த ஒருவனை தண்டிப்பதால் மனத்தில் ஒரு வகை நிறைவு, மகிழ்ச்சி ஏற்படும் என்பது உண்மைதான், ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே நாளில் முடிந்து விடும். தண்டிக்கப்பட்டவன் மீண்டும் ஏதாவது தீமை செய்து விடுவானோ என்ற அச்சம் அதன் பின்னர் மனத்தை உறுத்திக்கொண்டே இருக்கும். அதற்கு மாறாக, தீமை செய்தவனை மன்னித்து விட்டால் வாழ்நாள் முழுதும் மகிழ்ச்சியும் புகழும், நிலைத்திருக்கும். ஒருவரை மன்னிப்பது இயலாமையின் குறியீடு அல்ல, அது வீரம், தகுதியின் குறியீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் சீராக தடையின்றி இயங்குவதற்கு தேவையான அறக்கருத்துக்களைக் கூறும் ஒரு கலித்தொகைப் பாடலில் வலிமையுடையவரிடம் காணப்பட்டால், அதை அடுத்து நம்பிக்கையானது மனித மனங்களில் ஏற்படுகின்றது. அது சரியானதாகவோ, தவறானதாகவோ இருக்கலாம். உண்மையானதாகவோ, உண்மையற்றதாகவோ கூட இருக்கலாம். மனிதாபிமானம் கொண்ட மனிதனின் தேவைகளை மனிதர்களின் தேவைகளை, மனிதர்களின் ஆசைகள், மனித அனுபவங்கள் ஆகியவற்றின் முக்கியத்து வத்தை அடிப்படையாகக் கொண்ட மனிதநேயத்தை பிற மதங்களுடன் பகிர்ந்து கொள்கிறது. தனி நபர் அல்லது சமூகங்கள் எந்த ஒரு சமயம் தொடர்பாகவும், பொதுவிலோ தனிப்பட்ட முறையிலோ, நம்பிக்கைகளை வைத்திருப்பதற்கும், வழிபடுவதற்கும், சடங்குகளை நடத்துவதற்குமான சுதந்திரத்தை பெற்றுள்ளது.

அத்துடன் எந்த ஒரு சமயம் அல்லது இறைவன் தொடர்பான நம்பிக்கையை வைத்திருக்காமல் இருப்பதற்குமான சுதந்திரமும் உள்ளது. பல நாடுகளும், மக்களும் சமயச் சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமை என்று கருதுகின்றனர். அரச மதம் ஒன்றைக் கொண்ட நாடுகளில் சமயச் சுதந்திரம் என்பது, அரசு பிற சமயங்களையும் பின்பற்ற அனுமதிக்கும், பிற சமயங்களைக் கைக்கொள்வதற்காக அவர்கள் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்றே பொருள்படும். மதங்கள் அனைத்தும் சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. அவை வழிமுறைகளில் வேறுபட்டிருந்தாலும் சொல்ல விரும்பும் கருத்து ஒன்றே. வேதங்கள் அனைத்தும் மனிதனுக்கு அமைதியைப் பெறும் வழிகள், அமைதிக்கான பரப்புரை, அமைதியாக வாழ்வதின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றியே உணர்த்தி வருகின்றது. எனவே மனிதர்களாகிய எமக்கு கிடைத்த மத சுதந்திரத்தை எமது மனித நேய குணத்தின் மூலம் அனைத்து மதங்களும் சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றதென்பதை உணர்ந்து மனிதனும் தனது பாதையில் தனித்துவமானவன், தனக்காக வாழ்வதை விட தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்காக வாழ்வதே வாழ்க்கை, அவர்களுக்கு சேவை செய்வதையே மனிதன் கொள்கையாக கொண்டிருக்க வேண்டும். மத சுதந்திரத்தின் மூலம் மதங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து மதங்களிற்கும் மதிப்பளிப்போம்.

**செல்வி. செ. றஜிதா,**
தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம். சீதுவ.
Notional Institute of Social Development.
Seeduwa,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

**'அவனியிற் புகுந்தமை ஆட்கொள்ள வல்லாய் ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே'**

என திருப்பள்ளி எழுச்சி பாடி விடிலை வரவேற்கும் சிறப்பு வாய்ந்த மார்கழி மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் தீது அகன்று உலகம் உய்ய திருவருள் பேற்றுடன் உதித்தவர் தான் எங்கள் அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார். அம்மா அவர்களின் ஆற்றலை, அவர் செய்த அறப் பணியை எளிதில் எழுதி முடிக்க இயலாது. தமிழகத்து தமிழ்ப் புலமையாளரும் ஈழத்துப் பேரறிஞர்களும் 'இவருக்கு ஈடாக வேறு எவரும் இல்லை' என்று அன்றே சொல்லும் தகைமையில் தம்மை நிலை நிறுத்தியவர் எம் அன்னை.

தெல்லிமாநகரில்இன்றுஉலகம்போற்றும் திருக்கோயிலாக மிளிர்ந்து கொண்டிருக்கும் துர்க்கையம்பாள் சந்நிதானத்தின் சிறப்பை போற்றுபவர்கள் எம் அன்னை துர்க்கா துரந்தரியின் தூய பணியை வாழ்த்தத் தவறுவதில்லை. கடவுள் வாழும் கோயிலில் கருணைக்கு பஞ்சமில்லை என்பதை உலகளாவிய ரீதியில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் சிறப்பாகவும் பெருமையாகவும் பேசப்படும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் அவதானிக்கலாம்.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பவர்கள் அந்நாட்டு பெண்களே ஆவர். ஒவ்வோர் சமூகத்திலும் உருவாகும் கற்றறிந்தோர்க்கு பின்னால் ஒரு பெண் உந்துசக்தியாக இருப்பதை வரலாறு கூறுகின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றம் சட்டதிட்டங்களினால், சூழல் காரணிகளினால் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெரும் கேடாக அமையும்.

இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் இதனை உணர்ந்து ஆதரவற்ற, பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண் பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும், சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' எனும் ஏற்றமிகு இலட்சிய நோக்குடனும் எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளோடும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் நிறுவப்பட்ட மகளிர் இல்லம் பெரு விருட்சமாக, விழுதுகளோடு 39 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது.

03. 02. 1982 இல் 09 சிறுமிகளுடன் ஆரம்பித்த தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் இற்றைக்கு ஏறக் குறைய 150 பிள்ளைகளுடன் வீறு நடைபோடும் போது இதுவரை சுமார் 550 பிள்ளைகளுக்கு மேல் வாழ்வளித்திருக்கின்றது.

ஆன்மிக வழிகாட்டி துர்க்கா துரந்தரி அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சரணாலயம் இன்று எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகின்றது. இதற்கு காரணம் எமது அம்மா அவர்களின் தியாக சிந்தனையும் தவப்பலனும் என்பதோடு எம்மை காத்திடும் ஸ்ரீ துர்க்காதேவியின் அருட்கடாட்சமுமேயாகும்.

அம்மையாரின் சிந்தனையில் உதித்த காலை பஜனை (கோவில் வெளி வீதியை சுற்றி) இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பது சிறப்பு இல்லத்தின் யாப்பின் படி 06 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட தாய், தந்தையரை இழந்த பெண் பிள்ளைகளை அனுமதிக்கின்ற போதும் நாட்டின் அசாதாரண சூழலால் நிர்க்கதியான வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்ட பிள்ளைகள், மகளிர் இல்லத்தையே நம்பி இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் இங்கே வசிக்கின்றனர்.

"இவன் தந்தை எந்நோற்றான் கொல்" என்னும் சொல் என்ற கூற்றின்படி எமது அன்னையின் மறைவிற்கு பின்னர் செஞ்சொற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் (தலைவர் ஐயா) ஐயா அவர்கள் அன்னையினுடைய வழியிலே தானும் பின்தொடர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் மற்றும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கும் தலைமை தாங்கி அம்பாளின் திருவருளால் தெய்வீக பணிகளை யாதொரு குறையுமின்றி மிகவும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.

அம்மையாரின் பணிகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கின்றார் எமது தலைவர் ஐயா அவர்கள். ஆம் புதிய பொலிவுடன் கட்டடங்கள், பிள்ளைகளின் போக்குவரத்து, கல்வி, உயர் கல்வி, இணைபாட விதானம், கணனிக் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் வீடமைப்புத் திட்டம் போன்ற பல வசதிகளை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்.

பொதுவாக ஆதரவற்றோர் இல்லம் எனும் போது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பதைதான் அத்தியாவசிய தேவைகள் என்பது சமூகத்தின் எண்ணமாகும். ஆனால் அவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்கள் சிறந்தவர்களாக சமூகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு கல்விதான் முக்கியம் என்பதை உணர்த்துவது எமது இல்லம் என்பதில் மிகவும் பெருமையடைகின்றேன்.

இல்லப் பிள்ளைகள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (தரம் 1- 5 வரை) தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை மருதனார்மடம் யா / இராமநாதன் கல்லூரியிலும் கல்வி கற்கின்றார்கள். மேலும் கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தேசிய கல்வியற் கல்லூரி, தேசிய உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களான Horrizon Campus, University of West Minster UK Informatics Institute of Technology போன்றவற்றில் Soft Ware Engineering, வர்த்தகம் மற்றும் கலை போன்ற துறைகளில் உயர்கல்வி கற்று பட்டதாரிகள் ஆகியுள்ளனர்.

இப்படி உயர்கல்வி கற்பதற்கு தகுதி பெறுவதற்கு எமது தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்கள் உறுதுணையாக இருந்து நெறிப்படுத்துகின்றார்கள். தற்போது நாட்டில் நிலவும் கொரோனா நோய் தொற்று காரணமாக ZOOM மூலமாக வகுப்புகள் நடைபெற்று வரும் நிலையில் அதற்கான சகல வசதிகளையும் எமது இல்லத்தில் செய்து தருகின்றார்கள். உதாரணமாக உயர்கல்விக்குத் தெரிவாகும் ஒவ்வொரு மாணவிக்கும் உடனடியாக ஒரு மடிக் கணனி வழங்கப்படுகிறது.

பிள்ளைகளில் இதுவரை சுமார் 25 பேர் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததுடன் 18 பேர் பட்டப் படிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் 5 பேர் அனுமதியை எதிர்பார்த்த வண்ணம் உள்ளார்கள். அப்படி இருப்பவர்கள் துர்க்காதேவி ஆலய அலுவகத்திலும் திருமகள் அழுத்தகம் மற்றும் திருமகள் புத்தகசாலை என்பவற்றிலும் கடமையாற்றி வருகின்றார்கள். அத்துடன் எமது சகோதரிகள் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் சித்தி பெற்று உதவி விரிவுரையாளராக கடமையாற்றினார்கள். மேலும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளை கற்பதற்கு எமது இல்லம் பெரிதும் உதவுகின்றது. இல்லத்தின் முதலாவது மென்கணனி பொறியியலாளராக கொழும்பில் உள்ள தனியார் கம்பனியில் இல்லப்பிள்ளை ஒருவர் பணிபுரிகின்றார்.

எம்மைப் பொறுத்தவரை எந்தவொரு பிள்ளையும் எந்த வகையான கல்வியைப் பெற விரும்பனாலும் எமது வேண்டுகோள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் எமது இல்ல அதிபர் என்றைக்குமே அதனை மறுத்ததில்லை. இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும் தலைவர் ஐயாவிற்கும் அதிபருக்கும் நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். பல்கலைகழக கல்வியை முடித்து அரசாங்க உத்தியோகம் பெற்ற ஒரு சில பிள்ளைகள் தொடர்ந்தும் எதிர்கால திட்டமிடலுக்காக இல்லத்திலிருந்தே வேலைக்கு செல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம் பிள்ளைகளின் கல்வியை மேலும் வளப்படுத்தும் நோக்கமாவும் வினைதிறன் உள்ள வகையில் கல்வியைப் பெறவும் மாலைநேர, வார இறுதி பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதற்கு மேலதிகமாக இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன. குறிப்பாக வீணை, வயலின், மிருதங்கம், பண்ணிசை மற்றும் நடனம் போன்றன திறமையான ஆசிரியர்களால் பயிற்று விக்கப்படுகின்றது. பிள்ளைகள் ஆர்வமுடன் கற்று வருவதுடன் அவர்கள் மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்காமல் இருக்க இவை உதவுகின்றது. அத்துடன் தற்கால நவீன உலகின் தேவை கருதி கணனி வகுப்புகளும் இடம் பெற்று வருகின்றது.

மேலதிகமாக இருமாதங்களுக்கு ஒரு தடவை கடைசி வியாழக்கிழமை நடைபெறும் மாணவர் மன்றக் கூட்டத்தில் அம்மாதத்தில் பிறந்த சகல பிள்ளைகளுக்கும் புதிய உடை வழங்கப்பட்டு வாழ்த்தப்படுகின்றார்கள். அத்துடன் மாணவர் மன்றத்தில் பேச்சு, பாடல், நாடகம், பத்திரிகை வாசித்தல், பொது அறிவு போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

எமது இல்லத்தைப் பொறுத்தவரை உணவு விடயத்தில் எந்தவொரு குறையையும் எளிதில் சொல்லி விட முடியாது. ஏனெனில் பிள்ளைகளுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என பார்த்து பார்த்து சமையல் விடயத்தில் அதிகம் அவதானம் செலுத்துகிறார்கள் எமது மேற்பார்வையாளர்கள். ஏன் சில பெற்றோருக்கு கூட தம் பிள்ளைகளுக்கு எது பிடிக்காது என்பது தெரியாது. ஆனால் எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் அவ்வனைவரின் விருப்பையும் வெறுப்பையும் உணர்ந்தவர்கள் எமது மேற்பார்வையாளர்கள்.

எமது இல்லம் பிள்ளைகளின் ஒழுக்கம், உடை விடயத்தில் மிகவும் கண்டிப்புடனும் அவதானத்துடனும் இருப்பார்கள். பிள்ளைகளை எந்தவொரு இடத்திற்கு அழைத்துச் செல்வதென்றால் ஒரு போதும் மறுப்பு தெரிவிக்காமல் தமது களைப்பையும் பார்க்காமல் சேவை செய்கின்றார்கள். பிள்ளைகளுடன் நண்பர்கள் போல் பழகுவது பிள்ளைகளுக்கு மன ஆறுதலை ஏற்படுத்துகின்றது.

பலவகைப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து வந்த பிள்ளைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில் உளவளவாளரின் ஆலோசனையும் வழிகாட்டலும் அமைகின்றது. ஏனைய பிள்ளைகளுடனான பரஸ்பர ஒற்றுமைக்கு வழிகோலுகின்றது. விசேடமாக வைத்தியர்கள் வருகை தந்து எமது பிள்ளைகளின் உடல் நலம் கவனிப்பதுடன் ஒவ்வொரு பிள்ளைகளுக்குமாக தனித்தனி வைத்தியர் குறிப்பு கோவை பேணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இல்ல பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழா மற்றும் திருமண நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக இடம் பெற்று வருகின்றது. சுமார் 15 பேருக்கு மேற்பட்டோர் இவ்வில்லத்தில் இருந்து திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் இல்லப் பிள்ளைகளுக்காக அமைக்கப்பட்ட துர்க்காதேவி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகளைப் பெற்று தமது குடும்பத்துடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 9 வீடுகள் பூர்த்தியடைந்த நிலையில் 7 வீடுகளில் திருமணமான இல்லப் பிள்ளைகள் குடியமர்த்தப்பட்டும் இன்னும் பல வீடுகளை கட்டுவதற்கான முயற்சியும் நடைபெற்று வருகின்றது.

இத்தகைய இல்லத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருபவர்களை நாம் எளிதில் மறந்து விட முடியாது. குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இல்ல வளர்ச்சிக்காக மிகவும் பங்காற்றி வருகின்றார்கள். அவுஸ்திரேலியாவில் இருக்கும் அபயகரம் என்ற அமைப்பு ஆண்டுதோறும் சிறப்பு நிகழ்ச்சியை நடாத்தி பல இலட்சம் ரூபா பணத்தினை அனுப்பி உதவி வருகின்றார்கள்.

வீடமைப்புத்திட்டத்திற்கும் பிள்ளைகளின் உணவு, கல்வி மற்றும் பிள்ளைகளுக்காக மடிக் கணனிகளை அன்பளிப்பு செய்யும் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களுக்கும் எமது இல்லப் பிள்ளைகள் இந்த மண்ணில் தலை சிறந்த பெரியவர்களாக உருவாக வேண்டும் என துர்க்கை அம்பாளை வேண்டுபவர்களுக்கும் இல்ல பிள்ளைகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இல்லம் அரசாங்கத்தின் புதிய யாப்பு விதிகளின் படி இல்ல நிர்வாக விருப்பத்தின் படி 28-05-2018 லிருந்து விடுதிச்சாலையாக மாற்றப்பட்டு துர்க்காபுர மகளிர் இல்லம் (சைவ ஆன்மீக மகளிர் விடுதிச்சாலை) யாக இயங்குகின்றது. எத்தனையோ சிறுவர் இல்லங்கள் தோன்றி இன்று இல்லாமல் போய் விட்டது. அம்பாளின் கருணையால் துர்க்காபுரம் மகளிர் இல்லம் சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றது. அச்சுடர் என்றும் அணையாது இருக்க அம்பாளை பிரார்த்திக்கின்றோம். இல்லத்தின் எழுச்சி கண்டும் இதனை ஏற்றி வைத்த இணையில்லாத தலைமைகளைப் போற்றியும் இரவு பகல் பாராது இதற்காக உழைக்கும் தலைவர் ஐயா, நிர்வாக சபை, அதிபர், மேற்பார்வையாளர்கள், ஊழியர்கள், அனைவருக்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அறப்பணியின் ஊடாக ஆலயங்கள் செய்யவேண்டிய பணிகளில் ஓர் அங்கமாக எழுந்த எம் இல்லத்தை நல்ல முறையில் நிர்வகிப்பதற்காக இல்லப்பிள்ளைகள் என்ற வகையில் நன்றி கூறுவதுடன் இப்பணி தொடர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**செல்வி. தவராசா தர்மினி,**
4 ம் வருடம்,
முகாமைத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசும் எதிர்கால கல்வி செல்நெறிகளும்.

Education is the most powerful weapon which you can use to change the world என்று அறிஞர் நெல்சன் மண்டேலா கூறிய கூற்றின் படி கல்வியானது இவ் உலகத்தின் மாற்றத்திற்கு ஒரு உந்து சக்தியாகும் என்பது எமக்குப் புலனாகின்றது. அந்த வகையில் கல்வி காலத்திற்குக் காலம் மாற்றமடைவதற்கு அந்நாட்டின் அரசியலே காரணமாகின்றது.

அதாவது ஒரு நாட்டில் அரசு மாற்ற மடைகின்ற வேளை கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு காரணிகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒரு நாடானது பொருளாதாரத்திலும் சரி, ஒழுக்கத்திலும் சரி, அரசியலிலும் சரி முன்னேற்றம் அடைவதற்கு கல்வி ஒரு உந்து சக்தியாகவும், அடித்தளமாகவும் இருக்கின்றது.

இவ்வாறாக கல்வி காலத்திற்குக் காலம் அரசியல் செயற்பாடுகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்ப மாற்றம் அடைந்த வண்ணமே உள்ளன. ஆரம்பகாலங்களில் ஏட்டுக்கல்வியாக காணப்பட்ட கல்வி இன்று விழுமியம் கல்வியாகவும், தொழிற் கல்வியாகவும், வாழ்வதற்கான கல்வியாகவும் மாற்றமடைந்து காணப்படுகின்றது. இது ஒரு சிறப்பான செயற்பாடாகும். ஏனெனில் இவ்வியந்திரமயமான 21ம் நூற்றாண்டில் விழுமியம், சுயமாக வாழக் கற்றல், தொழில் போன்றனவே முக்கியமான ஒன்றாக வேண்டப்படுகிறது.

இவ்வகையானவற்றை பாடசாலை மாணவர்களின் கலைத்திட்டதில் இடம் பெறவைப்பது இன்றி அமையாத ஒன்றாகும். எனவேதான் காலத்திற்குக் காலம் அரசியல் தலைவர்கள் மாற்றமடையும் போது கல்வி நடவடிக்கைகளிலும் மாற்றம் ஏற்படுகின்றன. அந்த வகையில் 2019ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்று புதிய ஜனாதிபதியாக கௌரவ கோட்டாபய ராஜபஷ அவர்கள் பதவி ஏற்றத்தை தொடர்ந்து புதிய ஆட்சி நடைமுறைக்கு வந்தது. இதில் கல்வி அமைச்சராக கௌரவ பந்துல குணவர்த்தன அவர்களும் உயர்கல்வி அமைச்சராக கௌரவ டலஸ் அழகப்பெரும அவர்களும் பதவி ஏற்றதைத் தொடர்ந்து இப் புதிய அரசாங்கத்தினால் கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

**இது தொடர்பான சிறிய கண்ணோட்டம்:-**

i தரம் 6-9 (Grade- 6,9) பாடவேலைத் திட்டம். தரம் 9 பாடதிட்டங்களை PDF வடிவில் தரவிறக்கம். உயர் தரப் பரீட்சைமுடிவுகள் வந்தவுடன் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ii வடக்குக்கிழக்குப் பகுதிகளில் 10 மாணவர்களுக்கு இலவச சிங்கள மொழிக் கற்கை நெறித் திட்டம். இதன் மூலம் பெரும்பாலும் தாய்மொழியின் முக்கியத்துவம் அதிகரித்து காணப்படும் இப்பிரதேசங்களில் 2ம் மொழியான சிங்கள மொழியின் முக்கியத்துவத்தை உயர்த்துவதற்கு இது ஒரு சிறந்த ஏற்பாடாக உள்ளது. தேசியகல்வியற்கல்லூரிகளை பல்கலைக்கழக பீடங்களாக மேம்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்.

iii இந்த நடவடிக்கையின் பயனாக இலங்கையின் அனைத்து ஆசிரியர் சபை ஊழியர்களையும் பட்டதாரிகளாக தரம் உயர்த்துவதற்காக தேசிய கல்வியற்கல்லூரிகளை பல்கலைக்கழகப் பீடங்களாக மேம்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

iv ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட **"சுபீட்சதொலைநோக்கு"** என்ற கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட **"ஞானத்தை கொண்ட பிரஜை"** அறிவைக் கொண்ட சமூகம் ஒன்றுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் இக் கல்விக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது இதுவும் ஒரு சிறப்பான நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v மட்டக்களப்பு கல்கலைக்கழகத்தை கைவிடாமல் தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பாக்கி தேசிய வளமாக பயன்படுத்துவது அவசியம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். இது மட்டுமன்றி உயர்தரத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உயர்கல்வி சந்தர்ப்பம் ஏற்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்திற்கு முதன்மை இடம் வழங்குதல் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

இதன் காரணமாக மாணவர்களின் அறிவாற்றல், சிந்தனை போன்றன வளர்க்கப்படும். இத்துடன் தொழில் சந்தையை இலக்கு வைத்து விஞ்ஞான பீடம், ஹோட்டல், பாடசாலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் காரணமாக வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு தொழில் கொடுக்கப்படும். இதன் நிமித்தம் வேலையில்லா பிரச்சினையும், வறுமை நிலையும் நாட்டிலிருந்து சிறிதுசிறிதாக ஒழிக்கப்பட்டு நாடும் முன்னேற்றம் அடையும். இதனை விட வெற்றிடமாக உள்ள நிறுவனங்களை ஆராய்ந்து பட்டதாரிகளை பயிற்சியுடன் இணைத்துக் கொள்வது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார். அதுமட்டுமின்றி பல்கலைக்கழகங்களுக்கு உள்ளெடுக்கும் உள்ளீர்ப்பு 33லிருந்து 83வரை அதிகரிக்க தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது.

அடுத்து நோக்குமிடத்து பல்கலைக்கழக வாய்ப்புகள் கிடைக்காமல் இருக்கும் மாணவர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயர்தரத்தில் சித்தி அடைந்த போதிலும் பல்கலைக்கழக வாய்ப்பை பெறாத மாணவர்களுக்கு தொழில்நுட்பவியல் சார்ந்த பட்டம் ஒன்றை வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கமைய எதிர் வரும் ஜனவரி மாதம் 01ம் திகதி முதல் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சிறப்பான தொரு எதிர்காலத்தைக் கட்டி எழுப்பலாம்.

இவ்வாறாக புதிய அரசியல் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகளை தொகுத்து நோக்கும்போது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற பிரதான மூன்று கருத்தியல்கள் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை தெளிவாக உணரலாம்.

**செல்வி. யோ. வினுஜா,**
கல்வியியல் பிள்ளை நலத்துறை,
3ஆம் வருடம்,
கிழக்கு பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எண்ணங்கள் நல்லனவாக அமையட்டும்

மனித மனம் ஒரு பெரும் காடு அங்கில்லாத ஒன்று மனிதர்கள் அறியும் வகையில் வேறெங்குமில்லை. நன்மையும் தீமையும், பிறப்பும் இறப்பும், பிறப்பித்தலும் கொல்வித்தலும், ஒளியும் இருளும், மற்றும் அனைத்து இருமைகளும் சேர்ந்து இயங்கும் பெரும் களம். சமூகத்தில் அனைத்து இயக்கங்களையும் சமைத்து வழங்கும் பெரும் கூடம். அனைத்தையும் உண்டு உண்டவற்றை செரித்து பின் கழித்து செல்லும் பெரும் தளம். மனித இயக்கங்கள் அனைத்திற்கும் காரணமான மனதில் ஆதார இயக்கங்களான எண்ணங்களும் சிந்தனைகளும் கிட்டதட்ட ஒன்று போல் தோன்றும். ஆனால் முற்றிலும் வேறான அடிப்படை இயங்கு விசையால் உருவாக்கப்பட்டு மனதில் நிலைநிறுத்தபடுபவை தான் எண்ணங்களும் சிந்தனைகளும். எண்ணங்கள் எப்போதும் சிந்தனைகளாக முடியாது. ஆனால் சிந்தனைகள் மனம் அறியாமலே வெறும் எண்ணங்களாக மாறிவிடும் தன்மைகள் உடையவை. எனவே அது என்னவென்று அறியாமலேயே, வெற்று எண்ணங்கள் பொதுவெளியில் சிந்தனைகளாக முன்வைக்கப்படலாம். வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மனிதனின் அடிப்படை இயங்கு விசை எண்ணங்கள். மனதின் விளைவுகள் யாவற்றையும் எண்ணங்கள் என்று கூறலாம் அவை செயல்களாகவே உருவெடுக்கின்றன. செயல்களில் எண்ணங்களால் முயன்று அல்லது புளிப்புடன் செயற்படும் செயல்களும் அன்னிச்சையாக மனிதன் விழிப்புநிலை அறியாமலே நடைபெறுவதையும் அடங்கும் மனிதனால் அறியப்படும் எண்ணங்கள் அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட விளைவுகளால் செய்யும் செயல்களின் பெரும்பகுதி புறமனதின் (Consious) இயக்கங்களால் நடைபெறுகின்றது.

இங்கு விழிப்பு நிலையில் என்று கூறும்போது எண்ணங்கள் உருவான பின் அவற்றைக் குறித்த அறிவு இது அவற்றின் உருவாக்கத்தில் மேலான விழிப்பு நிலை அல்ல செயல்கள் இன்னும் பழக்கப்படும் போது அதன் இயங்கு விசைப் புற மனதில் இருந்து உள்மனதிற்கு (Subconsiuos)மாறுகிறது. மனிதன் இந்தப் பகுதியிலிருந்து பழக்கத்தால் செய்யப்படும் செயல்கள் ஆற்றப்படுகின்றன அவை சாதாரணமாக விழிப்புணர்வுவின் எல்லைக்குள் இருப்பதில்லை பெரும்பாலான மனிதர்களால் எப்போதுமே அறிந்திருக்க முடியாத எண்ணங்கள் ஆழ்மனதில் (Unconshious) இருந்து கொண்டு உடல் இயக்கங்களான சுவாசித்தல், இதயம் துடித்தல் போன்ற இயக்கங்கள் முதல் உடலின் "செல்"கள் மறுஉருவாக்கம் வரையான செயல்களை இயக்குகின்றன. மிக முக்கியமாக விழிப்பு நிலையில் நிகழும் எண்ணங்களுக்கு தோற்றுவாயாக அமைகின்றன.

எண்ணம் போல் வாழ்வு அமையும் என்று சொல்லப்படுகின்றது நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் நல்ல வாழ்க்கை அமையும் என்பது உறுதி. எண்ணங்கள் மனதில் எழுகின்றன மனித வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது மனம்தான். மனதிலே எண்ணங்களுடன் சொல், செயல் என்பதையும் கூட வடிவமைக்கப்படுகின்றன. சொல்லும் செயலும் முதலில் எண்ணமாகத் தோன்றிதான், சொல்லாகவும் செயலாகவும் வெளிப்பாடாகின்றன. கடல் போன்றது மனம். அலைகள் போன்றவை எண்ணங்கள். கடலும் அலையும் ஒன்றுதான் இருவேறு பொருள்கள் அல்ல. அவ்வாறே மனம், எண்ணம் ஆகிய இரண்டும் ஒன்றுதான். ஆயினும் மனதின் இயக்கத்தை எண்ணம் என்னும் சொல் சிறப்பாகச் சுட்டி நிற்கிறது.

மனம் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும், இயங்கிக் கொண்டே இருப்பது தான் மனதின் இயல்பு, தன்மை, பண்பு யாவுமே. அப்படி என்றால் எண்ணங்கள் ஒன்றின் பின் ஒன்றாக தோன்றிய வண்ணம் இருக்கும். எண்ணங்கள் நல்லானவாக அமையலாம் தீயனவாக அமையலாம். எனவே நாம் விழிப்புடன் இருந்து நல்ல எண்ணங்களையே பிறப்பித்தால் நமக்கு உயர்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு, அமைதி உண்டு. மனதை கட்டுப்படுத்தாமல் அதன் போக்கிலேயே அலையவிட்டால் தீய எண்ணங்கள் தோன்ற ஏதுவாகும். விளைவு அழிவு ஆகும். "மனம்போனபோக்கெல்லாம்போகவேண்டாம்" என்று சான்றோர் சொல்லி வைத்தது அதனால்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எண்ணம் எதிர்மறை உணர்ச்சியுடன் இணையும் போது எண்ணமானது பேராசை, கோபம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய ஆறு தீய குணங்களாக உருவெடுக்கின்றன. இவையே எமது உட்பகைவர்கள் நமக்குள் இருந்து நம்மை அழிக்கும் உட்பகை வெளிப் பகையை விட பன்மடங்கு கூடியது. இவற்றை ஆதரித்து வளர்க்க முற்பட்டால் பாம்புக்கு பால் வார்த்த கதையாகிவிடும்.

எண்ணம், அறிவு வயப்படும் போது உடன்பாட்டு நிலை எய்தி, முழுமை பெறும் போது முன்னர் எதிர்மறை உணர்ச்சிகளாகவும் ஆகவும் உட்பகைவர்களாகவும் விளங்கிய ஆசை, கோபம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய ஆறு வகைத் தீயகுணங்களும் முறையே நிறைவான மனம், சகிப்புத்தன்மை (பொறுமை) ஈகை, கற்பு, சமநோக்கு, மன்னிப்பு, அன்பு, கருணை, இரக்கம், பிறர் நலம் பேணுதல் என்னும் நற்குணங்களாக, இயல்புகளாக, மனித விழுமியங்கள் ஆக உருமாற்றம் பெறுகின்றன. எண்ணம் எங்கு வேண்டுமானாலும் செல்லும் ஆற்றல் கொண்டது.

மனோவேகம், மற்றெல்லா வேகங்களையும் விட அதிவேகம் உடையது. மனதில் தோன்றும் எண்ணங்களை தோன்றாமல் செய்யும் வலிமை மனிதரிடம் இல்லை. தோன்றும் எண்ணங்களை சீர் செய்யவும், முறைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் மனிதனுக்கு இயலும். அதற்கான பகுத்தறிவு மனிதனிடம் உண்டு. பகுத்தறிவை மனிதன் பயன்படுத்தத் தவறும் போது தவறான எண்ணங்கள் மனிதனை வழி நடத்த முயலும். ஆகவேதான் மனிதன் எப்போதும் விழிப்போடு இருந்து தவறான கெட்ட எண்ணங்களை விலக்க வேண்டும். தீய எண்ணங்களை தவிர்ப்பதற்குச் சிறந்த வழி நல்ல, நன்மை பயக்கும் எண்ணங்களை மனதில் நிரப்பிக் கொண்டிருப்பதுதான். இம்முறை பயிற்சியிலும் பழக்கத்திலும் வந்துவிட்டால் ஒரு பொல்லாப்பும் இல்லை.

**"எண்ணி எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்" – திருக்குறள்**

ஒன்றைச் செய்ய வேண்டும், சாதிக்க வேண்டும் என்பதில் உறுதியான எண்ணம் உடையவராய் இருப்பவர், அவர்கள் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர் என்பது திண்ணம். எண்ணங்களை அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து, அவற்றை தூய்மை நிலையில் பேணி வருபவன் அறிஞன் எனப்படுகிறான். அவனே மகான், மகாத்மா, ஞானி என்று போற்றப்படுகிறான். எவரும் இந்த உயர்ந்த நிலையை அடையலாம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எண்ணங்கள் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் அவற்றினால் ஏற்படும் விளைவுகள் தமக்கும் பிறர்க்கும் நன்மை பயப்பனவாயும். எவரினதும் உடலுக்குகோ மனதுக்கே உயிருக்கோ உடமைகளுக்கோ துன்பங்களையும் தீங்குகளையும் வருவிக்காதனவாயும் அமைய வேண்டும். எனவே, உயர்ந்த பயன்களை வழங்கும் வகையில் எண்ணத்தைப் பயிற்றுவிப்பது நன்று. பல குறைபாடுகளை போக்கி, மனநலம் பேணி, எண்ணத்தை நல்ல நிலைமையில் தூய்மையாக வைத்திருக்க அப்பயிற்சி துணை செய்கின்றது.

எண்ணத்தின் தரமே மனத்தின் தரம் ஆகும். எண்ணத்தின் உயர்வே வாழ்க்கை தரத்தின் உயர்வாக மிளிர்கின்றது. வாழ்க்கை தரம் உயர் நிலையில் இருக்க வேண்டும் என்றால் எண்ணம் பயன்படுத்தப்பட வேண்டும். அதனை உயர்நிலைக்கு கொண்டு வர வேண்டும். எப்படி இதனை செயல்படுத்தலாம் என்பது அடுத்து எழும் வினா ஆகும். எண்ணத்தை பண்படுத்த எண்ணத்தினாலேயே முடியும். வேறு வெளிக் காரணிகள் உதவமாட்டா, காட்டு விலங்குகளை பிடிக்க விலங்குகளையே பயன்படுத்துவதுபோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியையே எண்ணத்தை பண்படுத்தவும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எண்ணத்தின் தன்மையைப் பயன்படுத்தித்தான் எண்ணத்தை உயர்வு பெறச் செய்ய முடியும்.

எண்ணம் ஆராய்தல் என்பது ஒரு முக்கிய பயிற்சியாக கொள்ளுதல் வேண்டும். "எண்ணத்தை ஆராய வேண்டும் என்றால் எண்ணத்தால் தான் ஆராய முடியும் எண்ணத்திற்கு காவலாக எண்ணத்தையே வைக்கவேண்டும். எண்ணத்திற்கு நீதிபதியாக கூட எண்ணத்தைத்தான் நியமித்தாக வேண்டும். ஏன்னென்றால் (தகுதியான) வேறு ஆள் இல்லை. மேலும் வேறு யாராலும் இக் காரியங்களை முடிக்க முடியாது. காரணம் ஒருவருடைய எண்ணத்தை அறிந்து கொள்ள அவருடைய எண்ணத்தைத் தவிர வேறு யாராலும் முடியாது" என்கிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

எண்ணமானது எந்நேரமும் விழிப்புடன் இருந்து கொண்டு சதா தன்னையே நோக்கியபடி இருக்க வேண்டும். எண்ணம் தன்னையே கண்காணித்து மதிப்பீடு செய்து கொண்டும் சரி, பிழை தீர்மானித்த படியும், சரியானதை ஏற்றுப் பிழையானதை விலக்கிய வண்ணம் தன்னையே சீர் செய்துகொண்டும், திருத்திக் கொண்டும் இருக்க வேண்டும். இதுவே தற்சோதனை எனும் அகத்தாய்வு ஆகும்.

தன்னை ஆராய்தல், தன்னையறிதல், தன்னையுணர்தல், தன்னிறைவு பெறல் நமது தத்துவஞானிகள் கூறிவைத்ததெல்லாம் எண்ணம் ஆராய்தல், தற்சோதனை என்னும் அகத்தாய்வு என்பவற்றையே எனலாம். **"தன்னை அறிந்தவன் தரணி ஆள்வான்"** என்றொரு பழமொழியும் உண்டு. **"திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது"** என்ற பாடல் அடி, திருத்தம் மனிதனின் உள்ளிருந்து வரவேண்டும், அதை வெளியிலிருந்து அழுத்தம் காரணமாக அடைதல் இயலாத காரியம் என்கிறது.

எண்ணத்தை அவ்வப்போது ஆராய்ந்தால் தான் அதன் குறைநிறைகளை அறிந்து, குறைகளைத் திருத்தி, அவ்வாறு திருத்த முடியாவிட்டால், அவற்றை நீக்கி , நிறைகளை மேலும் நிறைகளாக்க முடியும். அப்போதுதான் குணநலப்பேறு வரும். ஒரு தீய எண்ணத்தை, ஒருமுறை மனத்தில் உதிக்க விட்டுவிட்டால் போதும், மறுபடியும் மறுபடியும் தீய எண்ணங்கள் தோன்றாமல் செய்வது அத்துணை எளிது அன்று . அதனால் முன்னெச்சரிக்கையுடன் நாம் இருப்பது நன்று. நல்ல எண்ணங்களே தோன்றக்கூடிய வகையில் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வோம் என்று உள்ளத்தால் உள்ளலும் தீதே என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. **"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"** என்று வள்ளுவர் சொல்வதை உளங்கொள்ள வேண்டும். எல்லா அனர்த்தங்களும் மனிதரில் தோன்றும் தீய எண்ணங்களின் விளைவுகளே என்பதை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். எண்ணங்கள் தோன்றுவது இயற்கையே. எனினும், நல்ல எண்ணங்களுக்கு மாத்திரம் செயல்வடிவம் கொடுத்தல் மனிதனின் கடமையாகும். தீய எண்ணங்கள் தோன்றிய அக்கணமே, அவற்றை விட்டுவிடுதல் மனித தர்மமாகும்.

ஏண்ணத்தை விட்டுவிடுதல் என்பது அத்துணை இலேசான காரியமன்று . விட்டுவிடுதல் என்பது ஒழித்தல் அன்று. எண்ணத்தை அடக்கிப் பாருங்கள். அது மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தபடியே இருக்கும். நினைவை விட்டு அகலாத நிலை ஏற்பட்டு விடும். அப்படியானால் மாற்று வழி யாது? அந்த எண்ணம் பற்றி ஆராய வேண்டும். அதுவே மாற்று வழி குறித்த இந்த எண்ணம் தோன்றக் காரணம் என்ன? இந்த எண்ணம் செயலானால் விளைவு என்னவாக அமையும்? நன்மையா? தீமையா? இந்த எண்ணம் தேவைதானா? அல்லது தேவையாற்றதா? தேவையற்ற எண்ணம் என்ற முடிவிற்கு வந்தால் இனி இந்த எண்ணம் மேலெழாமல் மிகக் கவனமாக இருப்பேன் என்று உங்கள் எண்ணமே சங்கல்பம் ஆக மாறவேண்டும் சங்கல்பம் அழுத்தம் பெறப்பெற திரும்பவும் அந்தத் தேவையற்ற தீய எண்ணம் வலுப்பெறவோ செயல் வடிவம் பெறவோ முடியாது செயலிழந்து விடுகிறது. கால ஓட்டத்தால் அது மறக்கப்பட்டு விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்"**

என்பது வள்ளுவர் வாய்மொழி. தீய எண்ணத்தின் உந்துதல் காரணமாக ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதானால் அதனால் தனக்கும் கெடுதல் பிறருக்கும் கெடுதல் ஏற்படுகின்றது. அதேவேளை நல்லெண்ணத்தின் மேலீட்டினால், செய்யத்தக்க செயல்களை உரிய காலத்தில் செய்யாமல் விடுவதனாலும் பல நன்மைகளை இழக்க நேரிடுகிறது. அதனாலும் கேடுகள் ஏற்படுகின்றன. எனவே, அடுத்த குறளில் வள்ளுவர் பெருமான்,

**"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு"**

என்று கூறுகிறார். செய்யத் தகுந்த, தீமை பயக்காத செயல்களையும் வழிகளையும் நன்கு ஆராய்ந்து துணிந்த பின்பே, அவற்றைச் செய்யத் தொடங்க வேண்டும். ஒரு செயலை முன்யோசனை இன்றிச் செய்துகொண்டும் செய்து முடித்த பின்னரும் அது பற்றி எண்ணிப் பார்க்கலாம் என்பது தவறாகும்.

**"எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும் "**

பாரதியார் நல்ல எண்ணங்களையே பிறப்பிக்க வேண்டும். எண்ணியபடியே அவற்றைச் செய்து முடிக்க வேண்டும். அதற்கு உரமும் உறுதியும் உள்ள நெஞ்சம் வேண்டும். அத்துடன் தெளிவான நல்லறிவும் வேண்டும். இது பாரதியாரின் அறிவுறுத்தல். ஆக்கமும் கேடும் எண்ணங்களினால் வருவதால் எண்ணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து நல்ல எண்ணங்களைக் காத்து ஓம்புதல் கடனாகும்.

"ஓர் எண்ணம் தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ மனத்திற்கோ உடல் உணர்ச்சிக்கோ ஊறு விளைவிக்காமல் இருக்க வேண்டும்" என்கிறார். வேதாத்திரி மாகிஷி. இது ஒரு நல்ல எண்ணத்திற்கான வரைவிலக்கணமாக அமைகின்றது . தீய எண்ணங்களுக்குப் பயப்படுவது அறிவுடைமை.

**"தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்"**

என்கிறார் வள்ளுவப் பெருமான். தமக்குத் துன்பம் தருவோர்க்கும் தொல்லைகள் விளைவிப் போர்க்கும் கூட , தீமையோ கெடுதலோ எண்ணாமலும் அவற்றைச் செய்யாமலும் விடுதல், அறிவுடையார் செயல். அந்த அறிவு, எல்லாவற்றிலும் தலையான அறிவு ஆகும். **"அறிவு அற்றங்காக்கும் கருவி "** என்கிறார் வள்ளுவர். அறிவு, தமக்கோ, பிறர்க்கோ அழிவுவராமல் காக்கும் சாதனம் என்பது பொருள்.

"மனம் அதன் போன போக்கிலே மனத்தைத் எண்ணங்களைப் பிறப்பிக்க விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக்காத்து நல்ல எண்ணங்களைப்பிறப்பிக்கச் செய்வது அறிவு. தான் வளமாகவும் இன்பமாகவும் வாழவேண்டும் என விரும்புபவர், பிறருக்குத் தீங்கு விளைவிப்பதான எண்ணங்கள் முளைகொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**"தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்"** - திருக்குள்

தீய எண்ணங்களைத் தவிர்த்தலும் நல்லெண்ணங்களைத் தோற்றுவித்தலும் தனது நன்மைக்கே என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். சுயநலமாக இருந்தாலும் கூட, அங்கு பொது நலம் தொக்கு நிற்பதால் அச் சுயநலமும் பொது நலமாகி விடுகிறது.

எண்ணத்தின் உயர்வால் தனக்கும் உயர்வு, உலகுக்கும் உயர்வு, எண்ணத்தை ஆராய்ந்து எண்ணத்திற்கு உயர்வளித்து தனக்கும் உலகுக்கும் உயர்வு கிடைக்கச் செய்ய இன்று முதல் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். எண்ணத்தை உயர்வாக்க வேண்டுமானால் முதலில் ஆசையை முறைப்படுத்திச் சீரமைத்து, சினம் தவிர்த்து, கவலையையும் ஒழித்து நான் யார்? என்ற உண்மையை உணர்ந்து, அறிவை எப்போதும் விழிப்பு நிலையிலே இருக்கப் பழக்க வேண்டும்.

**செல்வி. விதுரா ரவீந்திரன்,**
கலைப்பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளினால் அன்பளிப்பு செய்யப்பட்ட Taplet உடன் பிள்ளைகள்

Children with Taplets
Donated by Rishi Thondunathan Suwamikal



## Computer unit









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## During the Covid -19 Lockdown Universities Conducting online Classes and Exams











## Introducing Smart Class Room in Our Home









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணமட்ட, வலயமட்ட, பாடசாலை நிலையறி பரீட்சைகள் August 31st 2021 வரை
Gr-5 – G.C.A/L இணையவழிப்பரீட்சை வகுப்பில் பல பிள்ளைகளாதலால்
வினாத்தாள் இல்லத்தில் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டது.
(During the lock down provincial, zonal and school level exams)






## பிள்ளைகளின் ஓய்வு நேரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்ட
## நவராத்திரி விழாவும் பரிசளிப்பு விழாவும்

**பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**



## நவராத்திரி விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27.02.2022 சுற்றுலாவின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் வழங்கல்

**01. க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றவர்கள்**

**O/L (2018)**

01. செல்வி. மா. தர்சினி - 2A 2B 3C 2S
02. செல்வி. சி. நிலாயினி - 2A 3B C 2S
03. செல்வி. பு. வதனரூபி - A3 C 5S
04. செல்வி. கி. கிருசாந்தினி - A3 C 2S
05. செல்வி. வை. பெமித்தா - A 3C 2S

**O/L (2019)**

01. செல்வி. கி. லோயினி - 3A 2B C 3S
02. செல்வி. ப. திருமகள் - A 4B 2C S

**O/l (2020)**

01. செல்வி. செ. மீனலோயினி - A 2B C 4S
02. செல்வி. பி. திவ்யா - 2A 3B C 2S
03. செல்வி. க. தமிழரசி - A 4C 2S

**02. க.பொ.த. உயர்தர பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றவர்கள்**

**A/L (2019)**

01. செல்வி. ந. நிந்துஜா - 2AB
02. செல்வி. க. மதனப்பிரியா - A2B

**A/L (2020)**

01. செல்வி. ஞா. சாளினி - 2A B
02. செல்வி. ர. டிசானி - 2A B
03. செல்வி. பு. டிலைக்சனா - A 2B
04. செல்வி. நா. ரஞ்சிதமலர் - 2A C
05. செல்வி. க. தயாளினி - A 2B
06. செல்வி. ச. சோபிகா - 3B

**03. பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டோர்.**

**2019**

01. செல்வி. இ. ஜஸ்வர்யா - இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம்.
02. செல்வி. பா. ஸ்ரீப்பிரியா - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
03. செல்வி. ஜெ. தேனிலா - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம்

**2020**

01. செல்வி. ந. நிந்துஜா - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
02. செல்வி. அ. ஜான்சிகா - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம்
03. செல்வி. க. மதனப்பிரியா - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2021**

01. செல்வி. ர. டிசானி - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம்
02. செல்வி. ஞா. சாளினி - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம்
03. செல்வி. ச. சோபிகா - யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம்.
04. செல்வி. செ. றஜிதா - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், சீதுவ.
05. செல்வி. ஜீ. நிவேனிகா - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம். சீதுவ.
06. செல்வி. இ. சங்கவி - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், சீதுவ.
07. செல்வி. க. ஹரிசாளினி - தேசியக் கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## சிறப்புப்பரிசுகள்

**04) மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்த பரிசு - 5000/=**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் முன்னாள் பொதுச் செயலாளரும் தர்மகர்த்தா சபை உறுப்பினருமாகிய அமரர் திருமதி. மலைமகள் இராமநாதன் ஞபாகார்த்தமாக கல்வியில் சாதனை படைக்கும் மாணவிகளுக்கு அமரர் மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்த பணப்பரிசை திருமதி. சந்திராதேவி திருநாவுக்கரசு அவர்களும் நரம்பியல் நிபுணர் திரு. தி. திவாகரன் அவர்களும் வழங்குகின்றனர். இவ் வருடம் க. பொ. த உயர்தர பரீட்சையில் அதி உயர்ந்த பெறுபேறுகள் பெற்ற இருவருக்கு 2500/= வீதம் வழங்கப்படுகின்றது.

02. வழங்குபவர்:- திருமதி. சந்திராதேவி திருநாவுக்கரசு,
நரம்பியல் நிபுணர். திருநாவுக்கரசு திவாகரன்

2019 பெறுபவர் :- 1. செல்வி. ந. நிந்துஜா
2. செல்வி. கா. மதனப்பிரியா

2020 பெறுபவர் :- 1. செல்வி. ஞா. சாளினி
2. செல்வி. ர. டிசானி

02. அமரர்.செல்வி. காமாட்சி கந்தையா, பிரதம மேற்பார்வையாளர் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அவர்களின் ஞாபகார்த்த சிறப்பு பரிசு வழங்கப்படுகின்றது, வழங்குபவர் துர்க்காபுரம் மகளிர் இல்லம். க.பொ.த சாதாரணப் பரீட்சையில் அதி உயர்ந்த பெறுபேறு பெற்றவருக்கு 1000/= வீதம் வழங்கப்படுகின்றது.

2018 பெறுபவர் - செல்வி. மா. தர்சினி
2019 பெறுபவர் :- செல்வி. கி. லோஜினி
2020 பெறுபவர் :- செல்வி. செ. மீனலோஜினி

**05. அமரர் சரஸ்வதி ஆறுமுகம் ஞாபகார்த்தப் பரிசு 5000/=**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் தாயார் ஞாபகார்த்தமாக பல்கலைக்கழக இறுதியாண்டில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூபாய் 5000/= வழங்கப்படுகிறது.

வழங்குபவர் : திரு. ஆறுமுகம் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தி அவர்கள், ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

பெறுபவர் : செல்வி. செல்வதியம்மா பூலோகம்
செல்வி. விதுசாயினி பாலச்சந்திரன்
செல்வி. பிரசா விஜயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. சேவை அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்கள்**

01. திரு. ந. காளிதாசன்

02. திருமதி. பாகீரதி கணேசதுரை

03. செல்வி. க. சந்திரிக்கா

04. திருமதி. தெய்வீகசௌந்தராணி சௌந்தரராஜன்சர்மா

05. திருமதி. புஷ்பலஷ்மி உமாசங்கர்

06. செல்வி. பத்மலோஜினி வேலுப்பிள்ளை

07. செல்வி. தேவராணி சங்கரப்பிள்ளை

**07. பிரத்தியேக பாடபோதனையில் ஈடுபடும் 10வருட சேவைக்கு மேற்பட்ட ஆசிரியர்கள்.**

01. திரு. யோ. பிரதீபன்

02. திரு. S. யோகராஜா

03. திரு. பா. பாலமுரளி

04. திரு. கு. புவிராஜ்

05. திரு. வை. தவராசா

**08. பணியாளர் கௌரவிப்பு**

**அலுவலகப் பணியாளர் கௌரவிப்பு**

01. செல்வி. வைஷ்ணவி சக்திவேல்

02. செல்வி. சிவமனோகரி நாகேந்திரன் (சிவத்தமிழ்ச்செல்வி ஆய்வு நூலக பொறுப்பாளர்)

**09. இல்லப் பணியாளர் கௌரவிப்பு**

01. திருமதி. தவமலர் துரைராஜசிங்கம்

02. செல்வி. பூமலர் முத்தையா

03. திருமதி. இரத்தினமாலா நடேஸ்

**10. அன்னையர் கௌரவிப்பு**

01. செல்வி. மனோன்மணி சின்னத்தம்பி

02. செல்வி. ரம்மெனிக்கா ஜோன்

03. செல்வி. மகேஸ்வரி தம்பிராசா

**11. மேற்பார்வையாளர்கள் கௌரவிப்பு**

01. செல்வி. உஷாதேவி சுப்பையா

02. செல்வி. மோகனாம்பாள் நவநாதன்

03. செல்வி. பவானி பொன்னையா

**12. மேற்பார்வையாளருக்கான விசேட கௌரவிப்பு**

**இல்லத்தில் 25 வருடத்திற்கு மேற்பட்ட சேவையை வழங்கிய இல்ல மேற்பார்வையாளர்கள்.**

01. செல்வி. சுகந்தினி சுப்பையா

02. செல்வி. செல்வராணி பெரியதம்பி

03. திருமதி. சிவாஜினி கருணாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் (சைவ ஆன்மீக விடுதிச்சாலை) 40வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்டுள்ள சிறப்பு மலரில் ஆசிச் செய்திகள் வாழ்த்து செய்திகள் தந்த பெரியோர்கள், மலருக்கு ஆக்கங்கள் தந்த படைப்பாளிகள் மற்றும் எமது இல்லப் பிள்ளைகள், இம் மலர் உருவாக உழைத்தவர்கள், ஆண்டு விழா ஏற்பாட்டு குழுவினர், நிகழ்ச்சிகள் வழங்கியோர் அனைவருக்கும் நன்றிகள்.

இம் மலர் சிறப்பாக அச்சிட உதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தகத்திற்கும் அதன் நிர்வாகத்தினருக்கும் நன்றி. குறிப்பாக ஆக்கங்கள் யாவற்றையும் சேகரித்து சரிபார்த்து ஒழுங்கு படுத்திய எமது இல்லப்பிள்ளை செல்வி. து. சுபாஷினிக்கும் படங்கள் எடுத்து தொகுத்த செல்வி. ஜீ. நிருத்திகா, செல்வி. இ. ஐஸ்வர்யா ஆகியோருக்கும் கணனி பதிப்பு செய்த இல்லப் பிள்ளைகள் செல்வி. செ.றஜிதா, செல்வி. க. ஹரிசாளினிக்கும், அச்சுப் பிழை சரிபார்த்த ஆசிரியர் பார்வதிநாதசிவம் பாலமுரளி அவர்களுக்கும் திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்களுக்கும் இம் மலரை இன்று வெளியிட முழுப்பொறுப்பையும் ஏற்று உதவிய திரு. பரமநாதன் சேயோன் அவர்களுக்கும் மற்றும் அச்சகப் பணியாளர்களுக்கும் குறிப்பிடத்தவறிய யாவருக்கும் மலர்குழு சார்பில் நன்றி.

**மலர்க் குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ. பே. : - 021 224 4510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org